
# தோழர்



# தோழர்

# தோழர்

இதுவொரு நினைவின் பதிவு

முதல் பதிப்பு: மே 2016

அட்டைப்படம்: ஜீவா

நூல் வடிவமைப்பு: அமுதீசன்

பக்கம்


முற்போக்கு வாலிபர் இயக்க தோழர்களும், நண்பர்களும்........................1
மகாலிங்கசிவம் (மாலி).........................................................................2
நா.வை.குகராசா (மணி).........................................................................3
இ.இந்திரராசா .........................................................................................5
சு. தியாகலிங்கம் ....................................................................................6
சு. சிவசம்பு .............................................................................................8
வை. லோகநாதன் .................................................................................. 10
ச. சுப்பிரமணியம் .................................................................................. 11
கா. சிவஞானம் (தேனீ).......................................................................... 13
சார்ல்ஸ் குணநாயகம் ............................................................................ 16
ஜே.எக்ஸ். செல்வநாயகம் ...................................................................... 17
மு.சிவலிங்கம் ....................................................................................... 19
நெடுந்தீவு ஒன்றியம் ஐக்கிய ராச்சியம் ................................................. 20
ந. ஜெயபாலன் ....................................................................................... 21
பேரருட் கலாநிதி டீ. எஸ். தியாகராஜா ................................................. 22
தேடக நண்பர்கள் ................................................................................... 23
ஐ. சண்முகநாதன் .................................................................................. 24
மா. கணபதிப்பிள்ளை ............................................................................ 25
சந்திரசேகரம் ........................................................................................ 26
க.ப. அமிர்தநாதர் ................................................................................... 27
கற்சுறா ................................................................................................. 28
மா. சித்திவிநாயகம் .............................................................................. 29
ரெஜி ..................................................................................................... 31
கோ.பத்மநாதன் ..................................................................................... 32
சி. பரராஜசிங்கம் .................................................................................. 34
கதிரவேலு ............................................................................................ 36
டிலிப்குமார் ........................................................................................... 37
தி. கிரிதரன் .......................................................................................... 40
கா. புவனேந்திரசர்மா (மணி ஐயா).......................................................... 41
க. ரவீந்திரகுமார் .................................................................................. 42
இரா. தர்மரட்ணம் .................................................................................. 43
மு. சாந்தகுமார் ..................................................................................... 44
**Rev. R . John Selvam**.......................................................................... 45
எ. அருந்தவசீலன்.................................................................................. 46

இரா. தர்மலிங்கம் ........ 47
A. T. குமார் ........ 48
நந்தினி சேவியர் ........ 49
எஸ். கே . விக்னேஸ்வரன் ........ 50
க. புண்ணியலிங்கம் ........ 53
சரஸ்வதி ஜேம்ஸ் ........ 54
தர்மா, கோ. கிறிஸ்டி ஆனந்தராஜா ........ 55
வை. கருணைநாதன் ........ 56
ஜோன்சன் கெனடி ........ 57
இரா. வைரவநாதன் ........ 58
அருள்லிங்கம் சுந்தரலிங்கம் ........ 59
சு. விவேகானந்தன் ........ 60
கு. தேவராசன் ........ 61
கிருஷ்ணா, ஆனந்தராசா, இராசேந்திரன், பிரிந்தா ........ 64
மயூரா ........ 65
இரா. ஜெயசீலன் ........ 66
நாகநாதபிள்ளை குடும்பம் ........ 67
மனைவி ........ 69
நாவரசன், கவிதா ........ 70
ராகுலன் ........ 71
தேவா ........ 72
சபாநேசன் ........ 73
விஜிதா ........ 74
நித்திலா ........ 75
கு. இந்திரன் ........ 76
ஜெ . ரிக்சிகா ........ 77
கு. யாழினி ........ 78
மதிவாணன் குடும்பம் ........ 79
ரூபன் ........ 81
நா. மருதையினார் ........ 82
யாதவராயர் குடும்பம் ........ 83
தட்சணா குடும்பம் ........ 84
அம்பலம் குடும்பம் ........ 85
ஜெ . நிரோ ........ 86
நிஷா........ 87

# கண்ணீர் அஞ்சலி

கிழக்கு 15 01 1953



மேற்கு 07 04 2016

அமரர்

## திருமிகு சின்னத்தம்பி சண்முகநாதன் அவர்கள்

சிந்தனை, நோக்கு, செயற்பாடு இணைந்து
சினம் போக்கும் இயல்பான சிரித்தமுகனே சண்முக நாதா !
தீமைகள் அகலவும் தீண்டாமை சாகவும்,
சீரிய எழுத்தினால் மூலவேர் அறுக்க முனைந்தவனே !
எழுத்தென்ன, கதையென்ன, கவிதையின் வனப்பென்ன !
நூல்களின் திறன் காணும், செயற்றிறனின் ஆய்வென்ன !
எதனையும் எடுத்தியம்பும் நிறைவான நுண்ணறிவு.

சித்தம் கலங்கவிட்டு சீக்கிரமாய் சென்று விட்டாய்
கலங்கித்துடிக்குதையா காலனவன் செயல் கண்டு,
குடும்பம், உறவுகளும், உற்ற நன்பர்களும், தோழமைத்
தோழர்களும் ஏங்குகிறார் உன் பிரிவால்.
பிறப்பின் நிறைவு இறப்புத்தான் என்றாலும்,
பிரிவுத்துயர் ஆறிடுமோ, கரைந்திடுமோ மறைந்திடுமோ !
இருக்குமையா உன்நினைவு என்றும்,
எம் நினைவு இருக்கும் வரை....

ஆறாத்துயரில் அஞ்சலிக்கும் முற்போக்கு வாலிப இயக்கத் தோழர்களும் நண்பர்களும்

## மறைந்து. தெரியும் ஒரு மாமனிதன்

இலங்கையின் புதிய அரசியலமைப்பைத் தமிழ் மக்கள் ஏற்கவில்லை என்றும், அதனை நிரூபிக்கும் விதத்தில் தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்து, மீண்டும் தேர்தலில் போட்டியிடுவதாகவும், 1972இல் தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்த தமிழர் கூட்டணித் தலைவர் திரு எஸ்.ஜே.வி.செல்வநாயகம், மூன்று ஆண்டுகளின் பின்னர் 1975இல் நடைபெற்ற இடைத்தேர்தலில் வெற்றிபெற்றபோது, பல இடங்களிலும் அவருக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது. நெடுந்தீவிலும் சந்தைக் கடைக்கு அருகாமை மைதானத்தில், மாலையில் நடைபெற்ற ஒரு பொதுக்கூட்டத்துடன் அந்த வரவேற்பு நிகழ்ந்தது.

அன்றைய தினம் காலையில், அப்போது சேவையிலிருந்த "ராஜேஸ்வரி" படகில், தீவுப்பகுதி எம்.பி. திரு.கா.பொ.இரத்தினத்துடன், திரு.அ.அமிர்தலிங்கம், திருமதி.மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம், திரு.காசிஆனந்தன் உள்பட, பல அரசியல் பிரமுகர்களும் திரு செல்வநாயகத்துடன் வந்தார்கள்.

"துறைமுகத்தில் இறங்கியதுமே நீங்கள் ஓர் ஆச்சரிய விழிப்படைவீர்கள்" என்று படகில் திரு.அமிர்தலிங்கத்திடம் நான் கூறினேன்.

சுவர்கள் - மதில்களில், வீதி மருங்குகளில், "ஒரு செங்கம்பள" வரவேற்பாய், சிவப்பு வண்ண எழுத்துக்களால் நிறைக்கும் அந்த முற்போக்கு சிந்தனை வாசகங்கள், நெடுந்தீவுக்கு வருபவர்கள் எல்லோரையுமே ஒரு கணம் தனித்து ஈர்க்கும், ஆச்சரியத்தில் ஆழ்த்தும், சிந்தனையில் தூண்டும்.

அப்படியிருக்க, ஆளுமைமிக்க அரசியல்வாதியான திரு.அமிர்தலிங்கத்தை அது விழிப்புற வைக்காதா, என்ன?

மாலையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் திரு.அமிர்தலிங்கம் அந்த விழிப்பை, தன்னுடைய சாணக்கியத்துடன் சாதுரியமாகவே வெளிப்படுத்தினார்.

இலங்கையின் இச் சிறு தீவில் ஒளிரும் இச்சிந்தனை வெளிப்பாடு ஒரு தனித்த தன்மைபெற்றது. இங்கு இந்த இடதுசாரி முற்போக்கு சிந்தனையின் இப் பரவலுக்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் ஆசிரியரான திரு மு. கார்த்திகேசு மாஸ்டரையும் மூலமாக சொல்லலாம். இந்துக் கல்லூரியிலும், யாழ்ப்பாணத்தில் அவரின் அரசியல் வகுப்புக்களிலும் கற்றவர்கள் சிலர் நெடுந்தீவில் இப்படி தீவிரம் பெற்றார்கள். திரு.க.கனகரத்தினம், சமசமாஜ கட்சி வேட்பாளராக பாராளுமன்ற தேர்தலில் தீவுப் பகுதியில் போட்டியிட்டார். திரு.நா.செல்வரத்தினம், திரு.சோ.திருஞானசம்பந்தன், திரு.பொ.மகேந்திரராசா, திரு.செ.மகேந்திரன் போன்றவர்கள் சீன சார்பு கம்யூனிஸ்ட் கட்சியுடன் தீவிரம் கொண்டவர்களாகவிருந்தார்கள். இதன் பின்னர், நெடுந்தீவில் இச் சிந்தனையை, அதன் பல்வேறு பரிமாணங்களில் விசாலப்படுத்திய பெரும் பெருமை அமரர் சண்முகநாதனுடையது.

1963இல் நெடுந்தீவில் எனது நிலையான வாழ்வு முடிவுறத் தொடங்கியதன் பின்னாலேயே சண்முகநாதன் தனது நிரந்தர வாழ்வை அங்கு தொடங்கினார். உறவினரெனினும், அவரது "அந்த வட்டத்தின்" ஆ.தருமலிங்கம், சு.தியாகலிங்கம், வை.லோகநாதன், வை.ஜெயநாதன், வை.குகராசா போன்றோருடனான அறிமுகத்தின் பேறான நட்பும், மதிப்புமே பெருநிலைபெற்றிருந்தது. அடக்கமாய் அரும்பும் அந்தச் சிரிப்பே அவரின் பேச்சு மொழியாகவும் பெரிதுமிருந்தது.

ஆக, மறைந்து, தெரியும் ஒரு மாமனிதன்.

அவரது ஆத்மா சாந்தியடைக்
சு. மகாலிங்கசிவம் (மாலி)
லண்டன்
25.04.2016

## நேற்றோர் மலர்வனம் எம்முன் இருந்தது

அறுபத்து ஆறில் அன்றோர் நாளில்
எங்கள் ஊரின் உயர்தரப் பள்ளியில்
நீயும் நானுமாய் (நாமுமாய்) அருகருகாகினோம்.
"சீலா ஆச்சி" வீட்டில் தொடங்கி கோமளம் மச்சாள் வீட்டுடன் இணைந்து
நேற்று முடிந்த கனடாவின் நாள் வரை குறையிலா நட்பின்
உயிர்ப்பொடு நிமிர்ந்தோம்.

முற்போக்கு வாலிப இயக்கத்தின் தோற்றம் முழுமை நோக்கிய சமூகத்தின் மாற்றம்
உழைப்பார் உயர்வின் "உழவர் விழாக்கள்"ஊரின் மாற்றம் உருவாக்கும் பணிகள்'..
நேராய் நிமிரும் நெடும் இளைஞர் கூட்டம்
உந்தன் உறவில் உறைந்தன இணைந்தன.

ஓயாத ஆய்வும்- உண்மை தேடும் தேடலும்.
மாவிலி, மணற்கரை, நூலகம், வீதி, செல்லம்மா வித்தியாசாலை,
பெருக்கடி, குயிந்தா- நாங்கள் ஒன்றாய் கூடிய நாட்கள்.
நானும், நீயும் மருதமும் தேனியும் சைவமும் ஒன்றாய்
படுத்திருந்த நாட்கள், விடியவிடிய தேடிடும் ஆய்வில்-
முடிந்தவை, அடுத்தநாள், ஆய்வில் நினைவுகள் நெருடும்..
நெஞ்சங்கள் கனக்கும்'

ஊரொடு, யாழ்நகர், வவுனியா, வன்னி, கொழும்பு, இந்தியா
கூடியே நின்றோம். கட்சி அரசியல் காத்தார் உறவு
கந்தசாமியார் மணியண்ணர் இணைவு, கார்ல்மாக்ஸ் தத்துவம்-
கற்றாய், இலங்கையின் தமிழர் தேசிய புரட்சிகர தலைமையின்
தத்துவ யதார்த்தங்கள் தந்தாய்- அன்று
சூழல்கள் மாறின - எனினும் மனிதம் நோக்கிய
பயணங்கள் தொடர்ந்தாய்..

நாங்கள் கற்களாய் கிடந்தோம் எங்களுக்கு மெய் கொடுத்தவன் "சைவம்"
உயிர் கொடுத்தவன் "நீ" உயிர் மெய் ஆனோம்..
உன் பெயர் பலருக்கு பெயர் உன் கை கொடுப்பு பலரின் பதவிகளின் இருப்பு
உன் எழுத்துக்கள் பலருக்கு ,அடயாள முத்திரைகள்
அரசியல, அறிவியல் மானிடம், கலைகள் ஆக்கினாய், ஆயினும்
அடையாளம் காட்டா அறிஞனே "அறிவு என்னுடையதல்ல
முன்னோர்களது" என்றாய் நீ, ஞானியா?

"நிலைத்தல்" பற்றிய நினைப்பை துறந்தவன் அதனால் தான்,
அடையாளப்படுத்தாத அடையாளம் நீ பூரணம் தேடிய பூரணனே
நிறைவற்ற நிறைவை தேடியதால் தான்
"ஒன்றிலும் ஒன்றுமில்லை எல்லாவற்றிலும் எல்லாம்
இருக்கிறது." என்றாயா?
தாவரத்தில் வீடுகட்டும் தாவரங்களாய் எத்தனை உறவு உனக்கு
எத்தனை கரங்கள் உனக்கு, மன்னிக்க முடியாததை மன்னிப்பாய்,
"மன்னிக்க முடியா குற்றங்கள் மட்டும் தான் மன்னிப்புக்குரியவை" என்றாய்.
இது மாற்றத்தின் குரலா மனிதத் தத்துவமா? ஏப்படி உன்னிடம்
இவை எல்லாம இவை எல்லாம், நண்பா நீ

வீசிய விதைகள் மன நிலங்களில் துளிர்க்கின்றன:
வளர்கின்றன. விழுதெறிந்து விருட்சங்கள் ஆகும்.

இனி மீண்டும் உன் விதைகள் மண்மீது வீழும்
வீரியம் கொண்டெழும் விதியொன்று செய்வோம், - ஏ
தாய் மண்ணே இமை(தை)யங்களை இழந்து
கல்லறையை சுமப்பதில் தான் உனக்கு கௌரவம் உண்டா?

நா.வை.குகராசா
(மணி)



வட மாகாண சபை உறுப்பினர், வவுனியா மாவட்டம்
இ.இந்திரராசா, B.A, Dip. in Edu,

**வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த தோழர் சண்**

நேற்று இருந்தவர் இன்றில்லை என்பதே இவ் உலகத்தின் நியதி. என் ஆருயிர் நண்பனுக்கு அனுதாபச் செய்தி எழுதவென நினைத்து எழுதுகோலை திறந்தபொழுது கண்கள் பனித்தன ஒரே ஆண்டில் பிறந்து, ஒரே வகுப்பில் ஒன்றாக கற்றவர்கள். சிறுவயதில் இருந்தே சமூக உணர்வும், முற்போக்கு சிந்தனையும் கொண்டவன். எல்லோர் மத்தியிலும் பழகும் பண்பும் மற்றவர்களின் கருத்துக்களையும் அவர்களின் உள்ளத்து சிந்தனைகளையும் ஏற்று அதற்கேற்ப பக்குவத்துடன் பதில் கூறும் பகுத்தறிவுவாதி.

நெடுந்தீவின் முன்னேற்றம் வளர்ச்சி பற்றி சமூக பெறுமானத்துடன் சமூக அசைவியக்கத்திற்காக உயிர்மூச்சு இருக்கும் வரை சிந்தித்தவன். மற்றவர் எப்படி வாழ்கின்றனர் என்பதல்ல முக்கியம் என்வாழ்க்கை எப்படி இருக்கவேண்டும் என்பதை தனிமனிதன் தானே சிந்தித்து ஏற்றுபடுத்திக் கொள்ளவேண்டும் என்பதுதான் சண்முகநாதனின் தனித்துவமான வாழ்க்கை தத்துவம்.

நண்பர்கள் மத்தியில் இவருக்கு தனி மரியாதை உண்டு. ஏனெனில் எவர் மனதும் புண்படாத வண்ணம் கதைக்கும் மனப்பக்குவம் எல்லோரையும் கவர்ந்து இழுத்தது. ஊர் பெருமையும், தேசியப் பற்றும் கொண்டு வாழ்ந்தவர். இறுதி வரையில் ஒரு மாக்சிய வாதியாகவே வாழ்ந்து மடிந்தவர்.

இத்தகு பண்புகளை கொண்ட மாமனிதர் சண்முகநாதன் இன்று எம்மோடு இல்லை. அன்னாரை இழந்து தவிக்கும் ஆருயிர் மனைவி சகோதரி தவம், பிள்ளைகள், உறவினர்கள் மற்றும் நண்பர்கள் யாவருக்கும் எனது ஆத்மார்த்தமான அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா ஆறுதல் பெற்று சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

ஆறாத்துயரில் நண்பன்

இ.இந்திரராசா
வடக்கு மாகாண சபை உறுப்பினர்

*179, உக்குளாங்குளம், வவுனியா*
*தொலைபேசி: 0775461431*
E-mail: rirajahmpc@gmail.com

## எண்ணங்கள் விரியும் எழிலுறும் தீவு

ஓ'. என் உயிர்த் தோழனே, இனிய நண்பனே நெடுந்தீவு மகாவித்தியாலத்தில் நாம் உயர்தர வகுப்பிற் சேருவதற்கு முன்னரான காலப்பகுதியில் நீயும், நானும், சைவரும் மற்றவர்களுமாய் தொடங்கிய சைவ இளைஞர் கழகம் அதன் பரிம வளர்ச்சியினால் முதிர்ச்சியுற்று நெடுந்தீவு முற்போக்கு வாலிபர் இயக்கமாய் உருவெடுத்த காலம் முதல்"'.

1. எம் தீவகத்தில்
2. எமது பொதுவான வேலைத்திட்டங்கள்
3. சாதிய ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டங்கள்
4. கொம்யுனிஸ் கார்த்திகேசு, இயக்கச்சி மணியம், ஏ.யு கந்தசாமி, போன்றோரின் அரசியல் வகுப்புகள்
5. இலங்கை கொம்யூனிஸ்ட் கட்சி (சீனசந்திப்பு) யுடனான தொடர்புகள்.
6. விசுவானந்ததேவனது தொடர்புகள்
7. ஆண்டு தோறும் உழவர் விழாக்கள் மூலமான விழிப்பூட்டலும், முற்போக்கு கலை இலக்கியங்களுக்கு ஊக்கமளித்தலும்
8. வாடைக்காற்று நாவலுக்குத் தீயிட்டமை,
9. களனி முற்போக்கு சஞ்சிகை வெளியீடு
10. அலைகடல் பத்திரிகை ஆரம்பிப்பதற்கான தேடுதல்
11. வன்னி மண்ணிலும் முற்போக்கு நாடக அரங்கேற்றம் என அன்றிலிருந்து இன்றுவரை தொடர் பயணம் செய்தோம்.

நட்புக்கு இலக்கணமான நண்பனே நீ இறுதியாக இரண்டாயிரத்து பதினான்காம் ஆண்டு இலங்கை வந்திருந்தபோது ஒரு சில இரவு பகல் நாம் ஒன்றாயிருந்து எத்தனை எத்தனையோ பேசினோம். ஒரு சில முடிவுகளையும் எடுத்தோம். அடுத்த ஆண்டில் இருந்து மீண்டும் உழவர் விழா எடுப்பதென முடிவு செய்தோம். அது பற்றிச் சந்திரசேகரத்துடனும் ஏற்கனவே கதைத்தோம்.

இன்னும் மூன்று வருடங்களில் ஓய்வூதியம் பெற்றதன் பின் ஊருக்குத் திரும்பி வருவேன் உருப்படியாய் மூன்று நான்கு திட்டங்கள் பற்றி யோசித்து வையுங்கள் என்று சொல்லிப் போனாய்.

"உங்களது சைவத் தமிழ்ச் சடங்குகள் பற்றிய பத்திரிகைச் செய்திகள் எனக்கு அனுப்பி வை கனடாவில் பிரசுரிப்பது பற்றிக் கதைக்கின்றேன்." என்று சொன்னாய்.

இறுதியாகப் பார்வை இழந்தவர் யாரோ ஒருவருக்காக உன் தொலைநோக்குப் பார்வைக்காக கண் தானம் செய்ததன்பின் ஈழத்தில் இருந்து உன் இறுதி ஊர்வலத்தில் பங்கேற்க என்னைக் கனடா அழைப்பதற்காகவா என்னுடனான உனது இறுதிப்புன்முறுவல்,

மனிதருள் மாணிக்க மென்ற
வார்த்தைக்குச் சொந்தக்காரன்.
கனிதரும் சுவையை ஒத்த
கள்ளுண்ட காலமன்று
நனிதரு வாழ்வைப் பேண
நயந்திடு சைவம் என்று
முனிவறச் சொன்னாய் அன்று
முனிவனாய்ப் போனாய் இன்று.
பனிதரும் தேசமெங்கும்
பயணித்தோம் பின்னர் வந்தாய்
இனி நெடுந் தீவுதாண்டா
இலக்கென்று சொல்லிப்போனாய்
எனி வருங் காலமெல்லாம்
உன தெண்ணமே வழி நடாத்தும்

உயிரினும் இனிய
உணர்வுடன் கலந்த
மனிதருள் உயர்ந்த
மானிட வடிவே
புழுதி அளைந்தோம்
பனியில் புதைந்தோம்
எழுதி முடித்தாய்
அழுது வடித்தோம்
அண்டத்தை அலசி
அனுப்பிடு செய்தி
கண்டிப்பாய் அது
காதினில் கலந்திடும்
எண்ணங்கள் விரியும்
எழிலுறும் தீவு

அன்புடன் தோழன்
முருகனும், துணையும்,
மக்கள், சுற்றமும் மற்றும் உள்ளோரும்

உன் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

சு. தியாகலிங்கம்
பெருக்கடிவாசம்
தையலிவளவு
நெடுந்தீவு -10

## மூடியில்லாத முகங்கள் கேட்டேன்...

எனது அன்பிற்கும் மரியாதைக்கும் உரிய தோழனின் அகால மறைவு என்னைப்போன்ற பலரை மிகுந்த சோகத்தில் ஆழ்த்தியிருக்கும் இவ்வேளையில் அவரது ஆன்ம சாந்திக்காகவும் அவரது பெறுமானங்களை நினைவு கூரவும் ஒன்றுகூடியிருக்கும் அன்பர்கள் அனைவருடனும் எனது நினைவுகளைப் பகிர்ந்துகொள்ளும் வாய்ப்பு சிறு ஆறுதலைத் தருமா? என்கின்ற சந்தேகத்தோடு "".

எங்கிருந்தோ வந்து எம்பள்ளியில்'. இடைக்காலத்திற் சேர்ந்துகொண்ட ஒருவன் நாளடைவில் நண்பனாகி நல்ல குணங்களுக்குச் சொந்தக்காரன் என்கின்ற மதிப்பீடுகளின் தருணங்களில் முற்போக்கு வாலிப இயக்கம் என்றும் அது இடதுசாரிக்கொள்கைகளை முன்வைத்து இளைஞர்கள் பால் விழிப்புணர்வை ஏற்படுத்த முற்பட்ட அந்த எழுபதுகளின் ஆரம்பத்தில் நானும் கட்டியிழுத்துச்செல்லப்பட்டு உபதேசிக்கப்பட்டேன். சண்முகநாதன் முன்மொழியப்பட்ட முதல்வனாக ஒன்றுகூடல் ஒருங்கு சேரும். அங்கு பேசப்படுபவை எனது கொள்ளளவிற்கு அப்பாற்பட்டதாக இருந்தாலும் அந்த வாலிபர்கள் என்மீது அழுத்தமான பதிவினை ஏற்படுத்தினார்கள் என்பது உண்மை. பல்கலைக்கழகக் கல்விக்கான வாய்ப்புக் கிட்டி அங்கு நடத்தப்பட்ட பாடங்கள் பலவற்றுள் கார்ல் மாக்ஸ் என்கின்ற சிந்தனையாளனின் பரந்துபட்ட சிந்தனைகள் ஊடுருவிக்கிடந்ததும் அவற்றை இலகுவாக வசப்படுத்திக்கொள்ளவும் எம் மண்ணில் அன்று விதைத்துக்கிடந்தவை முளைத்திறன் கொண்டு என்னுள் செழிக்கத்தொடங்கியது மட்டுமன்றி சிந்திக்கவும் சிந்திப்பதை எடுத்துச்சொல்லவும் எழுதும்போது கனம் சேர்க்கவும் முடிந்தது.

நாளும் புதிய நூல்கள் சண்ணின் மேசைகளிற்கு வந்து சேர்ந்து என்னைப் பயப்படுத்தின. பிற்காலத்தில் அங்கு பார்த்த நூல்களின் பெறுமதிகண்டு அவற்றைத் தேடிப்படித்ததும், அந்தநெறியில் பிரபலம் பெற்றிருந்த கைலாசபதி போன்ற அறிஞர்களின் எழுத்துக்களைப் புரிந்துகொள்ளவும் அவற்றால் என்னை அகலப்படுத்திக்கொள்ளவும் என்பது அந்தத் தொடர்புகளின் நீட்சியே'. ஒத்த வயதினராயினும், சண்.., மதிப்பிற்குரிய குணங்களுடன் மற்றவர்களின் புரிதலுக்குத் தக்க மொழிகொண்டு உரையாடுவதில் தனித்த தகைமையுடையவனாக இடது சாரித்தத்துவ வெளிச்சத்தில் சமூகப்பிரச்சனை, தனிமனித முரண்பாடுகள், குடும்பப்பிணக்குகள் என்பவற்றை நோக்குகின்ற அவனது ஆற்றல் கண்டு வியந்திருப்பேன். நண்பர்களுக்கு அவன் வேண்டும். அதிபர் சின்னத்தம்பியிடம் அரசியற் பாடம் கற்றவனாயினும் பிற்காலத்தில் அவருக்கு, சண்முகநாதனோடு உரையாடவேண்டுமென்கின்ற பெருவிருப்பிருந்ததையும் அந்த ஒன்றுகூடலில் சண் தன்பக்கக் கருத்துக்களைப் பகிர்வதில் மிகுந்த சுதந்திரமாகவே இருந்ததையும் பார்த்திருக்கிறேன்.

ஆம், வரலாற்றின் நீரோட்டத்திலிருந்து காலந்தோறும் பொங்கிவழிகிற சமதர்மம் என்கின்ற பேருணர்வில் அவன் தன்னை முழுமையாகப் புதைத்துக்கொண்டவன். அந்த உணர்வுதான் அவனை அப்படிச் செப்பனிட்டிருக்கின்றது. அதுவரைகாலமும் உலக தத்துவங்கள் உலகம் எப்படிப்பட்டது என்பதை விளக்கமுற்பட்டு வெற்றிகண்டிருக்கின்றன ஆனால் மாக்ஸ் என்கின்ற சிந்தனையாளன் உலகை எப்படி மாற்றியமைக்கலாம் என்பதில் தன் வாழ்நாளினைச் செலவழித்து நிலைபெற்றிருக்கிறான். தனது வாழ்வுக்கான அர்த்தம் என்கின்ற தனது தேடல் தனக்கு மட்டும் உரியதேடல் அல்ல என்பதை சண் எப்போதும் நிருபித்தவன். மாக்சிசம், மாறிவரும் உலகத்தையும் வாழ்வையும் தொடர்ந்து புரிந்துகொள்வதற்கான பேரறிவென்று அவன் தெளிந்துகொண்டு பாதிக்கப்பட்ட மக்களின் விடிவிற்காகத் தன்னளவில் முடிந்தவற்றைச் செய்திருப்பது சம்பந்தப்பட்டவர்களுக்கும் சிலருக்கும் மட்டுமே வெளிச்சம். சமதர்ம தத்துவம்- மாக்சிசம் என்பது புத்தகம் படித்து அறிந்துகொள்கின்ற விடயமல்ல. அதை அதற்குரிய நிறுவனங்களோடு இணைந்தும் புரிந்தும் அதுவழி வாழ்ந்தும் பழக்கப்பட்டவர்களே மாக்சிசர்கள். சண்ணிடம் காணப்பட்ட பல விடயங்கள் அவனை அங்கிருத்தியிருக்கின்றன- ஒரு மாக்சிசனாக மதிக்கச்செய்திருக்கின்றது. அவனது அகவாழ்வைப் புரியும் சந்தர்ப்பம் கிடைத்தவர்கள் அவனது இறப்பைச் சீரணிக்க அவதிப்படுவதை நாம் பார்க்கின்றோம். அவனது


ஆன்மத்தைத் தரிசிக்கின்ற சந்தர்ப்பங்களை நான் ஏற்படுத்திய அந்த நாட்களில் என்னுள் ஒரு சூரிய வெளிச்சமாகவே பிரகாசிப்பவன்.

பூமாலை பொன்னாடை பொழுதுபோக்கரங்குகளில் பொன்மொழிகள் பேசி வாழ்ந்த பேச்சாளன் அல்ல அவன். ஆனால் நண்பர்கள் நாம் சந்திக்கின்ற நேரங்களிலெல்லாம் சண் பற்றிப் பேசாத சந்தர்ப்பங்களே இல்லையென்பேன். எம்முள் ஒரு பேசுபொருளாக, அவன் வாழ்ந்தபோதும் மட்டுமல்லாமல் மறைந்தும் உயிர்ப்புடன் இருப்பான் என்பது எமது உறவு. பிரபஞ்சம் அவன் நினைவுகளை எம்மிடத்திலிருந்து அழியவிடாது என்பது என் எண்ணம்.

நண்பரின் மறைவினால் துயருற்றிருக்கும் அனைத்து உறவுகளுக்கும் என் ஆழ்ந்த அநுதாபங்கள்.

கனத்த இதயத்துடன்

சு.சிவசம்பு, மெல்பேண், அவுஸ்திரேலியா





**உலக விளக்கே உன்னையுமா மரணம் அணைத்தது......**

இனிமேலும் பிறக்கமுடியாது உள்ளடக்கக்கவிஞனாய் ஒருவன்
துறைகளும் தலைப்பும் கட்டுரைகளும் மேடையும் சாராதது ஏது?
ஆத்மிகப்போரிலிருந்து ISIS வரை அருமையாக விளக்குவாய்!
அனைவன் புரிதலுக்கு அவனைப் படித்தே மொழிசெய்வாய்.

மாக்களைப் புரியவேண்டுமா வெளிச்சமிட நீ வேண்டும்.
உண்டிமிருப்பவை விழிகளல்ல திறந்தவெளிப் பல்கலைக்கழகங்கள்,
கலைகள் எத்தனை எத்தனை உன் விரலசைவில் நினை பரப்பும்?
ஆச்சியர் பாடல் முதல் மாக்ஸீஸ விமர்சனம் வரை அதெப்படி?

முன் மூன்று பின் மூன்றாய் தலைமுறை இடையற்ற ஆலோசகத் தோழன்
தேடிவரும் வெறிகள் உன்னைத் தேடிக்களைத்தே திரும்பும்
வழிகாட்டி என்கிறோம் எண்ணற்றோர் நீ காதில் வாங்கியதில்லை.
சிறப்புகளின் இமயம் சுமந்தவனே! எங்கள் மண் என்ற பெருமை

ஊர் என்ற உலைக்குள் சிந்தித்தவனல்ல உலகுக்குரித்தானவன்
உன் வழிநடத்தல் நடத்திய அரிய சாதனைகள் எத்தனை?
உழைப்போர் சபிக்கப்பட்டபோது உன்னை நீ சிலுவையிலறைந்தாய்,
பேதங்கள் தலைகாட்டியபோது புதுவேதங்களால் புரட்டிப் போட்டாய்.

மிடுக்கான அதிகாரிகளே எழுந்து வணங்க அங்குசமானது உன் அறிவடக்கம்.
வாசனையும், சமூகப்பார்வையும் இதுவரை உன்னை வாசித்து முடிக்கவில்லை
உலகத்தலைமை, பிரபலங்களுக்குள் உன்னை வைக்கமுடியாது ஏன்?
உன்போல் யாரும் உலகுக்காகத் தன்னைப் படமிடவில்லை.

எம்முடன் நீ தொடரவேண்டும் என்ற நினைவுகளை
உன் உடல் மறுத்தது போல் மறுக்க எங்கள் இதயங்களுக்கு வலிமையில்லை.

என்றும் நெஞ்சிலிருத்தி நேசிக்கும் தோழர்,
வை.லோகநாதன்

## காலத்தைக் கடந்து தோழர் சின்னத்தம்பி சண்முகநாதனின் நினைவுகள் வாழும்!

எமது பெருமதிப்புக்கும் அன்புக்கும் உரிய தோழர் சின்னத்தம்பி சண்முகநாதன் 2016 சித்திரை 07ஆம் திகதி தமது 63ஆவது வயதில் எம்மைவிட்டுத் திடீரென மறைந்த துயர நிகழ்வு, அவரது குடும்பத்தினரை மட்டுமின்றி, எம்மைப் போன்ற அவரது தோழர்களையும் பெரும் துயரத்தில் ஆழ்த்திவிட்டுள்ளது.

என்னைப் பொறுத்தவரையில் அவரது மறைவு தனிப்பட்ட ரீதியிலும், நான் சார்ந்த பொதுவுடமை இயக்க ரீதியாகவும் பெரும் இழப்பாகும். அவர் மரணித்த கனடிய மண்ணில் வாழ்ந்த 7 வருட காலத்தில் நாம் அடிக்கடி நேரில் சந்தித்து உரையாடுபவர்களாகவும், தொலைபேசியில் உரையாடுபவர்களாகவும் இருந்தோம். மரணமடைவதற்கு சரியாக ஒரு வாரம் முன்புகூட, மார்ச் 29ஆம் திகதி எனது இல்லம் வந்து நாம் வெளியிடும் "வானவில்" பத்திரிகை சம்பந்தமான கலந்துரையாடல் ஒன்றில் சுமார் 4 மணித்தியாலங்கள் வரை கலந்துவிட்டுச் சென்றிருந்தார்.

தோழர் சண் அவர்களுக்கும் எமக்கும் இடையிலான உறவு சுமார் 45 வருட கால வரலாற்றைக் கொண்டது. 1970களில் நெடுந்தீவில் முற்போக்கு வாலிபர் இயக்கம் என்ற அமைப்பு ஆரம்பிக்கப்பட்டு, ஆண்டு தோறும் தைப்பொங்கல் தினத்தன்று அந்த அமைப்பு "உழவர் விழா" என்ற பெயரில் மாபெரும் கலாச்சார நிகழ்வு ஒன்றை நடாத்த ஆரம்பித்த நேரத்தில் அந்த தொடர்பும் உறவும் ஆரம்பமானது. பின்னர் அது பொதுவுடமை இயக்கத் தோழர்களாக எம்மை ஒருங்கிணைத்தது.

தோழர் சண் தமது இளமைக் காலத்திலேயே தனது அறிவுக் கூர்மையை வெளிப்படுத்தி நின்றதுடன், வாழ்க்கை பற்றிய தேடுதலையும் ஆரம்பித்த ஒருவராவார். அவர் 13 பாடசாலைகளில் கல்வி கற்றிருக்கிறார். பதின்ம வயதிலேயே நாவலப்பிட்டியில் தோட்டப்பாடசாலை ஒன்றில் ஆசிரியராகப் பணி புரிந்திருக்கிறார். அதன்பின்னர், அவரது சொந்த ஊரான நெடுந்தீவில் தொண்டர் ஆசிரியராக, பலநோக்குக் கூட்டுறவுச் சங்க ஊழியராக, பொதுவுடமைக் கட்சியின் யாழ் புத்தக நிலைய நிர்வாகியாக, தபால் தந்தி அமைச்சு ஊழியராக, விவசாயியாக என அவர் பல தொழிற்துறைகளுக்கூடாகத் தன் பயணத்தை மேற்கொண்டிருக்கிறார்.

இத்தனை பணிகளுக்கிடையிலும் அவர் தனது பொதுவுடமைக் கட்சிப் பணிகளையும் கைவிடவில்லை. இலங்கை மார்க்சிச - லெனினிச பொதுவுடமைக் கட்சியில் இணைந்த அவர், அதன் வட பிரதேசக் குழுவுக்குத் தெரிவாகி சிறப்பாகச் செயற்பட்டார். 1970களில் தமிழ் மக்களின் தேசிய இனப் பிரச்சினை கூர்மையடைந்த பொழுது, அக்கட்சி 1975இல் உருவாக்கிய "தமிழ் மக்கள் ஜனநாயக முன்னணி" என்ற பரந்த அமைப்பின் முதலாவது பொதுச் செயலாளராகத் தோழர் சண்முகநாதன் தெரிவு செய்யப்பட்டார். அப்பொழுது வெறுமனே 22 வயதே நிரம்பிய தோழர் சண்ணிடம் கட்சி அப்பொறுப்பை ஒப்படைத்ததிலிருந்தே, அவர் எத்தகைய திறமையும், ஆளுமையும் உடையவராக இருந்திருப்பார் என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

தமிழ் மக்கள் ஜனநாயக முன்னணியின் செயலாளராகப் பணி புரிந்த காலத்தில் வடக்கு கிழக்கு மாகாணங்கள் முழுவதும் சுற்றுப்பயணம் செய்து, தமிழ் மக்களின் தேசிய - ஜனநாயக உரிமைகளை வலியுறுத்தி தீவிர பிரச்சாரங்கள் செய்வதில் முன்னின்றார். பின்னர் தமிழ் மக்கள் வாழ்வில் தீவிர மாற்றங்கள் உருவானபோதும், ஜனநாயக முன்னணி முன்வைத்த எக்காலத்துக்கும் பொருத்தமான "தேசிய ஒடுக்குமுறைக்கும் பிரிவினைக்கும்" எதிரான என்ற அரசியல் நிலைப்பாட்டில் இறுதிக்காலம் வரை உறுதியுடன் இருந்தார்.

தோழர் சண் தனக்கென தனிப்பட்ட வாழ்வு வாழாத ஒரு உண்மைப் பொதுவுடமைவாதியாகவே இறுதிவரை வாழ்ந்தார். எப்பொழுதும் பொதுமக்களின், தனது கிராம மக்களின், ஏழை எளிய மக்களின் நல்வாழ்வுக்கு முன்னுரிமை கொடுத்தே செயற்பட்டு வந்தார். தனது வாழ்வுக்கு ஒப்புயர்வற்ற கம்யூனிஸ்ட்டான மு.கார்த்திகேசன் மாஸ்டர் அவர்களின் வாழ்வை முன்னுதாரணமாகக் கொண்டிருந்தார். தோழர் கார்த்திகேசன் மீது கொண்டிருந்த அளவற்ற அன்பால் தனது இரண்டாவது மகளுக்கு

அவரது நினைவாக "கார்த்திகா" என்று பெயரிட்டிருந்தார்.


தோழர் சண்முகநாதனின் நட்பு வட்டாரம் மிகப் பெரியது. தனது கருத்துக்களுடன் வேறுபாடு கொண்டவர்களுடனும் கூட அவர் நட்புடன் இருந்தார். மனித உறவுகளுக்கு சிந்தாந்த முரண்பாடுகளோ அல்லது அரசியல் வேறுபாடுகளோ தடையாக இருக்க முடியாது என்பதில் அவர் மிகவும் தெளிவாக இருந்தார். அதன் காரணமாக அவர் எல்லோருடைய அழைப்பையும் ஏதோ ஒரு வகையில் ஏற்றுச் செயற்படும் ஒருவராக இருந்தார்.

தோழர் சண்ணின் வெற்றிகரமான வாழ்க்கைக்கு காலம் முற்றுப்புள்ளி வைத்துவிட்டாலும், தான் வாழ்ந்த காலத்தை மிகவும் பெறுமதிமிக்க, மக்களுக்குப் பயனுள்ள நிறைவுள்ள வாழ்க்கையாகவே அவர் வாழ்ந்துவிட்டுச் சென்றுள்ளார். தனது இளமைக்காலம் முதல் இறுதி மூச்சுவரை வாசிப்பதில் தீவிர ஈடுபாடு கொண்டிருந்த தோழர் சண், தனது சிந்தனையில் இலட்சோப இலட்சம் சிந்தனைக் கருவூலங்களைக் கொண்டிருந்தார். தான் கற்றவற்றை, "கற்றவை கற்றபின் நிற்க அதற்குத் தக" என்ற வள்ளுவன் வாக்குக்கேற்ப நடைமுறையில் முடியுமானவரை பிரயோகித்து வாழ்வதற்கு முயன்றார்.

தோழர் சண்முகநாதனின் பூதவுடல் எம்மைவிட்டு மறைந்தாலும், அவரது நினைவுகள் அவரது சந்ததியினரதும், தோழர்களினதும் நினைவுகளில் என்றென்றும் அமரத்துவத்துடன் நிலைபெற்று வாழும்.

**தோழர் சண்முகநாதனின் நினைவுகள் என்றென்றும் நீடுழி வாழ்க**

**சண்முகம் சுப்பிரமணியம்**
**தோழர் மணியம்**



## ஒரு அற்புத ஜீவனின் மறைவு

"எழுதி செல்லும் விதியின் கை
எழுதி எழுதி மேற் செல்லும்"

-உமர் காயம்-

என் இனிய நண்பனும், சகோதர உறவு கொண்டவனும், நெடுந்தீவு மண்ணை சார்ந்தவனுமான சி. சண்முகநாதனின் மறைவு என்னையும் என் குடும்பத்தையும் பெரும் துயரத்தில் ஆற்றியது. 50,51 வருட கால நெருக்கமான அன்பில் திழைத்து இருந்த எங்களின் இனிய நல் உறவில் இத்தகைய துர்ப்பாக்கிய நிகழ்வு நேர்ந்து இருக்க வேண்டாம்.

சண்முகநாதன் போன்ற எளிமையான வாழ்வும், முற்போக்கு சிந்தனையும், ஈர நெஞ்சமும், எதனையும் நுணுகி ஆராயும் திறமையும், எழுத்து ஆற்றலும், மற்றவர்களுக்கு உதவும் பரோபகார சிந்தனையும் கொண்ட மனிதர்கள் லட்சத்தில் ஒருவராகவே இருப்பார்கள்.

நெடுந்தீவு மகாவித்தியாலயத்தில் ஒன்றாக கல்வி பயின்ற காலத்தில் இருந்து சகோதர உறவுக்கும் அப்பால் எங்களின் நட்பு உறவு விரிந்தது.

தமிழகத்தில் திராவிட ஆட்சியை அரியணை ஏற்றிய முதல்வர் அறிஞர் அண்ணாதுரை 1969ல் மறைந்த போது மாணவனாக இருந்த சண்முகநாதன் தனது தலைமையில் நெடுந்தீவில் ஒழுங்கு செய்த மாபெரும் அஞ்சலிக் கூட்டம் அவனது பொது வாழ்வின் முதல் படியாகும்.

1970 சி.சண்முகநாதன் மற்றும் சைவம் ஆ.தர்மலிங்கமும் பல தோழர்களுடன் இணைந்து முற்போக்கு வாலிபர் இயக்கத்தை உருவாக்கி சண்முகநாதன் அதன் செயலாளராக செயல்பட்ட காலங்கள் நெடுந்தீவின் சமூக வரலாற்றில் அழிக்க முடியாத பக்கம் ஆகும். ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைகளுக்காக நெடுந்தீவில் முற்போக்கு போரட்டங்களை ஆரம்பித்ததில் தோழர் சண்முகநாதனுக்கு தீர்க்கமான பங்கு உண்டு.

பாட்டாளியின் மகத்துவத்தை உணர்த்தும் முகமாக நெடுந்தீவில் இடம்பெற்ற உழவர் விழாவை ஏற்படுத்தி செயல்படுத்துவதில் சண்முகநாதன் முன்ணணியில் நின்றார். உழைப்பாளர் தினமான மே தினத்தை நெடுந்தீவில் முதன்முதலில் நினைவு கூர்ந்து தொழிலாளர் வர்க்க சிந்தனையை நெடுந்தீவின் மண்ணில் விதைத்த இடது சாரி சிந்தனையாளர்.

சமுதாய அநீதிகளை உடைத்து பொது உடமை சமூகம் இந்த மண்ணில் உருவாக வேண்டும் என்ற மாக்சிய லெனிசிய மாவோவின் கம்யூனிஸ் சிந்தனைகளின் சார்பில் தீவிரமாக உழைத்துள்ளார். நெடுந்தீவில் ஒரு இடது சாரி சிந்தனை மரபினை உருவாக்கிய பெரும் மகானாக சி.சண்முகநாதன் என்றென்றும் நினைவு கூறப்படுவார்.

செங்கை ஆழியன் என்ற புனை பெயர் கொண்ட குணராசா என்பவரால் எழுதப்பட்ட "வாடைக்காற்று" நாவலில் நெடுந்தீவு மக்களை இழிவு படுத்தி எழுதியது குறித்து ஆக்ரோஷம் கொண்டு அந்த நாவலுக்கு எதிராக தனது பெயரில் கொழும்பு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்த போர்க்குணம் கொண்ட மனிதன் சண்முகநாதன்.

தனது மண், தனது மக்கள் குறித்து எங்கு களங்கம் நேர்ந்தாலும் அதனை எதிர்த்து துடைத்து எறிய முற்படும் போர் வீரன் அவன்.

அந்த வாடைக்காற்று நாவலுக்காக எழுத்தாளர் செங்கையாழியனும், வெளியீட்டாளார் வீரகேசரி பத்திரிகை நிறுவனமும் தங்கள் பத்திரிகையின் வார வெளியீட்டின் முதல் பக்கத்தில் பொது மன்னிப்பு கேட்ட பின்னரே சண்முகநாதனின் போராட்டம் நின்றது.

மலை நாட்டில் சில காலம் ஆசிரியராகவும் பின் நெடுந்தீவில் கூட்டுறவு சங்கத்தில் ஊழியராகவும் கொழும்பில் தொலை தொடர்பு துறையில் அலுவலராகவும் நெடுந்தீவில் தொண்டர் ஆசிரியர் ஆகவும் பணி ஆற்றிய அனுபவமும் கொண்டவர் சண்முகநாதன்

தமிழ் மாணவர்களுக்கு எதிராக கொண்டு வரப்பட்ட தரப்படுத்தல் முறைமையினால் பல்கலைக்கழகங்கள் செல்லும் வாய்ப்பை இழந்த சண்முகநாதன் சமூக அரசியல் செயல்பாட்டினை இடையறாது தொடர்ந்து ஆற்றி வந்தார்.

இலங்கையில் குறிப்பாக தமிழ் பிரதேசங்களில் சமூக அடக்குமுறைகளுக்கு எதிரான இயக்கங்களுடனும் பிற சமூக அமைப்புகளுடனும் இணைந்து சண்முகநாதன் மேற்கொண்ட முற்போக்குப் போராட்டங்களினால் அவருக்கும் அவரது குடும்பத்துக்கும் சொல்லொணாத துயரங்கள் சூழ்ந்தன.

ஆனால் இந்த அச்சுறுத்தல்களினால் துவண்டு போகாமல் தனது இலட்சியத்தை இறுதிவரை கொண்டு சென்ற ஒரு இலட்சியவாதியாவான்.

சண்முகநாதனின் முற்போக்கு சிந்தனை கொண்ட ஆக்கங்கள் இலங்கை இந்திய சஞ்சிகையிலும் இடம் பெற்றன. தேவி என்ற தமிழக சஞ்சிகையில் இவர் எழுதிய "வைக்கோல்பற்றையும் நாயும்" என்ற விபரண சித்திரம் வாசகர்களின் பெரும் வரவேற்பை பெற்றது. ஐக்கியத்தின் வலிமையை உணர்த்தும் நோக்கில் சண்முகநாதன் எழுதிய ஆக்கம் இதுவாகும். சிறுகதை ஆக்கத்திலும் ஈடுபாடு கொண்ட சண்முகநாதன் களனி என்ற புரட்சிகர இதழை ஆரம்பித்து இதழியல் வரலாற்றுக்கு அத்திவாரம் இட்ட சிந்தனையாளன் ஆவான்.

முத்திங்கள் இதழாக மார்கஸ் சிந்தனை தாங்கி களனி இதழ் வெளி வந்தது. நிதி நிலைமை காரணமாக 3,4 இதழ்களோடு களனி நின்று போனது துரதிஷ்டமானது ஆகும். பின்னரும் 1978-1979 அளவில் நெடுந்தீவில் அலைகடல் என்ற தலைப்பில் ஒரு சஞ்சிகையை வெளியிடும் எண்ணத்தில் சன்முக நாதனும் நாங்களும் செயல் பட்டு இருந்தோம்.

நோணியோ அச்சின் வடிவத்தில் அச்சஞ்சிகை வெளிக்கொண்டு வரும் நோக்கில் ஒரு நோனியோ இயந்திரத்தையும் வாங்கி வந்து இருந்தோம்.ஆனால் அச்சஞ்சிகை முயற்சி வெறும் கனவாகவே போய் விட்டது.

1974 அளவில் ஜனவேகம் என்ற இடது சாரி சஞ்சிகையில் சண்முகநாதன் எழுதிய இலங்கை இந்திய மீனவர் பற்றிய கட்டுரை இலங்கை இந்திய மீனவர்களின் மீன்பிடி பிரச்சினை தொடர்பான அனைத்து அம்சங்களையும் நுணுக்கமாக ஆராய்ந்து எழுதப்பட்டு இருந்தது. இதனை யாழ் மாவட்ட மீனவர் சங்கங்கள் மற்றும் ராமேஸ்வரம் மீனவர் சங்கங்களாலும் வரவேற்கப்பட்டு இருந்தன.

நெடுந்தீவு முற்போக்கு வாலிபர் இயக்கத்தின் போரட்ட இலட்சியத்தின் தொடர்ச்சியாக நெடுந்தீவில் இளைஞர் முன்னணி போன்ற அமைப்புகள் தொடர்ந்து செயல்பட்டு வந்தன என்பதையும் அவர்களின் செயல் பாடுகளையும் குறிப்பிட்டு கூற வேண்டிய ஒன்றாகும்.

அந்த இளைஞர் முன்னணியின் அமைப்பை சார்ந்தவர்கள் தங்களின் செயல்பாட்டின் முன்னோடியாக சண்முகநாதனையும் முற்போக்கு வாலிபர் இயக்கத்தையும் இன்றும் நினைவு கூறுவார்கள்.

1983 இன கலவரத்தின் பின்னரும் அதனை தொடர்ந்த 1990 யுத்த சூழலின் நிலைமைகளினால் சொந்த மண்ணை துறந்து தமிழகத்தில் தஞ்சம் புகும் நிலைமை ஏற்பட்டது. அதன் பின்னர் ஜேர்மனியில் சில காலம் வாழ்ந்து பின்னர் இலங்கை திரும்பி கனடா சென்ற காலங்கள் ஈழ தமிழர்களை பாதித்தது போல சண்முகநாதனையும் பாதித்த காலங்கள் ஆகும்.

கனடா சென்ற பின்னரும் தான் விட்டு வந்த மண்ணை மறக்காது நெடுந்தீவின் வளர்ச்சிக்கு ஆற்றிய பணி என்றும் நினைவு கூறப்படும். சமூக உயர்வு மிக்க ஒரு செயல் பாட்டு சிந்தனை யாளனை இழந்து நிற்பது மிக பெரும் சோகம் ஆகும்.

சண்முகனாதனோடு பழகிய அவரோடு இணைந்து செயல்பட்ட நண்பர்களுக்கு அன்னாரின் மறைவு ஆறாத ரணைத்தை ஏற்படுத்த வல்லது.

எனது சொந்த சகோதரங்கள் மறைந்த போதெல்லாம் நான் நிர்க்கதியாக நின்ற

தருணங்களில் மலை போல எமக்கு நின்று தென்பும் ஆறுதலும் தந்த பாசம் மிக்க ஒரு சகோதரனின் பிரிவு என் நெஞ்சில் அலை மோதுகின்றது. மரணம் ஒரு திருடனைப்போல ஒரு அற்புத ஜீவனை அழித்து சென்ற சோகம் இலேசில் ஆறப்போவது இல்லை.

அவரின் பிரிவுத்துயரில் வாழும் சொந்தங்கள் சுற்றங்கள் நண்பர்கள் அனைவரோடும் எனது குடும்பத்தோடு நானும் எனது ஆழ்ந்த துயரை பகிர்ந்து கொள்ளுகிறேன்.

அவரின் நினைவுகள் என்றும் எம்முடன் நிலைத்து இருக்கும் என்பதோடு அவரின் ஆத்மா சாந்தி அடைய பிரார்திப்பவர்களோடு எமது குடும்பமும் கலந்து பிரார்த்திக்கிறோம்.

கார்த்திகேசு சிவஞானம் (தேனீ )<br>
தம்பி உடையார் தோட்டம்<br>
நெடுந்தீவு-01<br>
பிரித்தானியா



## எங்களைவிட்டு சென்று விடாதீர்கள்!

சென்றுவிடாதீர்கள் தோழரே எங்களைவிட்டு
சென்று விடாதீர்கள்

அண்ணனாய் தோழனாய் அறிவாசானாய்
எண்ணங்களை ஏற்றி ஒளிகொடுத்தவரே
மண்ணுக்கு ஈரமென மாண்புகளை வளர்த்தவரே - எம்
கண்ணின் வழி நீரை காலமெல்லாம் சொட்டவிட்டு
சென்றுவிடாதீர்கள் தோழரே சென்றுவிடாதீர்கள்

மானிட சேவையின் மகிமைபெறு நாயகனே
தேனிடை கலந்த செவ்வினிய கருத்துணர்வே
பூநிலம் காக்கும் புதுநெறி தத்துவமே
வானிடை பூத்த வளர்ஒளி வெண்நிலவே

கீழ் நிலை மாந்தரின் கீற்று நீ சூரியனே - அவர்
வாழ் நிலை உயர வாழ்ந்த நற் காரியனே

"ஏழ்மையும் வறுமையும் ஏற்றத்தாழ்வுகளும் - நம்
தோழமை கொண்டு உடை" எனும் கொள்கையின் வாழ்வியலே
ஆழுமை மிக்கதோர் அனுபவ மாமணியே
வீழுதல் இல்லை உங்கள் வீரிய வாழ்வதற்கு

ஆதலால்
நன்று உயர் உந்தன் நடைத்தடம் பின்பற்றி - எம்முள்
நின்று துணை செய்து நீங்கள் நிறைந்திடவே

சென்றுவிடாதீர்கள் தோழரே - எங்களைவிட்டு
சென்று விடாதீர்கள்

**-சார்ல்ஸ் குணநாயகம்-**

## ஈடு செய்யப்பட வேண்டிய இழப்பு

எங்கள் நெஞ்சம் எல்லாம் நிறைந்து, உணர்வுகளோடு ஒன்றித்து, எங்கள் பொது வாழ்வின் ஆசானாக நல் வழிகாட்டும் மூத்த சகோதரனாய், பழகுவதில் தோழனாய் ,பண்பான மனிதனாய், மானிட நேசனாய், மனித நேய பண்புகளின் உறை விடமாய், அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைக் குரலாய் என்று பல்வேறு பரிமானங்களைத் தன்னகத்தே கொண்ட ஒரு மனிதம் மறைந்து விட்டது என்ற செய்தி என்னையும், எனது கிராமத்தையும் ஒரு கணம் புரட்டிப் போட்டது. அவரோடு பழகிய அனைவருடனும் நான் இந்த இழப்புச் செய்தியை பரிமாறிய போதெல்லாம் எல்லோரும் எல்லாம் முடிந்துவிட்டது என்ற விரக்தியையும் தாளாத சோகத்தையும் வெளிக்காட்டி நின்றதைத்தான் உணரமுடிந்தது. அவ்வளவு தூரம் எல்லோராலும் ஆத்மார்த்தமாக நேசிக்கப்பட்ட மனிதனாய் அமரர் சின்னத்தம்பி சண்முகநாதன் அவர்கள் வாழ்ந்து சென்றுள்ளார்.

ஆரம்ப காலங்களில் மாக்சிச சிந்தனையில் மிகவும் ஈடுபாடு கொண்டவராக விளங்கிய சண்முகநாதண்ணை நெடுந்தீவில் நிலவிய பல்வேறு சமூக ஒடுக்குமுறைகளிற்கு எதிராக இளைஞர்களை ஒருங்கிணைத்து சமூக நீதிக்காகவும், சமத்துவத்திற்காகவும் போராடக்கூடிய சமூகப் போராளிகளை உருவாக்கி முற்போக்கு சிந்தனையுடைய பொது அமைப்புகள் தோற்றம் பெற அடித்தளமிட்டவர். இறுதிவரை சமூக நீதிக்கான போராட்டக்காரராக வாழ்ந்து சென்றவர் என்றால் மிகையாகாது. இவர் ஆரம்பித்து வைத்த முற்போக்கு சிந்தனைகள் பற்றிப்பரவி நெடுந்தீவில் ஒரு முற்போக்கு சமூகத்திற்கான தோற்றுவாயாக அமைந்தது. இவருடைய தோழர்கள், நண்பர்கள் மட்டுமல்ல இவரின் சிந்தனைகள் தலைமுறை தலைமுறையாக பரிமாறப்பட்டு இன்றுவரை நிலைத்து நிற்பதனைக் காணக்கூடியதாகவுள்ளது. இவரின் பாசறையில் வளந்தவர்கள் இவரின் கருத்துக்களால் ஈர்க்கப்பட்டவர்கள் அனைவரும் சமூகத்திற்கு தலமைதாங்குபவர்களாக, அரச பதவிகள் என பல்வேறு படி நிலைகளில் சேவைகள் புரிந்தாலும் பதவிகளை முன்னிறுத்தாது மனிதநேயத்தை முன்னிறுத்தி சேவை செய்வதை காணக்கூடியதாகவுள்ளது. இது எமது தீவகத்திற்கு பெருமை சேர்க்கின்ற விடயமாகும்.

சமூக சீர்திருத்த சிந்தனைகளோடு நின்றுவிடாது பொருளாதார ரீதியாக ஏழை எளியமக்களின் மேம்பாட்டிற்கான சிந்தனையும், செயற்பாடும் அவரிடம் நிறைந்து காணப்பட்டது. உழவர்கட்கு விழா எடுத்து வருடா வருடம் கொண்டாடியதோடு அல்லாமல் கடற்தொழில் ,கால்நடை வளர்ப்பு மற்றும் பனந்தொழில் செய்யும் குடும்பங்களின் மேம்பாட்டிற்காகவும் பல்வேறு சமூக செயற்பாடுகள் மூலம் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். நெடுந்தீவில் மட்டுமல்லாது யாழ்ப்பாணத்தில் ஏனைய கிராமங்களிலும் உள்ள சமூகமட்ட அமைப்புக்களிலும் இவரின் செயற்பாடுகள் இருந்ததை நான் ஊர்காவற்துறை பிரதேசத்தில் உதவி அரசாங்க அதிபராக இருந்தகால கட்டத்தில் தெரிந்து கொள்ளும் சந்தர்ப்பம் எனக்கு கிடைத்தது. குறிப்பாக காரைநகர், சுழிபுரம், அராலி போன்ற பிரதேசங்களில் உள்ள கிராமிய மட்ட கடல் தொழில் மற்றும் பனந் தொழில் செய்யும் மக்களைக் கொண்ட அமைப்புக்களில் இவர்களின் பெயரும், ஈடுபாடும் பெரும் செல்வாக்கு செலுத்தியுள்ளதனைக் காணக் கூடியதாகவிருந்தது. அடிமட்ட மக்கள் மத்தியில் தனது வேலைத்திட்டத்தினூடாக எவ்வித ஆர்ப்பாட்டமோ ஆடம்பரமோழ இல்லாமல் அமைதியாக தனது கொள்கையில் செயற்பட்டுள்ளார் என்பதற்கு இது நல்ல உதாரணமாகும்.

இவ்வாறாக ஒடுக்கப்பட்ட மக்களின் சமூக நீதிக்காகவும், பொருளாதார மீட்சிக்காகவும்

தன்னை அர்ப்பணித்து வாழ்ந்த ஒரு மாக்சீச போராளியின் இழப்பு நிச்சயமாக ஈடுசெய்யப்படவேண்டியதே. இந்த இழப்பு ஈடுசெய்யப்படவில்லை என்றால் எமது கிராமத்தில் முற்போக்கு சிந்தனையுடைய ஒரு சமூகம் வாழ்ந்ததற்கான அடையாளமே அற்றுப் போய்விடும். சண்முகநாதன் அண்ணனே இதை ஏற்றுக்கொள்ள மாட்டார். அவரின் தோழர்கள், நண்பர்கள், அவரின் சிந்தனையால் வளர்ந்தவர்கள் அனைவருக்கும் இது சவாலான விடயமாகும் இந்த சவாலை எதிர்கொண்டு அவரின் இழப்பை ஈடுசெய்து அவருக்கு உண்மையான அஞ்சலியை செலுத்தி நிற்போம்.

அண்ணணின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரின் துணைவியார், பிள்ளைகள், உறவினர்கள், நண்பர்கள் அனைவருடனும் எனது துயரத்தையும் பகிர்ந்துகொள்கின்றேன்.

ஜே.எக்ஸ். செல்வநாயகம்



**தோழனுக்கு ஒரு மடல் !**

தோழமை மிக்க மைத்துனன்" ஷண் ",
" ஷண் "- இது உன் தோழர்கள்
உனது சிந்தனைக்கு சூட்டிய பெயர்
எனது உறவுப் பூங்காவுக்குள்
நெருக்கமாகப் படர்ந்த பூங்கொடி நீ
சிறுவனாக இருந்த அன்றும்
என்னோடு சேர்ந்து திரிய விரும்பியவன்
இளைஞனான அந்த நாட்களில்
"தோழமைக் கோட்பாட்டின்" சிலிர்ப்பில்
சிறகடித்து எழுந்து பறந்தவன்
அப்பொழுதும் அடிக்கடி என்னிடம் வருவாய்
சிந்தனை வீச்சோடு சிரித்துப் பேசுவாய்
"பகிர்வது" என்பது உனது பசியாக இருந்தது
பழகுவதில் நீ பயில்வாய், பயிற்றுவாய்
உயிருள்ளவை உனது அனுபவங்கள்
பள்ளிக்கொழித்து பயந்து திரிந்ததையும்
பண்ணைக் கடற் பாலத்துக்குப் போனதையும்
களங்கட்டி, வள்ளங்கள் படகுகளைக்
கண்டு களித்ததையும் கவிகள் வடித்ததையும்
ஒர்ந்தோர்ந்து தேர்ந்து உவந்து பயிலும் ஒரு
உலகுள் திரிந்ததையும்
குண்டு குழிகளுக்குள், கூடார முகாம்களுக்குள்
வீழ்ந்து சிதைந்து தொலையாமல் போனதையும்
எனது கோரக்கன்கட்டு வட்டக்குடிலுக்குள்
வந்து "களித்து மகிழ்ந்திருந்து"
கதை கதையாய்ச் சொன்னாயே...
இப்போது எண்ணுகிறேன் .....
இன்று நீ இல்லை' இறக்கவில்லை
ஆனாலும் எங்கோ தொலைதூரம்
நடைப்பயணம் தொடக்கி விட்டாய்
நண்பா, நாளை முதல் "கதையாக"
எங்கும் கலந்திருப்பாய்
தொடர்பறா தோழமைக்குள்
துலங்கும் ஒரு தாரகை நீ
உனது மரணச் செய்தி வருமுன்
கவிதா- உனது அன்பு மகள்
"மாமா, அப்பாவுக்கு கடுமை"
என்ற போது "மாறிவிடும்" என்றேன்
மாறிவிடும் என்பது மரணமாக
மாறிவிட்டதே என்பதும் வருத்தம்தான்
என்றாலும் மரணம் என்பதும் "பயணம்"தான்
என்று என்னை தேற்றிக்கொண்டேன்

தோழமைக்குரிய
முத்தையா சிவலிங்கம்

# Delft Society United Kingdom
## நெடுந்தீவு ஒன்றியம் ஐக்கிய இராச்சியம்

info@delftsociety.co.uk

15/04/2016



இரங்கல் செய்தி

நெடுந்தீவின் முற்போக்கு சிந்தனையாளரும் சமூக சீர்திருத்த வாதியும் சிறந்த கலைஞருமான

உயர் திரு.சின்னத்தம்பி சண்முகநாதன் அவர்களின் பிரிவுத்துயர் கேட்டு கலங்கிநிற்கின்றோம்!

அவருடைய அமைதியான சுபாவமும் அறிவுத்திறனும் அன்பாக பழகும் தன்மையும், புன்முறுவலும் எம் கண்முன்பே தெரிகிறது. அவர் ஓர் எழிமையான சமூக சிந்தனையாளர் பல்கலை வித்தகருமாவார் இளையவர்க் கெல்லாம் முன்னுதாரன புருசராக திகழ்ந்தவர் அன்னாரின் இழப்பு எம் தீவிற்கோர் பேரிழப்பாகும். ஈடு செய்ய முடியாததாகும்.

அன்னாரின் இழப்பால் வாடி நிற்கும் அவரின் மனைவி பிள்ளைகள் உற்றார் உறவினர்கள் அனைவருக்கும் நெடுந்தீவு ஒன்றியம் ஐக்கிய இராச்சியம் சார்பாக எங்கள் ஆழ்ந்த அனுதாபங்களையும் இரங்கலையும் தெரிவித்து கொள்கின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தி அடைவதாக.

நெடுந்தீவு ஒன்றிய நிர்வாக குழு

Reg No 10025200
uknedunttheevu
Website delftsociety.co.uk
54, Amblecote Road, Grove Park,
London. SE12 9TW

தலைவர்
க.புண்ணியமூர்த்தி

செயலாளர்
க.வசந்தன்

பொருளாளர்
த.மாலினி

உ.ப தலைவர்
ச.சாந்தமூர்த்தி

உ.ப செயலாளர்
க.சந்திரவதனி

உ.ப பொருளாளர்
பா.இராகினி

நிர்வாகசபை உறுப்பினர்கள்
அ.சிவானந்தன்
க.ஜெகதீபன்
சி.விமல்
தி.சீறி சேவோன்
ஆ.ஜெயக்குமார்
க.இராசசேகர்
பா.பார்த்திபன்

**இத்தனை திறனும் உன்னிடத்திலா "சண்" தோழா.........?**

வாசனையின் திரவியமே "சண்" தோழர்
அமைதியின் சொரூபம் அன்புக்கு நீ அடிமை

சங்க இலக்கியம் தொட்டுப் பக்தி, நவீனமென
அத்தனை இலக்கியமும் நாநுனியில் விரல்கடையில் அத்துபடி

ஆழ ஊடுருவும் உன் ஆழமிக்க நகைச்சுவை
தெரிந்ததைப் பிறரிடம் பகிர்ந்துகொள்ளும் உயரிய பக்குவம்

ஒட்டை உடசலற்ற ஒப்பீட்டு ஆளுமையுடையவன்
விளங்கும் வகையறிந்து பிறனுக்கு விளக்கும் பேராசான்

மறுபிறப்பில் நம்பிக்கையற்றவர்கள் கூட . . . .
உன் இறப்பறிந்ததும் மீண்டும் நீ வேண்டும் என்றழுதனர்

உயர் இரத்த அழுத்தம் உன் உடலில் . . . . . .
உடனே வைத்தியரிடம் செல் என்றேன் கவனமெடுத்தாயா?

ஊருக்கு வைத்தியன் நீ உன்னளவில் உறுதியற்றிருந்தாய்
ஆஸ்பத்திரி மருந்து கசக்குமென்றா செல்லாதுவிட்டாய்?

இறுதி எழுத்தும் உரையாடலும் இனம் கண்டு செய்தாயா?
என்னிடம் அர்ப்பணித்தாயே சன்னதா் தோழமை தோழமை தான்

ஆற்றலும், அறிவும், ஆளுமையும், அமைதியும் ஒரே கலசத்தில்
உன் சொத்தாய் நான் சுவைக்க முனைந்த போது நீ மறைந்தாய்

ஆற்றல் மிக்க தோழனே் என்னருமை சண்முகநாதனே்
உன்னிடத்தை நிரப்ப, ஈடுசெய்ய இன்னொருவர் வரப்போவதில்லை

உன் ஆத்மார்த்தமான எண்ணங்கள் நிச்சயம் நிறைவுறும்
இன்னுமோர் அக்டோபர் புரட்சி ஈழத்தில் நிகழ்ந்து நிற்க . . . .

வேண்டியே நிற்கிறேன் உன் உயிர்த் தோழன் . . . . . . .

இவ்வண்ணம் அன்புத் தோழர்
நயினை ந.ஜெயபாலன்,
London

Church of South India
JAFFNA DIOCESE

Rt. Rev. Dr Daniel S. Thiagarajah PhD
hop

1983-1985 காலப் பகுதியில் நான் தென் இந்திய திருச்சபை நெடுந்தீவு திருச்சபையில் குருவானவராகப் பணியாற்றியதிலிருந்து அமரர் சின்னத்தம்பி சண்முகநாதனை எனக்கு நன்கு தெரியும்.

நெடுந்தீவு முற்போக்கு வாலிப இயக்கம் என்ற மாக்சிய சிந்தனைகொண்ட இயக்கத்தினூடாக சமூக ஏற்றத்தாழ்வுகளைக் களைவதற்கும், தீண்டாமையை ஒழிப்பதற்கும் முனைப்போடு செயற்பட்டோரில் முக்கி பங்கினை வகித்தவர் அமரர் சண்முகநாதன். கதை மற்றும் நாடகங்களுக்கூடாக முற்போக்குச் சிந்தனையை மக்கள் மத்தியில் செறியப்பண்ணினார்.

திருவாளர் சண்முகநாதன் மற்றவர்களுக்கு உதவிசெய்யும் மனப்பாங்குடையவராய்த் திகழ்ந்தார். அனைவருடனும் இன்முகத்துடனும், சிநேகத்துடனும் பழகும் தன்மையை எவருமே இலகுவில் மறந்துவிட முடியாது.

புலம் பெயர்ந்து வெளிந்டுகளில் தஞ்சம் புகுந்து இருந்த வேளையிலும் தமிழ் மக்களை, குறிப்பாக தீவகம்வாழ் மக்களைக் கரிசனையோடு கண்ணுற்று தன்னாலியன்ற உதவிகளை அடுத்தவரே அறியாதவண்ணம் செய்து பல நெஞ்சங்களைக் குளிரப்பண்ணிய சிறந்த மனிதனாகத் திகழ்ந்தார்.

அன்னார் இறையெய்திய செய்திளைக் கேட்டு மனங்கலங்கியவர்களில் நானும் ஒருவன். ஒருவர் எவ்வளவு காலம் வாழ்ந்தார் என்பதிலும் அவர் எப்படி வாழ்ந்தார் என்பதே முக்கியம். அவ்வகையில் அமரர் சண்முகநாதன் வாழ்வு அனைவருக்கும் வழிகாட்டியாகவும், முன்மாதிரியாவும் இருந்தது. அவரது ஆன்மா நித்திய இளைப்பாறுதலைப் பெறுவதாக எனப் பிரார்த்தித்து, அவருடைய பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கும், அன்பருக்கும் எனது ஆழ்ந்த துயரங்களையும் அனுதாபத்தினையும் பகிர்ந்துகொள்ளுகிறேன்.

பேரருட் கலாநிதி டீ.எஸ். தியாகராஜா
பேராயர், தென் இந்திய திருச்சபை – யாழ்ப்பாண அத்தியட்சாதீனம்

Bishop's House, Vaddukoddai, Sri Lanka. Mob: +94 77 4201713 E-mail: bishopthiagarajah@gmail.com
www.csijaffnadiocese.org , www.holistichealingjdcsi.org

## மேன்மைமிக்க அரசியல் செயற்பாட்டாளர்!!

தோழர் சி. சண்முகநாதன் அவர்களது திடீர் மரணம் அனைவரையும் போன்று தேடக நண்பர்களுக்கும் அதிர்ச்சியான ஒன்றாக அமைந்துவிட்டது. மக்களின் நலன்களுக்காக போராடுபவர்கள் சமூகத்தில் சிறுபான்மையினராக இருந்தாலும், அவர்கள் தோற்றுவிக்கும் அதிர்வு பாரியது. இன்று உலகளாவிய ரீதியில் மக்கள் அனுபவிக்கும் பொது நலத்திட்டங்கள், தொழிலாளர் உரிமைகள், மனித உரிமைகள் என்பனவிற்குப் பின்னால் தோழர் சண் போன்றவர்களினது தொடர்ச்சியான அரசியல் செயற்பாடுகள் காரணமாய் இருந்திருக்கின்றன. ஒடுக்கப்பட்ட மக்களின் மேம்பாட்டுக்காய் உழைப்பது எனும் அளப்பரிய பணியை தனது வாழ் இலட்சியமாய் கொண்டியங்கியவர் தோழர் சண்.

பல்தேசிய நிறுவனங்களினாலும், உலக மயமாக்கலினாலும் சாதாரண மக்களின் வாழ்வு பல்வேறு நெருக்கடிளை எதிர்கொண்டு வருகின்றது. மக்கள் தமது அடிப்படைத் தேவைகளை பூர்த்தியாக்குவதற்காக கடுமையாக, மேலதிகமாக உழைக்கவேண்டிய கட்டாயத்துக்குள் தள்ளப்பட்டுள்ளார்கள். மக்களின் பொதுநலத் திட்டங்களை வெட்டியும் குறைத்தும், அவர்களது அடிப்படை உரிமைகளை நசுக்கியுமென அரசுகள் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன. முதலாளிகளுக்குத் தேவையான அனைத்தையும் மக்களை அடிமைப்படுத்தி அரசுகள் முன்னின்று செய்து வருகின்றன. பயங்கரவாதம், தீவிரவாதம் என்ற போர்வைக்குள் மக்கள் போராட்டங்களை நசுக்கி வருகின்றன.

மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்கு தொடர்ச்சியான மக்கள் ஜனநாயக அரசியல் விழிப்புணர்வுச் செயற்பாடுகள் அவசியம். அதை நன்குணர்ந்து உங்கள் போன்றோரே மக்கள் ஜனநாயக அரசியலை அடுத்து சந்ததியினருக்கு எடுத்துச் சென்றவர்கள். உங்கள் போன்றோர்களது அரசியல் செயற்பாடுகள் எத்துணை பெரியதென இத் தருணத்தில் நினைவில் நிறுத்திக் கொள்கிறோம். அதற்காய் எங்கள் மரியாதையையும் செலுத்திக்கொள்கிறோம்.

தோழர் சி. சண்முகநாதனது வாழ்நாள் செயற்பாடுகள் மானிட மேன்மைக்கானது. மேன்மையான சமூகத்தை நேசிக்கும் ஒவ்வொருவரும் உங்கள் செயற்பாடுகளை மதிப்பதுடன், உங்களை என்றென்றும் நினைவில் நிறுத்திக்கொள்வார்கள்.

தோழமையுடன்,

தேடக நண்பர்கள்.

தேடகம்

தமிழர் வகைதுறைவள நிலையம்

ரொரன்டோ

**எல்லோரும் எல்லாமும் பெறவேண்டும்**

என்ற சமத்துவக் கொள்கை வீரன். மனிதநேயப் பண்புகளை தன்னகத்தே கொண்டவர். மனிதக் கோட்பாடுகள் பற்றிய கட்டுரைகள் என்றும் அவரின் புகழை சொல்லிக் கொண்டேயிருக்கும். தாயக மண்ணில் தாய் தந்தையோடு மிகவும் அன்பாக வாழ்ந்த காலப்பகுதி. சிறந்த சில நண்பர்களோடு சமத்துவக் கோட்பாட்டுடன் கூடிய அரசியற் பணிகளை முன்னின்று செயலாற்றியவர்.

ஒவ்வொரு ஆண்டும் "உழவர் விழா" வை நெடுந்தீவு மகாவித்தியாலய கலையரங்கில் பல்சுவை படைப்புக்களோடு நிறைவேற்றிய காலம். எத்தனை கஸ்ரங்கள், துன்பங்கள், துயரங்கள் இருந்தாலும் அதையும் தாண்டி எழுத்தையும், அறிவையும் வளர்த்துக் கொண்டு அதை மற்றவர்களுக்கும் போதித்த பெரும் பொது மகனாக பார்க்கிறேன். தம்பி குகதாசன் அவர்கள் சாவைத் தழுவியபோதும் தன் கவலைகளை நெஞ்சில் பூட்டி தன் குடும்பங்களுக்கும் மற்றும் எல்லோருக்கும் ஆறுதல் கூறியவர். தன் இனிய செல்லமான மகளை தமிழகத்தில் பிரிந்த போது நொந்து நூலாகி தன் குடும்பத்தை கவலை என்னும் நோயில் இருந்து மீட்டாலும் அவர் உயிர் பிரியும் வரை மகளின் பெயரை நிச்சயமாக உச்சரித்திருப்பார். அப்படி மிகவும் பாசப்பிணைப்போடு வாழ்ந்தவர். தன் பிள்ளைகளையும் தன் இனிய இல்லாளையும், தன்னுடைய உடன் பிறவாத அனைவரையும் அன்பாக நேசித்தவர்.

எல்லாவற்றிற்கும் ஒரு அழகிய சிரிப்பு, அமைதி, மௌனம், அன்பு, பாசம் என்ற மனித பண்புகளை நான் கண்டு வியந்தேன். அறிவு, புத்திக் கூர்மை, தன்னடக்கம், அறிவுடையோரை மதிப்பது, மொழியை, பண்பாட்டை, இனத்தை போற்றுவதும் மதிப்பதும் அவரின் ஆழப்பதிந்த சிந்தனைகளில் ஒன்று. பல நூற்றுக்கணக்கான அறிவுடைய நூல்களை கற்கவும், அதை மற்றவர்களுக்காக கவிதையாக, கட்டுரைகளாக, நாடகங்களாக எழுதுவதும் அவர் எம் இனத்திற்காக ஆற்றிய பெரும் பணிகள். புலம்பெயர்ந்து வந்தும் "தாய்வீடு" மாத இதழ், "உதயன்" வார இதழ், மேடைப் பேச்சுகள் போன்றவற்றில் தந்த ஆக்கங்கள் என்றும் சிறந்த ஒரு அறிஞராகப் பார்த்தேன். அவரின் படைப்புக்களை இந்த பத்திரிகை நிறுவனங்கள் புத்தகமாக வெளியிட வேண்டுமென்பதே எம் போன்ற பலருக்கும் விருப்பமாகும்.

இப்படிபட்ட நல்லதொரு மகா அறிவாளியை இழந்து தவிக்கும் எங்கள் அண்ணி, பிள்ளைகளுக்கும் எங்கள் குடும்பம் சார்ந்த கண்ணீரை காணிக்கையாக்குகின்றோம். என்றும் அவரின் ஆத்மா சாந்தி அடைய எல்லோருக்கும் பொதுவான அந்த இறைவனை வேண்டுகின்றேன்.

ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி

ஐ. சண்முகநாதன் (ஆசிரியர்)
ரொரன்ரோ கத்தோலிக்க கல்விச்சபை
கனடா

Mr. M. Kanapathipillai, MA, SLEAS
Rtd. Deputy Principal, Royal College, Colombo – 07
Chairman, Palmyrah Development Board, 244, Galle Rd, Colombo -04
No. 24/3 1/1, Frank Furd Place, Colombo -04
Tel: 011-2594204, 0773-449678
E-mail: kanapathipillai19@hotmail.com

## சிறியன சிந்தியாத...சண்...

சண்முகநாதனை 1972 ல் தான் முதன் முதல் சந்தித்தேன். அந்தநாள் முதல் நட்புரிமையுடன் பழகியவன். 1972ச் சூழலில் நெடுந்தீவின் மோசமான நிலைகண்டு பொங்கியது அவன் உள்ளம். பிறர் ஈன நிலை கண்டு பொங்கும் உள்ளம் அவனுக்கேயுரியது அதனால் நெடுந்தீவு முற்போக்கு வாலிப இயக்கத்தை அங்கு தோற்றுவித்தான். ஆண்டு தோறும் மகாநாடுகள் நடத்தி கண்டிக்க வேண்டியவற்றை நேராகவே கண்டித்து சமூக நன்நடத்தைக் கோலங்களை சீர் செய்தவன்.

சிறியன சிந்தியாத இயல்பு, உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளி எண்ணியத்தை எண்ணியாங்கு முடிக்கும் திண்ணிய ஆற்றல் அவனுக்கு இருந்தது. அவன் சார்ந்திருந்த அரசியல் அவனைப்புடம் போட்டுச் சீர் செய்தது. தான் கொண்டிருந்த தத்துவத்துக்கு மாறாக எந்த வேலையையும் செய்யாத மாமனிதன் அவன்.

மண்ணில் பிறந்தோம், வாழ்ந்தோம், மடிந்தோம் என்ற வரையறைக்குள் அவன் வாழ்வை அடக்கி விட முடியாது. மிகுந்த அறிவு படைத்தவன். அரசியல் சித்தாந்தத்தில் அக்கறை காட்டாது படித்திருந்தால் இன்று ஒரு பேராசிரியராக விளங்கும் திறன் படைத்தவன்.

நட்பை வாஞ்சையுடன் கொண்டாடும் இயல்பு அவனுக்குரியது. அகநக நட்பும், நட்புடன் பழகும் அவனின் இழப்பு பேரிழப்பாகும். பிழையை பிழையாகக் கண்டிக்கும் இயல"பு அவனுக்கேயுரியது. எந்தவொரு காரியத்தையும் விமர்சனக் கண்ணோட்டத்தோடு பார்த்து முறையாக வழி நடத்தும் இயல்பு அவனுக்கிருந்தது.

கோரயுத்தம் எத்தனை கொடூரங்கள் செய்தது. அவனையும் புலம்பெயர வைத்தது. கனடா வரை சென்று கண்காணாத இடத்தில் நீ காலமானாய் என்ற செய்தி நெஞ்சுக்குக் கனத்தது. உன்னோடு சுற்றித்திரிந்த ஐயர்வீட்டுச் சந்தியில் இருந்து மாவலித் துறைமுகம் வரை அந்த நெடுஞ்சாலைப் பிரயாணங்களில் உன் அறிவார்ந்த ஆலோசனைகள், பண்பட்ட உரையாடல்கள், சொல்லும் வார்த்தைக்குப் பஞ்சம் ஏற்படுகின்றது.

உன்னால் ஒரு ஈ எறும்பு கூட துன்புறுத்தப்பட்டு இருக்கமாட்டாது. உன்னைப் புரிந்து கொண்டவர்கள் மிகச் சிலரே.

நீ காலமாகிவிட்டாய், காலத்திற்கு ஒரு பாடமாகிவிட்டாய். உன் ஆத்மா நித்தியத்தில் இளைப்பாற இறையாசியை வேண்டுகின்றேன்.

என்றும் அன்புடன்
மா. கணபதிப்பிள்ளை

**சண்முகநாதன்....**

சாவதற்கு முன்னால் நான்
ஒரு முறையேனும்
சத்தியத்தோடு அணிவகுத்துச்
செல்ல விரும்புகிறேன் - இது
மார்க்சிம் கார்க்கி சொன்னது.
இவனோ சாகும் வரையும்
சத்தியத்துடன்
அணிவகுத்துச் சென்றான்

ஜனநாயகம், புதிய ஜனநாயகம்
சோசலிசம், கம்யூனிச மென
பல்வேறு மாந்தர்கள்
உயிரிழந்தார்கள்

கம்யூனிசம் ஒரு வாழ்க்கை நெறி
என்பதை - இவன்
வாழ்ந்தே காட்டினான்

தோழன்
சந்திரசேகரம்

## இரங்கல் உரை

ஆழ்கடலின் மத்தியிலே அழகான நெடுந்தீவினிலே சின்னத்தம்பி தம்பதியினருக்கு சமூக சேவகனாய் பிறந்திட்ட சண்முகநாதனே சிறியவனாய் இருந்தபோது சிந்திக்க தொடங்கிய நீ பெரியவனாய் ஆனதும் சமூக சேவையென ஆரம்பித்தாய் உன் குடும்பம் வறுமையாய் இருப்பினும் உன் சேவை சமூக சேவையாக இருந்தது. அன்புக்கு நீ அடிமையாகினாய் அமைதியின் சிகரமானாய் அண்ணனுக்கு தம்பியாக நண்பனுக்கு நல்ல நன்பனாக அனைவருக்கும் உதவி புரியும் சேவையாளனாக சேவை செய்தாய் எம் பிரதேசத்தின் முன்னேற்றத்திற்காய் இன மதம் பாராது அனைவருடனும் சேர்ந்து இரவு பகல் பாரதது ஊதியம் எதுவுமின்றி சேவை செய்தவர் அமரர் சின்னத்தம்பி சண்முகநாதன்.

புலம் பெயர் நாட்டிற்கு சென்றிருந்தாலும், தான் பிறந்த மண்ணையும், அன்பு செய்த மக்களையும் மறவாமல் பல தடவை தாய்நாடு வந்து மீண்டும் மீண்டும் சமூக சேவைகள் செய்து வறிய மக்களின் நன்மதிப்பையும் பெற்று வந்தவர் அமரர் சண்முகநாதன் அவர்கள்.

இவர் தீவக மக்களிடம் காட்டிய பாரபட்சமற்ற அன்பும் இம் மண்ணின் மேல் இவர் வைத்த அளவு கடந்த பற்றும் இவரின் தன்னலமற்ற சேவையும் நறுமணம் வீசும் மலர்களின் வாசனைகளாக மக்களின் மனங்களில் இன்றும் நறுமணம் வீசிக்கொண்டிருக்கின்றன.

அமரர் சண்முகநாதனின் பிரிவு இவர் குடும்பத்தினர் உறவுகள் மட்டுமல்ல நெடுந்தீவு வாழ் அனைத்து மக்களிற்கும் ஓர் பேரிழப்பாக உள்ளது. இவரது பிரிவால் துயருறும் மனைவி பிள்ளைகள் உறவுகளுக்கும் எனது ஆழ்ந்த அனுதாபத்தினைத் தெரிவித்துக் கொண்டு அவரின் ஆன்மா இறைவனடி சாந்தியடைய இறைவனை பிரார்த்து வேண்டுகின்றேன்.

க.ப.அமிர்தநாதர்
முன்னாள் தலைவர்
கடற்தொழிலாளர்

**நாம் அறிந்த கதைகளின் கதாபாத்திரம்**

எல்லாச் சந்திப்புக்களிலும் இரண்டு கைகளையும் ஆரத் தழுவி ஒரு சிறிய புன்சிரிப்பை உதிர்த்துவிட்டு நகர்ந்து கொண்டிருந்த அந்தச் சிறிய முகத்திற்குள் அடங்கிப் போய்க் கிடந்தவை பெருங்கனவுகளும் பெருங்கதைகளும் என்பதனை அறிந்த காலந்தொட்டு அவரைப் பின் தொடர்ந்தேன். ஒருகாலத்தின் கதைகளை சலிப்போடு ஞாபகப்படுத்திய போதெல்லாம் நாம் அறிந்த பல கதைகளில் ஒரு கதாபாத்திரமாக அவர் இருந்திருக்கிறார் என்பதனை அறிந்து கொண்ட போது ஆச்சரியம் எற்பட்டது.

நானும் நண்பன் கிருபாவும் அவரிடம் இருந்து அத்தனை கதைகளையும் கேட்டுப் பதிவு செய்வதற்கு தயாராகிக் கொண்டிருந்தோம். ஒவ்வொரு தடவையும் தயங்கித் தயங்கி மறுத்த அவர் ஒரு இடத்தில் அதற்கு சம்மதித்திருந்தார். அவருக்கான கம்பியூட்டர் ஒன்றையும் நானும் கிருபாவும் வாங்கி ஒழுங்கு செய்திருந்தோம். நம் எல்லோரிலும் நம்பிக்கையற்றிருந்த அவர் நமது கரைச்சலுக்காக சம்மதித்தாரோ என்றுகூட அப்போது எண்ணியிருந்தோம். ஆனாலும் அவருடைய அமைதியான நகர்வு அதுவென்றே உணர்ந்து பொறுமையாக இருந்தோம்.

ஆனால் அத்தனை கதைகளையெல்லாம் அவரது மரணச்சடங்கில் மற்றவர்கள் சொல்லவேண்டிய ஒரு சந்தர்ப்பத்தை காலம் விரைவாய் நமக்குத் தந்துவிடும் என ஒருபோதும் எண்ணியதேயில்லை.

இரண்டு கைகளையும் ஆரத் தழுவி அவரது பிள்ளைகளிடமிருந்து விடைபெறும் போது ஒருகாலத்தின் கதை பெட்டியின் உள்ளே கையைக்கட்டி உறங்கிப் போய்க் கிடந்தது.

கற்சுறா

## முற்போக்குச் சிந்தையாளர் தோழர் சி.சண்முகநாதன்

நெடுந்தீவு தந்த தன்னிகரில்லா முற்போக்குச் சிந்தையாளர் தோழர் சி. சண்முகநாதன் அவர்களை கனடாவில் சடுதியாக இழந்து விட்டோம். "மக்களே தெய்வங்கள் எனில் மலரும் புதுமை யுகம்" என்ற தாரக மந்திரத்தோடு எழுந்த நவயுகத்தின் சிந்தனைச் சிற்பியை நாங்கள் தொலைத்து நிற்கின்றோம். தன் இளவயது முதல் சக மனிதர்களின் நலனுக்காய் குரல்கொடுத்து மக்களை மலினப்படுத்தும் அனைத்து அடக்கு முறைகளுக்கும் எதிராகப் போராடிவந்த கம்யூனிசச் சிந்தாந்தவாதிகளுள் முதன்மையானவர் இவர். சாதியத்தின் கொடூர அடக்குமுறைக்கு ஆட்பட்டிருந்த குடாநாட்டுத் தமிழர்களின் வாழ்வில் தீண்டாமை ஒழிப்பு, பெண்ணுரிமை போன்றவற்றின் முக்கியத்துவங்களைத் தொடர்ந்து பேசியவர். துண்டுப்பிரசுரங்களை வெளியிட்டவர். அதற்காகத் தன் வாழ்நாளை அர்ப்பணித்துப் போராடியவர். "ஆழியும் கழனியும் ஆன எம்நாட்டை அந்நியக் கொள்ளையர் அடித்துச் செல்லவோ? நாழிகை கடந்து நாட்கள் கழியமுன் நாங்கள் திரண்டிதைத் தடுத்திட வேண்டும்" என்கின்ற வேட்கையோடு 1973 களில் விரிந்த களனி காலாண்டுச் சஞ்சிகையின் முதுகெலும்பாய் நின்று உழைத்தவர். மார்க்சிய வழியில் கலை, இலக்கிய அறிவைச் செப்பனிட எழுந்த காலத்தால் அழியாத தமிழ்ச் சஞ்சிகை அது.

"நூறு சிந்தனை மலரட்டும் நாறும் கீழ்மைகள் தகரட்டும்" என மானிட நேயத்தை மதித்துப் போற்றிய அவரின் பேச்சும் எழுத்தும், கண்டு அதிகார வர்க்கம் பெரும் ஆத்திரம் கொண்டது. சாதாரண பிரஜைகளுக்குள் ஏற்படும் சிறிய பிணக்குகளை பெரிதாக்கி அவர்களின் பிரச்சினைகளுக்குத் தூபமிட்டு வளர்த்து அதிலே இலாபம் தேடும் முதலாளித்துவ சாதியவாதிகளின் கொடும் செயலை மையமாகவைத்து அவர் எழுதிய "அடம்பன் கொடியும்" சாதியின் பெயரால் நடந்த, நடக்கின்ற அனைத்து அநியாயங்களையும் வெளிக்கொணர்ந்தது. மனிதநேயத்தை வளர்க்கத் துடித்த அவரின் செயற்பாடுகளை மாற்றாளர்கள் பலரும் எதிர்த்து பல இடர்களை கொடுத்தார்கள். அதற்கெல்லாம் அஞ்சி ஒடுங்காது அவற்றை எல்லாம் வெற்றிகரமாக முகம் கொடுத்த கம்யூனிசப் புரட்சியாளனை இன்று இழந்துள்ளோம். அன்பின் உருவமாய், பண்பின் களமாய், தியாகத்தின் சின்னமாய், உழைப்பின் உறைவிடமாய் அந்தமண்ணில் விளங்கிய பெருந்தகை. மனிதர்களில் மனிதம் பொங்கிய மாமனிதராக, பிறரது துன்பம் கண்டு வாடி அதற்குப் பரிகாரத்தை தேறுதலை நல்கும் உன்னதம் மிக்கவராக அவர் இயல்பிலேயே இருந்தார்.

1953ம் வருடம் தை 15ல் இந்துமாக்கடலினை எட்டி உதைத்தபடி நிமிர்ந்து கிடக்கும் நெடுந்தீவில் பிறந்த ஒப்பற்ற மார்க்சிய லெனிசிய சிந்தையாளர் தோழர் சண்முகநாதன் அவர்களின் இளவயதினை எண்ணிப்பார்க்கின்றேன். இவருடைய வீட்டின் முற்றத்தில் பென்னம் பெரிதாக இருக்க வேண்டிய தென்னைமரம் சின்னஞ் சிறியதாக ஒரு அடி உயரத்தில் காய்த்துப் பெருக்கி குலைதள்ளிக் கிடக்கும். சின்னஞ் சிறியதாக இருக்க வேண்டிய புத்தகங்கள் பென்னம் பெரியதாகி சிவப்பு மட்டைகளோடு அத்தென்னையைவிட உயர்ந்திருக்கும். டால்ஸ்டாய், அரிஸ்டாட்டல், பிளேட்டோ, மார்க்ஸ், மாஓ, எங்கெல்ஸ், ராகுல சாங்கிருத்தியாயன் என உலகத் தத்துவ எழுத்துப் பேராளர்களின் எழுத்துக்களால் நிறைந்து கிடக்கும் அப்புத்தகப் பெருங்கோவில். அப்புத்தகப் பெருங்கோவிலில்தான் தோழர் சண்முகநாதன் அவர்களையும் அவரின் இரு சகோதரர்களையும் நான் நண்பர்களாக்கிக்கொண்டது.

இளவயதிலேயே சமதர்மக் கொள்கைகளை மனத்திருத்திப் பல போராட்டங்களை நடத்தியவர் அவர் பல முற்போக்கு செய்திகளை நாடகங்களாக எழுதியவர், நடித்தவர், பலரை நடிக்க வைத்தவர். ஒப்பற்ற கவியரங்குகள், உணர்வுள்ள சிறுகதைகள், கட்டுரைகள், விவரணச் செய்திகள், சித்திரங்கள் என அவரின் செயற்பாடுகளை அடுக்கிக்கொண்டே போகலாம். அவர் வாழ்ந்த சமூகங்களில் கண்ட சாதிய மற்றும் சமூக முரண்கள் அவருக்கு

மிகுந்த எரிச்சலை ஊட்டின. அவற்றிற்கெதிராக போராடவேண்டிய அவசியத்தை உணர்ந்தார். அதற்கான ஒரு போராட்டக் குணத்தை கொண்ட நெடுந்தீவு முற்போக்கு வாலிபர் சங்கத்தோடு ஒன்றிணைந்து பல முற்போக்குச் செயல்களில் ஈடுபட்டார். நெடுந்தீவின் விடியலிற்காய் தன்னை வருத்தியுழைத்து பல புத்தாக்கச் செயற்பாடுகள் ஊடாக நெடுந்தீவு மக்களின் பேரபிமானத்தைப் பெற்றார்.

அவர் ஒரு நடமாடும் வாசிகசாலை. கம்யூனிச தத்துவார்த்தச் சித்தாந்தங்களை, மார்க்சியப் பொருண்மியக் கோட்பாடுகளை அறிந்து, தெரிந்துவைத்திருந்தவர். அதனில் மிகுந்த நம்பிக்கையும் ஈடுபாடும் கொண்டவர். இவரின் சமதர்ம ஆளுமைகளால் கவரப்பட்ட மார்க்சீய லெனிசிய கட்சி இவரைத் தனது மத்தியகுழு உறுப்பினராக்கிக் கொண்டது. தோழர் கார்த்திகேசன் போன்றவர்களால் கட்டமைக்கப்பட்ட தமிழ்மக்கள் ஜனநாயக முன்னணியின் மகத்தான பொதுச் செயலாளராக இவர் 1975 களில் பிரகடனப்படுத்தப்பட்டார். முன்னணியின் வளர்ச்சிக்காய் வன்னிப்பிராந்தியத்தில் விவசாயிகள் சங்கத்தையும் தீவகத்தில் இளைஞர் முன்னணிகளையும் உருவாக்க அரும்பாடுபட்டார். மார்க்சியத்தை அறியும் வாய்ப்பும், திறனாய்வை ஏற்கின்ற, புரிகின்ற புரிதலும் பக்குவமும் சாதாரணர் வாழ்விலும் இவர் போன்றோரால் தான் ஏற்படுத்தப்பட்டது. சாதியம், மொழி, இனம், மதம் எனப் பிரித்து மக்களை விலங்குகளாக்கி நிற்கும் வியாபார அரசியல் சூழலில் அச்சூறாவளிக்கு எதிராக திடமாக நின்று தொழிலாளவர்க்க சர்வதேசியவாத கொடியை உயர்த்திப்பிடிப்பதற்கு அலாதியான வீரமும் நெஞ்சுரமும் தேவை. அது இவரிடம் நிறையவே இருந்தது. கொடியவரின் அனைத்து ஒடுக்குமுறைகளுக்கும் எதிராக குரல் கொடுத்து அதன் போராட்டங்களில் தானும் எப்போதும் ஒரு முன்னோடியாக, ஒரு பங்காளியாக நின்று உழைத்தார்.

மார்க்சிய லெனிசிய. கொள்கைத் தெளிவால், இடைவிடா உழைப்பால், அலாதியான நாவன்மையால், எழுத்துத் திறனால், வீர வைராக்கியப் பண்புகளால், அனைவரையும் அன்பினால் தழுவும் இனிய சுபாவத்தால், எல்லோரையும் கொள்ளை கொண்ட நெடுந்திவீன் புத்தெழுச்சி மிக்க சூரியன் கனடிய மண்ணில் தனது 63வது வயதில், ஏப்பிரல் 07 2016 அன்று மறைந்து போனது. தனக்கென வாழாது பிறர்க்கு உரியவராகச் சிறந்து, ஒடுக்கப்பட்ட அனைவரினதும் உன்னதத்திற்காய் புத்தெழுச்சிக்காகப் போராடி நின்ற தோழரின் மரணம் எம்மால் ஏற்க முடியாதது. இந்த மிகச் சிறந்த மானிட நேயனை இழந்த துயரால் நெடுந்தீவு மக்கள் மட்டுமல்ல உலகத்தமிழர்களும் அழுதார்கள் ஆறுதல் பெறமுடியாமல் ஏங்கித்தவித்தார்கள். நாடுநாடாக அஞ்சலி செலுத்தினார்கள். இணையங்களும் முகப்பதிவுகளும் பத்திரிகைகளும் இந்தக் கம்யூனிசப் பேராளனின் பெரும் குணத்தை பதிவுசெய்தன. ஏகாதிபத்திய தாசர்களாகவும், சாதிய மேட்டிமைகாரர்ககளாகவும் விளங்கிய புல்லுருவிக் கூட்டத்தின் காட்டுத் தர்பாருக்குள் நின்று அறைகூவி மானிட தர்மத்தை வளர்க்கின்ற மார்க்சியம் என்பது ஒன்றும் சாதரணமான விடயமல்ல அதனைத்தான் தோழர் வாழ் நாள் முழுவதும் செய்தார்.

அவரின் உற்ற தோழி பத்மராணி அவர்களையே இளமைக்காலத்தில் காதலித்து திருமணம் செய்து கொண்டார். அவருக்கு 4 பிள்ளைகள். (ஒருவர் கலமாகிவிட்டார்) 3 பிள்ளைகள் மருமக்கள் மற்றும் அவரது ஒரே பேத்தி ஆகியோரோடு கனடாவில் வாழ்ந்தவர். மிகச் சிறந்த மானிடநேயனை இழந்த துயர் நெஞ்சத்தைத் தின்கின்றது. தான் இறந்த பிறகும் இந்தச் சமுகத்தில் வாழும் யாரோ ஒருவர் கண்ணொளி பெறுவதற்காய் தன்னிரு கண்களையும் கூட விட்டுச்சென்றிக்கிற மிக ஒப்பற்ற மனிதர் அவர். தலைமுறைகளைக் கடந்தும் அவர் போற்றப்படுவார்.

- மா. சித்திவிநாயகம்

## கீதத்தின் நாதன்

அகத்தியன் போன்றவன் உருவம்
அறவிட முடியாத அறிவின் சிகரம்
கருத்தினில் ஊன்றிய தொனன் - அவன்
கதைத்தால் கரையும் கல்மணம் கசியும்

தெளிவாக உறவாடும் பண்பு என்றும்
திரும்பாது அவன்பாதை ஒருநாளும் பின்பு
கதீர் வீசும் கண்களி லென்றும் அன்பு
கனவிலும் மாறாது அவன் வார்த்தை கொஞ்சும்

ஊன்றி உழைப்பவர் வாழ்வில் இவனுயர் தோழன்
நெறிப்படி வாழ்ந்தான் நேர்மையின் சின்னம்
நெடு நாள் செங் கொடி யேற்றிய தீரன்
சீர் திருத்தமே வேண்டி செயல்பட்டான் வீரன்.
கொடுமைகள் கண்டவன் குலைந்ததுமில்லை
குவலையம் மோங்கிட என்றும் சிந்தினான் வேர்வை
எழைகள் உயர்வுக்காய் ஏங்கினான் சீலன் தோழன்
இடர் கண்டு கொதித்தெங்கும் இயங்கினான் நாதன்

தொடரட்டும் அவன்பணி தொடரட்டும் என்பேன்
துயர் துடைத்திடும் அவன் வழி நீளட்டும் மென்றும்
சடுதியாய் பிரிந்திட்டான் சண்முக நாதன் - அவன்
சாலையில் எம்மவர் காண்களை பதிப்போம்

றெஜி

## எங்களோடு நீங்கள்

உலகம் ஒப்பற்ற வினோதங்களோடே உருண்டு கொண்டிருக்கின்றது. உருளும் வேகத்திலும் யாதும் உருண்டு விடுவதில்லையே மாறாக இரவும் பகலும் என இரு நிலை மாற்றம் மட்டும் நிகழ்கின்றது. இதே உலகில் வாழும் உயிரினங்கள் தங்கள் செயற்பாடுகளின் காரணமாக இன்பம் துன்பம் எனும் இரு நிலை மாற்றங்களை அனுபவிக்கின்றன.

மாற்றங்களின் அடிப்படையாக அமைவது சிந்தனையும், செயற்பாடும் எனலாம். இதனையே தத்துவங்கள் நடைமுறைகள் எனவும் வர்ணிக்கலாயினர். மனித வாழ்வின் உயிர்ப்பிக்கும் துடிப்புக்கும் தத்துவமும் நடைமுறையும் இன்றியமையாதன.

"தத்துவமற்ற நடைமுறை குருட்டுத்தனமானது நடைமுறையற்ற தத்துவம் மலட்டுத் தனமானது"

என்ற கூற்றில் இருந்து இதனை உணர்ந்து கொள்ளலாம். தத்துவத்திற்கும் நடைமுறைகளுக்குழ் இடையில் உயிரோட்டமான பிணைப்பை ஏற்படுத்தி மனித ஜாதியின் மகோன்னதங்களை மிளிரச் செய்த சிறப்பின் காரணமாக இன்னும் பேசப்படுபவர்கள் பலர் உள்ளனர். அவர்களில் கால் மார்க்ஸ், விளாதிமீர், இல்யீச் லெனின் மாவோ சேதுங், இ.வே இராமசாமி (பெரியார்) மகாத்மா காந்தி என பட்டியல் நீண்டு செல்லும் இவர்கள் எம்மைப் பொறுத்தவரை பேசு பொருட்களாக இருந்தவர்கள் இருப்பவர்கள் ஆனால் எம்மோடு நேரடி உறவு கொண்டு வழிகாட்டிய கலங்கரையாய் மிளிர்பவர் அமரர் சின்னத்தம்பி சண்முகநாதன் அவர்களாவார். தன்னை தனது அறிவின் விசாலங்களை விளம்பரப்படுத்தாதவர் அணுகியவர்களுக்கு அரு மருந்தும், பெரு விருந்துமாக திகழ்ந்தவர். யுார் யார் நலிவுற்றிருக்கின்றனரோ யாரெல்லாம் ஒடுக்கப்பட்டும் வஞ்சிக்கப்பட்டும் உள்ளனரோ அவர்கள் பால் மிக கருணை கொண்டு கைகொடுத்தவர். ஆற்றுப்படுத்தியவர்.

நெடுந்தீவு மேற்கு சைவப்பிரகாச வித்தியாலயத்தில் அசிரியர் பற்றாக்குறை நிலவிய காலத்தில் (1975 ___ 1980) பல்துறை ஆற்றல் மிக்க ஆசிரியராக மாணவர் மனக் கண்முன் பதிந்தவர் "ஆசிரியன்" என்ற மகோன்னதப் பணியை ஆத்மார்த்தமாக நிறைவேற்றியவர். அவரது மாணவருள் நானும் ஒருவனாகி அவரையும் கற்றுக் கொண்டேன். நெடுந்தீவு ஐக்கிய தீப சனசமூக நிலையத்தின் உறுப்பினர்களுடன் இணைந்து அதன் யாப்பினை புதிய வடிவில் வடிவமைத்து செயற்பாடுகளை ஆதித வேகத்தில் விவேகத்துடன் செயற்பட உதவியவர். அப்போது இரண்டாம் சந்திப்பு என்னுடன் பலமானது நான் உயர் வகுப்பு மாணவனாக இருந்த காலத்தில் ஓர் நாள் குமுதினி படகில் பயணம் செய்யும் போது அவரும் அப்படகில் வந்திருந்தார். 50 சதத்திற்கு அவருக்கும் ஒரு பயணச் சீட்டு வாங்கினேன். அதை அவர் ஏற்றுக்கொள்ளவில்லை படித்து உழைக்கும் சந்தர்ப்பத்தில் தேவையேற்படின் அன்புடன் நிறைவேற்று என்றார்.

எனது சகோதரர்கள் மூவர் நாட்டு நிலமை காரணமாக புலம் பெயர்ந்து இந்தியா சென்ற வேளை அங்கு சண் அவர்கள் தந்தையாய் இருந்து பாதுகாப்பு அளித்ததை இன்னும் அவர்கள் மறக்க முடியாதவர்களாகவே உள்ளனர்.

தனது நண்பன் ஒருவன் தொழிலிலிருந்து இடர்பட்ட போது அத் தொழில் அவரது எதிர்கால முன்னேற்றத்திற்கு பொருத்தமற்றது என எடுத்துரைத்து வருமானம் பெற வேறு மார்க்கத்தை ஏற்படுத்திக் கொடுத்தவர். தன்க்கென எதையும் சேர்க்காது பிறர் துயர் களைத்தவர் சண்முகநாதன் அவர்களாவார்.

நெடுந்தீவு முற்போக்கு சிந்தனைகளுடன் யார் செயற்படுகின்றார்களோ அவர்கள் அநேகமாக "சண்" பின்னணி தொடர்பில் இருந்தவர்களாகவே இருந்திருக்க முடியும். தன்னை ஒரு பொருட்டாக கருதாது பலரை தன்னோடு இணைய வைத்து இன்பம் கண்டவர் குடும்பம் என்ற குறுகிய வட்டத்துள் அமுங்கி விடாது பொது வாழ்வின் பக்கங்களை பூரணப்படுத்தியவர்.

ஆடம்பரங்கள் அற்று அமைதியாய் வாழ்ந்து காட்டி அமைதியாய் உறங்கிப்போன எம்

ஆசானின் பெருமைகளை இமயமாய் உயர்ந்து நிற்கும் செய்தியை இன்று உணர்கின்றோம். இப்படியும் மனிதனால் வாழ முடியுமா? என்ற கேள்வி எம்முன் எழுகிறது விடை சொல்ல சண் வருவீரோ? முடியும் என்ற முத்தாய்ப்புடன் தொடர்வோரின் வழித்துணையாக வேணும். வர சம்மதப்படும் சிஷ்டர்களுடன் சிறப்பான பயணமொன்றை தொடர "சண்" விழித்தெழுந்த வரலாறு ஒன்று எம் முன் நீண்டு நிற்கும். நாமும் அதன் பக்க வரிகளாய் பிரகாசிக்கலாம் அல்லவா? எங்களோடு நீங்கள் பகிர்ந்து கொண்டவற்றை மீள நினைத்து அந்த நினைவுகளுடன் உங்களோடு நாங்கள் இணைந்திருப்போம்.

கோ.பத்மநாதன்

நெடுந்தீவு



**எப்படிச் சென்றாய் இறைவனடி?**

அவனியிலே அன்பாய் இருந்து
எமக்கு அறிவூட்டினாய்
ஆற்றல் கொண்டு மனிதத்தை நேசித்தாய்
மாமனிதன் ஆனாய்
பிறப்பிற்கும் இறப்பிற்கும் உள்ள இடைவெளியில்
ஈடு இணை இல்லாத
தனி மனித கருத்துச் சுதந்திரத்தை ___ நீ
உள்ளபடியே உலகிற்கு உணர்த்திச் சென்று

இறுதிவரை ஊரோடும் உறவோடும் உலகோடும்
நீ வாழ்ந்த வாழ்வு
என்றென்றும் எம்மனத்தில்
ஆழப் புதைந்திருக்கும்

எப்படித் தாங்கினாய் நண்பா ___ நீ
உனது இழமையின் இழப்புக்களை
தண்ணீர் தத்தெடுத்தது உன் தம்பியை
சின்ன மகள் கார்த்திகா
சிவனடிக்குச் சென்றாள்
மௌனமாக இருந்து கொண்டு
அவற்றை எல்லாம் தாங்கிய ___ நீ
அவர்களுடனா சென்றாய் அமைதி கொள்ள
உன் அன்பு மாமனார் வைத்திய நாதன்
உடன் இருப்பார் இறையடியில்

நெடுந்தீவு மக்கள் ஒன்று கூடலில்
மரணித்த மக்களது
இறுதிக்கிரியைகளில்
மற்றும் நிகழ்வுகளில் - நீ
என்ன பாங்குடன் நின்ற உதவுவாய்
அன்பாய் பழகுவாய்
அதுவே உனது உள்ளத்துயர்வு

ஞாயிறு இருந்தோம் நாம் ஒன்றாய்
வியாழன் விண்ணில் இருந்து
எரி குண்டு வீழ்ந்தது போல் செய்தி கேட்டேன்
செய்தியா அது
இடியே வீழ்ந்தது போல் - என்
இதயமே கலங்கிற்று

விழிமூடி மரணித்தீர்களா இல்லை இல்லை
உங்களது விழிகளைக்கூட
பார்வையற்ற பாட்டாளி மக்களுக்காய்
பதித்துச் சென்றீர்கள்
உறங்கியது நீங்கள்
விழித்துக் கொண்டிருப்பது
உங்கள் வழிகள்

நீ விதைத்த விதைகள்
விருட்சமாய் மாறும்
கண் எதிரே காண்பார்கள்
களத்தில் உள்ள தோழர்கள்
உன் கண்விழிகளாலும்
நீ வாழ்ந்த காலத்தில்
நாம் வாழ்ந்தோம் என்ற நிம்மதி — எமக்கு

எப்படித்தாங்கும் இவற்றை எல்லாம்
உன் குடும்பமும் - குவலயமும்
அத்தனை பேருக்கும்
அடியேனின்
விழி வழி நீர்க் காணிக்கை

சி. பரராசசிங்கம் குடும்பத்தினார்.



## தோழர்

எங்கள் இதயக் கதவுகளில் நிலை கொண்ட வரும் எனது தோழமையிலிருந்து பிரிக்க முடியாத எங்கள் இல்லற ஜோதியாகியுமாகிய அமர் தோழர் சண்முகநாதன்.

உலகத்திலே மானிடவர்க்கம் பலபல உருவங்களில் உதயமாகி வாழ்கின்றார்கள். சிலர் தானோ தனது குடும்பமோ எனவும் பலர் கஸ்டப்பட்டு வாழ்க்கை சிறப்புற ஏற்படுத்த முயல்வார்கள். ஆனால் தோழமை வாழ்க்கை ஏற்பட செய்யும் சிலர் தங்கள் இடது சாரசிந்தனையும் பலவிதமாக தொழில் சங்க தொடர்பு, கல்வியின் வளர்ச்சி, புத்தக வாசிப்பு - வாசனை அதனை பராமரிக்கும் வாசிகசாலை தொடர்புகள் செய்வார்கள். இந்த நிலையை தான் தோழர் சண் பிறந்த மண்ணிலும் வன்னி பிரசேத்திலும் நிலைபெற செய்தார்.

நான் கண்ட என் அருமை தோழர் கனடாவில் வந்த காலத்தில் தோழர் சுப்பிரமணியத்தின் நீண்ட கால தோழர் என்பதால் சந்தித்தோம். முன்னர் தோழர் போல் காட்சி அளித்தார். தினமும் சந்திக்கும் முறையும் இருநேர தொலைபேசி தொடர்பும் ஏற்படும். அவர் அற்றுபோன பின்னர் மறக்க முடியாத நினைவுகள் இதய வேதனை, தோழர் கதைப்பது போல் காட்சி. கோபமற்ற சுய சிந்தனையாளர். இரைபிரிந்து நாங்கள் வாழ்வதை நினைத்து வேதனைப்படுகிறோம்.

நான் தொலைபேசி எடுத்ததும் கூறும் வாழ நினைத்தால் வாழம் வழியா இல்லை பூமியில் என்பதே அவரின் புன்முறுவல் முகத்தை நினைத்தவுடன் நினைப்பது எல்லாம் யாவும் வேதனைதான்

S.கதிரவேலு
போறியியலாளர்
இலங்கை வானொலி

## நேர்மையான சமூகப் போராளி

யாரும் எதிர்பார்த்திருக்காத ஒரு நாளில் கொடுமையாதொரு கணப்பொழுதில்தான் அது நிகழ்ந்தது. உடலும் மனமும் வலிமையாக இருந்த கணமது. அறிகுறியே இல்லாமல் அந்நோய் தாக்கிய கணத்தில் குலைந்து போனது எல்லாம்.

மீளா மயக்கத்தில் இருந்த மூன்றாம் நாள் தோழர் சண்முகநாதன் இவ்வுலக வாழ்வை முடித்துக்கொண்டார்.

அவரைத் தவிர எல்லோருமே அதிர்ந்துபோனார்கள். நோயுற்றுப் படுக்கையில் வீழ்ந்தறியாத தோழருக்கு இது எவ்வாறு நிகழ்ந்தது என்ற வினாவுக்கு விடை மருத்துவத்துக்குக் கூடத் தெரிந்திருக்குமா தெரியவில்லை.

மரணத்தோடு போராடலாம், யாரும் வெல்ல முடியாது. நாம் எமது அன்பிற்கினிய உறவை, நல்ல தோழரை வலுக்கட்டாயமாக இழந்து போனோம்.

சண்முகநாதன் அண்ணர். இவ்வாறுதான் நான் அவரை அழைப்பேன். அவர் என்னுடைய உறவு என்பதற்கும் அப்பால் நாம் மிக நெருக்கமாகப் பழகியிருந்தோம். இளவயதில் எமக்கெல்லாம் தாய்வீடாக இருந்தது நெடுந்தீவு என்ற அழகிய கிராமமே. அங்குதான் உறவுகளையும் உலகத்தையும் நாம் அடையாளப்படுத்திக்கொண்டோம்.

எம்மில் மூத்தவரான சண்முகநாதன் அண்ணர் கண்டதையும் வாசிக்கும் பழக்கம் கொண்டவர். அவரது சிறு வயதுகளிலேயே சமூகம் சார்ந்து சிந்திக்கத் தொடங்கியிருந்தார் என்றுதான் கூறவேண்டும். அவ்வயதில் எமக்கு அது சரியாகப் புரியவில்லையாயினும் ஏனையோரிலிருந்து அவர் வேறுபட்டிருந்தார் என்பதை நாம் தெரிந்திருந்தோம். அதனால் எம்மிடையே அவர் சொல்லுக்கு ஒரு மதிப்பு இருந்தது.

இலங்கையின் சுதந்திரத்திற்குப் பின் தமிழர் மத்தியில் தோன்றிய அரசியல் அலைகள் காங்கிரஸ் கட்சி, தமிழரசுக் கட்சி என்ற அரசியல் நிறுவனங்களை உருவாக்கிவிட்டிருந்தன. இவற்றுக்கப்பால் வடக்கில் ஆழ வேரூன்றியிருந்த சாதிய, பொருளாதார சமூக முரண்களுக்கெதிராகப் போராடிக்கொண்டிருந்தன சமவுடைமைக் கட்சிகள். பதவி, பணம், புகழ் இவை எதையுமே பெறுவதற்கு முயற்சிக்காத இக்கட்சிகள் சமூக நலன்களையே குறியாகக் கொண்டிருந்தன.

தான் சார்ந்த சமூகம் மீது அக்கறைகொண்ட சண்முகநாதன் அண்ணர் இயல்பாகவே சமவுடைமைக் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டார். ஜெர்மனியிலிருந்து கார்ல் மார்க்ஸ் உலகுக்கு அறிவித்த சமவுடைமைக் கொள்கை உலகிலொரு சிறு தீவாகவிருந்த நெடுந்தீவில் சண்முகநாதன் அண்ணரைப் பாதித்தது என்பது ஆச்சரியமான உண்மையே.

சமவுடைமைக் கொள்கையால் ஈர்க்கப்பட்ட எல்லோருமே செயற்பாட்டாளராகியதில்லை. சிலரே செயற்பாட்டாளராக வெளிப்பட்டு சமூகத் தொண்டாற்றியிருக்கின்றனர். அவர்களுள் சண்முகநாதன் அண்ணரும் ஒருவர்.

சண்முகநாதன் அண்ணரும் சமவுடையைக் கட்சியோடு இணைந்து செயற்பாட்டாளரானார். எம்மில் பலருக்கும் இன்றும் இது ஆச்சரியமே. சமூகம் தொடர்பான தெளிவான பார்வையும், அரசியல் நடத்தைகள் பற்றிய தெளிந்த அறிவும் கொண்ட பொதுநல விருப்பிகளால் மட்டுமே இது சாத்தியம்.

அறுபதுகளின் பிற்பகுதியிலேயே இது சண்முகநாதன் அண்ணருக்குச் சாத்தியப்பட்டிருந்தது. பெரும் அரசியலாளர் எனக் காட்டிக்கொண்ட பலரிடமும் இல்லாத சமூகம் சார்ந்த தெளிவும் போக்கும் அன்றே சண்முகநாதன் அண்ணரிடம் இருந்தது என்பதை நான் இன்று வலுவாக உணர்கின்றேன்.

நெடுந்தீவில் முற்போக்கு வாலிபர் இயக்கம் என்ற அமைப்பின் உருவாக்கத்திற்கு முன்னின்று உழைத்தவருள் சண்முகநாதன் அண்ணர் முதன்மையானவர். சமத்துவக் கொள்கைகளையே தமது நடத்தைகளாகக் கொண்டிருந்த இவ்வியக்கம் பல்வேறு சமூக

சேவைகளைச் செய்ததை நெடுந்தீவு மக்கள் அறிவர். ஆண்டுதோறும் தைப்பொங்கல் விழாவையே பெருவிழாவாகக் கொண்டாடியது இவ்வியக்கம்.

பின்னால் நம்மில் பலர் இணைந்து இளைஞர் முன்னணி என்ற அமைப்பை உருவாக்கினோம். காலப்போக்கில் முற்போக்கு வாலிப இயக்கத்தினர் பொங்கல் விழா உட்பட பல்வேறு பொறுப்புகளை எம்மிடம் ஒப்படைத்து விட்டு எமக்கு வழிகாட்டனர்.

சீனச் சார்புடைய சமவுடைமை கட்சியின் முக்கிய உறுப்பினராகத் திகழ்ந்த சண்முகநாதன் அண்ணர் சாதிய அடக்கு முறைகளுக்கு எதிராகப் பல போராட்டங்களை நடத்தினார். கட்டுரைகளை எழுதி-னார். கவிதைகளில் முழங்கினார்.

எழுபதுகளின் தொடக்கத்தில் படித்த வாலிபர் திட்டம் என்ற நடவடிக்கையின்கீழ் விசுவமடு, தர்மபுரம் போன்ற பகுதிகளில் இளைஞர்களுக்கு நிலங்கள் வழங்கப்பட்டன. அவ்வாறு நிலம் பெற்று விவசாயம் செய்தோரில் சண்முகநாதன் அண்ணரும் ஒருவர். ஒரு விவசாயியின் இடர்கள் என்னவென்பதை அங்குதான் அவர் ஆழமாகப் புரிந்துகொண்டார். அதிகார அடுக்குகள் கொண்ட சமூகக் கட்டமைப்பில் விவசாயிகளின் நிலை அடித்தளத்திலேயே இருந்தது.

அடித்தள மக்களின் வாழ்வியல் சிக்கல்களை வெளிக்கொண்டு வரும் நோக்கில் 1973இல் "களனி" என்ற கலை, இலக்கிய, சமூக சஞ்சிகை ஒன்றைத் தொடங்கினார்கள். மார்க்சிய சிந்தனையின் தளத்தில் இச்சஞ்சிகை வெளியானது.

தமிழில் ஆழ்ந்த பற்றும் எழுதும் வல்லமையும் கொண்டவர். கவிதை எழுதி கவியரங்கங்களில் வாசிப்பதில் சிறந்தவர். பல அரங்குகளில் இவரது கவிதைகள் சமவுடைமைக் கருத்துகளோடு ஓங்கி ஒலித்தன. அண்ணரது ஆற்றலையும் அக்காலச் சமூகச் சூழலையும் பிரதிபலித்த அவரது கவிதைகள் இன்றுவரை ஒரு தொகுப்-பாக்கப்படாமை பெரும் இழப்பே.

சாதிய, பொருளாதார என்ற பொதுவான அடக்குமுறைகளைக் கடந்து இலங்கைத் தீவில் மற்றுமொரு போராட்டச் சூழல் எழுபதுகளில் அடையாளப்படுத்தப்பட்டது.

சமூகத்தின் மீது உண்மையும் ஆழமும் மிக்க ஈடுபாடு கொண்ட ஒவ்வொருவரும் இந்த புதிய போராட்டச் சூழலால் ஈர்க்கப்பட்டமை தவிர்க்கப்பட முடியாததாகவே இருந்தது.

தமிழின நலன்களைப் பேணுகின்ற மிதவாத அரசியல் போக்கு போராட்ட வடிவமாக மாற்றங்கொண்டபோது வெகுசிலராலேயே போராட்ட அரசிலை ஏற்று பயணிக்க முடிந்தது. அவ்வாறு அரசியலில் தொடர் பயணத்தை மேற்கொண்ட உண்மையான சமவுடமைப் போராளி இவர்.

மனுடத்தின் பாலும் தான் சார்ந்த இனத்தின் பாலும் பெருவிருப்புக் கொண்ட ஒருவராலேயே சமூகத்துக்கான பணியை உண்மையானதாக ஆற்ற முடியும். அந்த உண்மையில் இருந்து இவர் என்றும் விலகியதில்லை.

தமிழீழ விடுதலை நோக்கில் பல்வேறு அமைப்புகள் தோன்றியபோதும், தமிழ் மக்களின் அரசியல் தேவைகளை முன்னிறுத்திய, பொதுவுமைக் கொள்கைகளைத் தளமாகக் கொண்ட, தெளிந்த நோக்கங்கள் கொண்டவையாக எவையும் இருக்கவில்லை என்பதை உற்றுணர்ந்தார்.

பல்வேறு விடுதலை அமைப்புகளும் ஆயுத முனைப்புக்கே முன்னுரிமை கொடுத்த காலப்பகுதியில் தமிழ் மக்களது அரசியல் விடுதலைக்கான தெளிந்த வரையறைகளைக் கொண்ட தமிழ் மக்கள் ஜனநாயக முன்னணியின் முக்கிய உறுப்பினரானார்.

சிறுவயதிலிருந்தே இவரது தம்பி சபாநேசன் தான் என் நெருக்கமான நண்பன். மரியாதை கலந்த உறவுதான் இவருக்கும் எனக்குமானது. புறச்சூழல் போராட்டத்திற்கு எமையிழுத்தகாலத்தில் இவரோடு எனக்கிருந்த தொடர்பு இறுக்கமாக்கிக் கொண்டது. எழுபதுகளின் இறுதியில் தான்சார்ந்த அமைப்பில் என்னையும் இணைத்துக்கொண்டார்.

மக்கள் நலனில் அக்கறைகொண்டு தன் நலன் மறந்து, தொழில் துறந்து, பொது வாழ்வில் தன்னை முழுமையாக இணைத்துக்கொண்டவர்.

சமவுடமைவாதியாகப் பயணித்தோரில் இறுதிவரை தடம் மாறாதிருந்தோர் வெகுசிலரே. அவர்களுள் ஒருவாராக இறுதிவரை வாழ்ந்தவர்.

தொடர்ந்த அரசியல் மாற்றங்கள் விருப்புக்கு மாறாகப் புலம் பெயர்வதற்குக் காரணமாயிற்று.

கனடாவில் குடியேறிய பின்னரும் வாசிப்பிலும் எழுத்திலும் ஈடுபட்டார். சமூகம் சார்ந்த பல்வேறு நிகழ்வுகளில் தவறாது கலந்துகொள்வார். சமத்துவச் சித்தாந்தங்களை ஏற்றுக்கொண்ட எல்லோரும் ஒருமுகமாச் செயற்படவேண்டும் என்பதே அவரது ஒருமித்த கருத்தாகவும் இருந்தது.

கனடாவுக்கு வந்ததிலிருந்து இறுதிநாள் வரை நாங்கள் சந்திக்கும் ஒவ்வொரு சந்திப்பிலும் "தாய்வீடு" இதழ் பற்றிய விமர்சனங்கள், அறிவுரைகள் இருக்கும். நாம் இருவரும் பகிர்ந்து பேசாத விடயங்கள் மிகக் குறைவே.

அண்மைக்காலத்தில் என்னை அதிகமாகப் பாதித்த பெருந்துயர் இவ்விழப்புத்தான். எனது வாழ்நாளின் இறுதிவரை அவரை நினைத்திருப்பதற்கான அத்தனை செயல்களையும் அவர் செய்துவிட்டுப் போயிருக்கின்றார்.

- டிலிப்குமார்



## அண்ணன் வழி நடப்போம்

விருட்சம் சாய்ந்தாலும் அதன் விழுதுகள் என்றும் தாங்கி அதன் பெயரைக் காத்துக் கொள்ளும் என்பது நாம் அனைவரும் அறிந்ததே. இந்த வகையில் தான் சண்முகநாதன் அண்ணரின் அஸ்தமனமும் எம்மை துயரப்பட வைத்தாலும் அவரது. விழுதுகள் நாம் அவர் தம் பணியை முன்னெடுப்போம். அது எமது கடமை.

பள்ளிப் பருவங்களில் இவரது செயற்பாடுகள் தொடர்பாக நாம் பலவற்றை அறிந்தோம் ஆனால் அவரைக் காணவில்லை இருப்பினும் கால ஓட்டத்தில் எமது பயணங்கள் தொடர்ந்த போது தான் இந்தியாவிலே அவரைக் கண்டேன் முன்பு தெரியும் விபரம் அறியா வயதில்.....

இந்திய சந்திப்புத்தான் என்னை உணர வைத்தது. கேள்விப்பட்ட மனிதன் இன்னும் அப்படியே வாழ்கிறான் என்று எத்தனை துன்பங்கள், துயரங்கள் தாண்டியும் தான் மனிதனாக வாழ்வதென்பது அண்ணரிடம் மட்டும் தான் முடியும்.

தன்னடக்கம்
தற்துணிவு
இல்லாத போதும் இருப்பது போல் வாழ்வு
நகச்சுவைப் பேச்சு
கவரும் நாவன்மை
நம்பிக்கை தான் வாழ்க்கை

போன்ற அம்சங்களை நேரிலே கண்டவுடன் அவரிடம் இருந்து நான் கற்றுக் கொண்டேன், வாழப் பழகினேன், வாழ்கிறேன்

வழி நடத்தல் என்பது வாய்ச் சொல் இல்லை என்பதை அவரிடம் தான் கற்றுக்கொண்டேன். வாழ்ந்து காட்ட வேண்டும் என்று இதனால் இன்று அண்ணா போலவே வாழத்துடிக்கின்றேன். "நம்பிக்கை தான் வாழ்க்கை" என்பதற்கமைய அவர் வழியில் வாழ்கின்றோம்.

சமூக மட்ட மாற்றத்தை கொண்டு வந்து அதன் மூலம் சமத்துவம் காண்போம் என்ற சேவை மனத்தினையும், மக்கள் பணியது தான் எம்மை வாழ வைக்கும் என்றும் என்பதற்கமையவும் வாழ்ந்த சண் அண்ணன் ஆத்மாவானது வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்" என்ற நம்பிக்கையில் நாமும் எமது பணியினை அவர் தம் பாதையில் தொடர்கின்றோம்.

கண்ணன்
(தில்லையம்பலம் கிரிதரன்)
நெடுந்தீவு

**'வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்**

**வானுறையும் தெய்வத்துள் வைக்கப்டும்"**

அமரர் சின்னத்தம்பி சண்முகநாதன் அவர்ளது தாய் தந்தையர்கள் எமக்கு அருகாமையில் கிழக்குப் பக்கமாக குடியிருந்து பலசரக்கு வியாபாரத்தினையும் நடத்தியவர்கள். எனவே அவர்களுடன் நெருங்கிய நட்புக் கொண்டவன் அன்பும் பாசமும் அனைவரையும் அரவணைக்கும் ஆற்றலும் கொண்டவர்கள். அவ்வாறான குடும்பத்தின் மூன்று புதல்வர்களுள் முத்தவர் தான் அமரர் சண்முகநாதன் அவர்கள். இவரது கடைசி சகோதரர் சி.சபாநேசன் அவர்கள் என்னுடன் கல்வி கற்றதுடன் நெருங்கிய நண்பனும் ஆவார் இதன் காரணமாகவும் இவர்களுடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பு அதிகம் கிடைத்தது.

அமரர் சண்முகநாதன் அவர்கள் எம்மை விட்டுப் பிரிந்தாலும் அவர் செய்த பணிகள் சொல்லில் அடங்காதவை அவர் ஒரு நல்ல சமூக சேவையாளரும் தன் நலன் கருதி வாழாமல் பிறன் நலன் கருதி வாழ்ந்த உத்தமர் என்று சொன்னால் அது மிகையாகரது ஏன்று கூறி அன்னாரின் ஆன்மா சாந்தியும் மோட்சமும் பெற எல்லாம் வல்ல பெருக்கடி விநாயகரையும் பிடாரி அம்பாளையும் வேண்டிப் பிரார்த்திக்கின்றேன். அத்தோடு அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தாருக்கும் ஆறுதல் கூறி நிற்கின்றேன்.

நன்றி.... ஓம் சாந்தி....

கா.புவனேந்திரசர்மா (மணி ஐயா)

இந்து மதகுரு

நெடுந்தீவு 1

**உங்கள் பாதங்களுக்கு ...**

இதற்கிணங்க வாழ்ந்து என் அண்ணனாய் இனிய தோழனாய் எல்லா மனிதர்களாலும் போற்றப்படும் நீங்கள் மனிதர்களில் மாணிக்கமாய் வாழ்க்கையில் மறக்க முடியாத மனிதனாய் அமைதியான பேச்சும் வெண்மை உடைக்கேற்ற உள்ளமும் கொண்ட அண்ணா உங்கள் உடல் தான் எங்கள் முன் இல்லை உங்களோடு பழகிய நாட்கள் நீங்கள் பேசிய வார்த்தைகள் உங்கள் சிந்தனைகள் எல்லாம் என்றென்றும் பொக்கிசமாக நீங்கள் பழகிய அத்தனை பேரின் மனதிலும் இருக்கும்.

உங்கள் கடமையும் கண்ணியமும் அன்பும் அரவணைப்பும் எல்லோரும் சமமெனப் பழகும் பக்குவமும் என்றென்றும் அழியாதவை உங்கள் இழப்பை எங்கள் ஒருவராலும் ஈடுசெய்ய முடியாது. நல்லவர்கள் கூடிய காலங்கள் வாழ்வதில்லை.

உங்கள் தோழர்கள் எல்லாரும் முற்போக்கு வாலிபர் இயக்கம் தொடங்கிய போது நாங்கள் சிறுவர்கள் உங்களை உதாரணமாக எண்ணி இளைஞர் முன்னணி என்ற பெயரில் ஒரு சிறுவர் அமைப்பு அமைத்தோம். அது அன்றுடன் முடியவில்லை தொடர்ந்து இன்று வரை உங்களின் தொடர்பு எங்களுடன் நீடித்தது.

என் வாழ்வில் நான் கண்ட மனிதர்களில் மனித நேசம் கொண்ட மனிதர் நீங்கள் தான் அண்ணா உங்களை நினைத்து ஒவ்வொரு நாளும் வேதனைப்படுகிறேன்.

கனடா வந்தவுடன் ஒவ்வொரு சனிக்கிழமையும் காலையில் என்னை சந்திப்பார். நீண்ட நேரம் என்னுடன் பேசுவார். ஆறவில்லை அண்ணா உங்கள் பிரிவு அண்ணாரின் பிரிவு.

அன்னாரின் பிரவு எங்கள் எல்லோரையும் ஆறாத் துயரத்துக்குள் ஆழ்த்திவிட்டன. அண்ணர் எங்கள் கண்ணீர் அஞ்சலியை உங்கள் பாதங்களில் காணிக்கை ஆக்கி உங்கள் ஆத்மா சாந்தி அடையப் பிராத்திக்கிறோம்.

க. ரவீந்திரகுமார்.

## வாழ்வியலில் மறந்திட முடியாத மகத்துவம் மிக்க நல்ல மனிதன்

### சண்முகநாதன்

கல்வியிலும் நற் பண்பிலும் சிறந்த இளைஞனாய் மிளிர்ந்த காலம் முதல் இறக்கும் வரை இலக்கிய வித்தகனாய் சமூகக் கட்டுமானங்களுக்கு இசைவாக வாழ்வியலில் எவ்வாறு வரையறுக்கப்பட வேண்டும் என்பதை தனதாக்கி எளியவர்க்கு இனிதாக தனது நண்பர்கள் ஊடாக புகட்டி நின்ற பெருந்தகை அமரர் சண்முகநாதன் என்பது தோழமை கொண்ட நண்பர்கள் அறிந்த உண்மையாகும்.

க.பொ.த. சாதரண தரத்தில் எண் கணிதம் என்பது கசப்பான சூரணம் என்பதை மாற்றி அதனை இனிப்பாக்கி தனது சகபாடி மாணவர்கள் தேர்ச்சி பெற வழி அமைத்துக் கொடுத்தவர் என்கின்ற பெருமைக்குரியவர்.

புள்ளி ஆசிரியனாக அண்ணர் இல்லாத போதும் சாதரண தரத்தில் சமூகக் கல்விப் பாடத்தினை பல மாணவர்களுக்கு ஊட்டி சாதனை படைத்தவர். அத்தோடு உயர்தர மாணவர்களுக்கு அரசியல், புவியியல் பாடங்களை கற்பித்து தேர்ச்சி பெறவைத்த நல் ஆசான் அந்த வகையில் நானும் அவரது மாணவனே கலை கலாச்சாரம் பொழுது போக்கல்ல சமூகத்தை மாற்றியமைக்கும் அசைக்க முடியாத திறவு கோல் என்பதை உணர்ந்து வில்லுப்பாட்டு, கவிதை, நாடகம் என்பவற்றை நிழலாக நின்று மற்றவர்களை வழிப்படுத்தி மேடையேற்றிய பெருந்தகை

அண்ணர் மற்றவர்களுடன் கருத்துக்களை பகிரும் விதம் உறவாடும் பாங்கு காந்தமாய் கவர்ந்து கொள்ளும் ஆதலால் அன்னாரின் இழப்பு பலரைக் கதிகலங்க வைத்துள்ளது.

மாக்சிசம், மாகோ இசம் என்கின்ற பொதுவுடமை தத்துவத்தை முழுமையாக கற்று தேர்ச்சி அடைந்து அந்தக் கொள்கையில் மாறாது வாழ்ந்தவுடன் பொதுவுடமைவாதிகளாக பலரை உருவாக்கிய பெருமைக்குரியவர்.

தமிழ்த் தேசியம் சகல உரிமைகளுடனும் வாழ வேண்டும் என்கின்ற வகையில் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு எவ்வாறு அமைய வேண்டும் எனும் தீர்வு அரசியல் அறிக்கையை முதல் முதல் முன்வைத்த குழுவின் முக்கியமான நபர்களில் சண்முகநாதன் அவர்களும் ஒருவர் என்பது பெருமைக்குரியதாகும்.

அன்னாரின் இழப்பு பேரிழப்பு என்றுரைத்து நிறைவு செய்கின்றேன்

தோழமையுடன்

நண்பன் இரா.தர்மரட்ணம்

நெடுந்தீவு

**அமரர் சின்னத்தம்பி சண்முகநாதன்**

எனது சிறிய வயதில் மதிப்புக்குரிய அமரர் சின்னத்தம்பி சண்முகநாதன் அவர்கள் மிகவும் மிடுக்கான தோற்றமும், மற்றும் அமைதியான போக்குடையவராகவும் என் மனதில் இடம்பிடித்திருந்தார். இவர் காலப்போக்கில் நெடுந்தீவில் மும்மரமான முறையில் இயக்கத்தில் ஈடுபட்ட முற்போக்கு வாலிபர் சங்கம் உருவாகுவதற்கு, வித்திட்டவர்களில் ஒருவரானார். முற்போக்கு வாலிபர் சங்கம் நெடுந்தீவில் இயங்கிய காலப்பகுதியில், அதன் சங்க உறுப்பினர்கள் பலர் நம் தீவகத்திற்கு நன்மைகள் தரக்கூடிய பலதரப்பட்ட சமூகசேவை நடவடிக்கைகளை முன்னெடுத்தனர். இதனால் இவர் நெடுந்தீவில் எத்தனையோ இளம் சமுதாயத்தின் முற்போக்கு சிந்தனைகளிற்கு அத்திவாரமிட்ட ஆசான் ஆனார். இவற்றிற்கு மேலாக இவர் எம் தீவகத்தில் படித்த பலர் பின்பற்றிய கம்யூனிச கோட்பாடுகளின் அழமான அறிவைப் பெற்று, தன்னையும் முற்றுமுழுதான கம்யூனிசவாதியாகப் பிரகடனப் படுத்திக்கொண்டார். அத்தோடு நில்லாமல் உழவர் விழா, மற்றும் வேறு பல விழாக்களை முன்னின்று நடத்தி ஒரு பிரபலியமான கம்யூனிச பரப்புரையாளரானார். இவர் சிறு வயதிலிருந்து பின்பற்றிய கம்யூனிச கொள்கைகளிலிருந்து கொள்கை மாறாது, தன் இலட்சியத்தை இறுதிவரை கொண்டு சென்ற ஓர் இலட்சியவாதியாவார்.

"பிறருக்கு பயன்பட வாழ்பவர் எவரோ, அவ்வாறானவர்கு இறையருள் என்றும் துணைபுரியும்" என்ற கூற்றிற்கமைய, அமரர் சின்னத்தம்பி சண்முகநாதன் அவர்களின் ஆன்மா சாந்தியடையவும்,அத்தோடு அன்னாருடைய குடும்பத்தினர் இறை அன்பிலும், இறை அடைக்கலத்திலும் வாழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நிற்கும்.

முருகேசு சாந்தகுமார்
கனடா

# St. Peter's church
## Church of American Ceylon mission

The Rev.R.Johnselvam
Paris Priest

Kudiyiruppu, Vavuniya,
Sri Lanka.

TPNo: 0242222199


Date :- 21.04.2016

**"இறைவன் அருளால் ஆன்மா அமைதியடையட்டும்"**

அமரர். சின்னத்தம்பி சண்முகநாதன் இவ்வுலக வாழ்வை நிறைவு செய்து விண்ணுலக வாழ்வில் சென்றுள்ளார் என்பதில் சந்தேகம் இல்லை. பண்பான பேச்சும், நல் நட்பும், தோழமையுடன் பழகும் பண்பும், அமைதியான நடையும் எதனையும் ஆய்ந்து அறிந்து செயற்படுத்தும் திறனை கொண்டு விளங்கினார்.

நல்ல தந்தையாக, நல்லதோர் பெரியப்பாவாக, நண்பர்களுடன் நட்புடன் பழகும் நண்பராக தோழனாகவும் மற்றோருக்கு அறிவுபுகட்டும் ஞானியாகவும், பிறர் வாழ்வை தட்டி உயர்த்தும் உயர் பண்பாளனாகவும் வாழ்ந்தார்.

தான் பிறந்த மண்ணில் பற்றும், செல்லுமிடமெல்லாம் நட்புறவையும் வளர்த்து, பல பரிமாணங்களை வென்ற மகானாக திகழ்ந்தார். வள்ளுவர் மிக அழகாக கூறுகின்றார் :

"நிலவரை நீன்புகழ் ஆற்றின் புலவரைப்
போற்றாது புத்தேன் உலகு"

அமரர். சின்னத்தம்பி சண்முகநாதன் அமைதியோடு, பரவசம், பரபரப்பு இல்லாமல் வாழ்ந்து வழிகாட்டிய பெரியார். எனவே வள்ளுவர் சொல்லுவதுபோல் நல்லதோர் செயலைச் செய்தால் அவரை வானுலகம் போற்றும் புலவரைப் போற்றாது. எனவே நண்பர்கள், தோழர்கள், உறவினர்கள், குடும்பத்தினர் போற்றும் நல்ல நண்பராக வாழ்ந்து முடித்தார் தன் வாழ்வை. எனவே "வாழும் போது வார்த்தையால் நன்றி சொல்லுவோம் வார்த்தை இன்றிப் போகும் போது மௌனத்தால் நன்றி சொல்லுவோம்"

அடியார் விட்டுச்சென்ற நல்ல பண்பை எமதாக்கி வாழ அர்ப்பணிப்போம். இதுவே அவருக்கு நாம் செய்யும் பெரிய அஞ்சலியாகும். குடும்பத்தினர், இன சுற்றத்தார், நற்புடன் பழகிய நண்பர்கள், தோழமையுடன் என்றும் பழகும் அன்புக்குரிய யாவருக்கும் இறையருளும் அமைதியும் கிடைப்பதாக. அமரர். சண்முகநாதன் ஆன்மா இறை சமூகத்தில் அமைதியுடன் இளைப்பாற பிரார்த்திக்கின்றேன்.

நன்றி.

Rev.R.John Selvam,
St.Peter Church.
Kudiyiruppu, Vavuniya.

## அன்புக்கு அண்ணன் சண்முகநாதன்

நெடுந்தீவையும் மக்களையும் தனதாக்கி கொண்டு உழைத்த உத்தமன் அன்புக்கும் பெரும் மதிப்பிற்குமுரிய ஆசான் சண்முகநாதன் என்றால் மிகை ஆகாது.

முற்போக்கு வாலிப இயக்கத்தின் முதுகெலும்பாக செயற்பட்டு நெடுந்தீவின் வளர்ச்சிக்கு அரும் பாடுபட்ட அண்ணல், கல்வியில் அதிகப்படியான அறிவைக் கொண்டு பல்வேறு தரப்பட்ட மக்களுக்கு அறிவுப் பசியை தன் கையால் ஊட்டி, தனக்கென ஓர் தனியென இடத்தை பிடித்துக் கொண்ட செம்மனச் செம்மல்

நெடுவாழ் மக்களுக்கு போரட்ட காலங்களில் வந்த பெரும் இடர்பாடுகளுக்கு முகம் கொடுத்து பிரச்சனைகளை தீர்த்து வைத்த நீதி தவறாத நீதிமான். மக்களின் சேவையே மகேசன் சேவையாற்றிய சேவையாளன்.

இவர்கள் வழியில் வந்த இளைஞர்கள் தான் இப்பொழுதும் இவர்கள் பால் சேவைகளை ஆற்றி வருகின்றார்கள் .இவரது அறிவுத் திறமையின் மூலம் கழகங்களுக்கான யாப்புக்கள், செயற்திட்டங்கள் என்பன பற்றிய ஆக்கிய ஆக்கங்களை எழுதி வைத்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவரது சேவை எமக்கு மட்டுமல்ல ஏனைய ஊர்களிலும் விசேடமாக வன்னி சார் உறவுகளுக்கும் இவரது பணி பலம் சேர்த்தது. எனவே தான் இவரது இழப்பை முன்னிட்டு எம் உறவுகளின் தாங்காத துயரத்தில் புலம் பெயர் உறவுகளும் கண்ணீர் அஞ்சலி நிகழ்வினை நடாத்தி தங்களது துயரத்தினை வெளிப்படுத்தினர்.

தான் கனடாவில் இருந்த காலங்களில் நெடுந்தீவு கிழக்கு சனசமூக நிலைய நூலகரின் ஊதியத்தை இறக்கும் வரை அனுப்பி இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இந்திய பேராசிரியர்கள் போற்றும் வகையில் தனது கவிதைகளை எழுதியவர் என்பதும் போற்றுதற்குரியது. அந்த வகையிலே இவர் அறிவு பெட்டகம் ஆனால் அவர் மரணித்தாலும் அவரது ஒவ்வொரு நகர்வும் எங்களது மக்களின் மனதுகளில் உயிருடன் இருக்கின்றது என்பதை நினைந்து அவரது நினைவில் எமது சேவை என்றும் தொடரும்

"அவரது ஆத்மா என்றும் இறைவன் அடியில்"

திரு.எ.அருந்தவ சீலன்
தலைவர்
இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்
நெடுந்தீவு

## தோள் கொடுக்கும் தோழன்

மார்க்ஸின் அடிப்படையில் லெனினின் வழிவந்து மாஓவின் சிந்தனையில் தன்னை வரித்து, அந்நெறி நின்று "மக்களிடம் கற்று அதைப் புடமிட்டு மக்களிடமே திருப்பிக் கொடுங்கள்" என்ற நவசீனத்தின் சிற்பி மாசேதுங் சிந்தனையில் தெளிவு கண்டவர். "மக்களுக்காக நாம்" என்ற மனோநிலையின் சேவையில் வாழ்ந்தவர்தான் தம்பி சண்முகநாதன் - சண் அவர்கள்.

உண்மையாய் இருந்தார், நேர்மையாய் செயற்பட்டார், பயமில்லாது கருமங்களை முன்னெடுத்தார். நம்மவர்களின் எந்தவிதமான சிக்கலான பிரச்சினைகள் என்றாலும், சரியாகவும், தீர்க்கமாகவும் எவரும் ஆட்சேபனை தெரிவிக்காத வகையில் தீர்த்து வைப்பது அவரின் சாதுரியம்.

நல்ல கவிஞன், கதை - நாடகாசிரியர், கட்டுரையாளன், விமர்சகர், ஆய்வாளர். அவரின் கல்வி பலரின் வாழ்க்கைக்கு வழிசமைத்தது என்றால் அது உண்மையே தவிர புகழ்ச்சி ஒன்றுமில்லை.

பிறந்தோர் இறப்பது பொது நியதி என்றாலும், அவரை இயமன் விரைவாகக் கவர்ந்துவிட்டான். இதுதான் தாங்கொணா வேதனை.

நல்ல உறவினன், நல்ல நண்பன், நம் தோழர்களின் கஸ்டத்தில் துணிந்து தோள்கொடுக்கும் தோழன். அவரின் பிரிவில் துயருற்றிருக்கும் அன்புத்துணைவியார், அருமையான பிள்ளைகள், மதிப்பான மருமக்கள், கொஞ்சி மகிழும் பேரக்குழந்தை, உடன்பிறப்பு, உறவினர்கள், நண்பர்கள், தோழர்களுடன் இணைந்து அவருக்கு நித்திய வீட்டுப்பேற்றை அருளவேண்டும் என்று இறைவனை வேண்டுகின்றேன்.

- நெடுந்தீவு இரா. தர்மலிங்கம்

## ஆலமரத்திற்கு ஓர் விழுதின் விசும்பல்

என் அன்னை பூமியில் - நீங்கள்
எனக்கோர் ஆசான்..
ஆழி கடந்த அடைக்கல பூமியில் - நீங்கள்
எனக்கோர் தோழன்.
நாம் வழித்தடம் பதிக்க வந்த மண்ணில் - நீங்கள்
எனக்கோர் வழிகாட்டி..

சண் அண்ணனே சண்முகநாதனே
நீங்கள் ஓர் சூரிய புத்திரன்
sun ஒளி முகமாய் பிரகாசித்தவனே
சடுதியாய் உன் உயிர் பிரிந்ததேனோ?
நீங்கள்..
மற்றவர் பார்வையில் எப்படியோ? ஆனால்
எனது பார்வையில் - நீங்கள்
காடு மலை கடந்து காற்றைச் சுவாசித்த
"ஹோசிமின்"
உங்கள் உள்ளமோ உலகம் அறியாத
"கார்ல்மாக்ஸ்"
உங்கள் மனதின் எண்ணத்தில் - நீங்கள்
முண்டாசு கட்டாத "பாரதி"
நடைமுறை வாழ்விலோ ___ நீங்கள்
தன்னம்பிகை கொண்ட "கொலம்பஸ்"
என் இதயப் பரப்பிலோ ___ நீங்கள்
அன்பின் ஆழக்கால பதித்த "ஆம்ஸ்ரோங்"

நீங்கள் என்ன மரணித்தா விட்டீர்கள்?
இல்லை
மறைந்தா விட்டீர்கள்?
இல்லை - இல்லவேயில்லை
காற்றிலே ஒளியிலே
கம்மியூனிச கடலிலே ___ ஏன்
என் காருக்குள்ளேயும்
வாழ்ந்து கொண்டேயிருக்கின்றீர்கள்
வந்து கொண்டேயிருக்கின்றீர்கள்
என்ன செய்வது - இது உங்கள்
அன்பிற்கினியவர்க்கு
ஆளாத் துயர்தான்
இருந்தாலும்.
மரணம்' மரணம்
அது வாழ்வின் முடிவல்ல..

தோழனே
நீங்கள் என்றென்றும்
எம்மோடிருக்கின்றீர்கள் எம்மோடிருப்பீர்கள்
அதற்காக.
நாம் செய்வதெல்லாம்
நம் கண்ணீர் பூக்களை காணிக்கையாக்குவதே

அழியாத நினைவுகளுடன் ..அழுத விழிகளுடனும்
A.T. குமார்.

## அமரர் சண்முகநாதன்.!

1971 இல் யாழ். தொழில் நுட்பக்கல்லூரியில் நான் வணிகத்துறையில் ஒரு மாணவன். எனது சகமாணவன் நெடுந்தீவில் இருந்து வந்த சண்முகநாதன்..

இடதுசாரி சிந்தனயால் நாம் இருவரும் ஒன்று பட்டோம்.

அம்முறை தொழில் நுட்பக்கல்லூரி வணிக மாணவர் மன்ற தேர்தலில் தலைவர் செயலாளர், பொருளாளர் பதவிக்கான வாக்கெடுப்பு. உடனடியாக ஆட்களின் பெயர் பிரேரித்து வழிமொழியப்பட்டு கைகள் உயர்த்தி வாக்கு எண்ணப்படும். தலைவர், பொருளார் பதவிகளுக்கு பெயர்கள் ஏகமனதாகத் தெரிவிக்கப் பட்டுவிட்டன.

நான் எதிர்பாராதவண்ணம் சண்முகநாதன் எனது பெயரை செயலர் பதவிக்கு முன்மொழிந்துவிட்டான். "நயினை நாக. பஞ்சாட்சரம்" என்னும் தமிழ் அபிமானியை செயலாளராக்குவதாக உள்ளூரத் தீர்மானிக்கப் பட்டிருந்தது அதிலும் முதலாண்டு மாணவர்கள் தேர்தலில் நிற்கக்கூடாது என்கின்ற எழுதாச்சட்டமும் இருந்து.

எனது பெயர் முன் மொழியப்பட்டு பத்து நிமிடங்கள் வழிமொழிய யாரும் முன்வரவில்லை. அப்போது நான் ஈழநாடு நாவல் போட்டியில் பரிசு பெற்று எனது வகுப்பு மாணவர்கள் மத்தியில் பிரபலமாகி இருந்தேன். சடுதினன எனது வகுப்பு மாணவி ஒருவர் (ராஜிவி) எழுந்து என்னை வழி மொழிந்தார். வாக்கெடுப்பு நடந்தது.

190 வாக்குகள் எனக்கும் 10 வாக்குகள் நாக. பஞ்சாட்சரம் அவர்களுக்கும் கிடைத்தது. (முழு பெண் வாக்குகளுமே எனக்குத்தான் கிடைத்தது. எனது அபிமானத்தினால் அல்ல, ராஜீவிக்காகக் கிடைத்தது). முடிவை அறிவித்ததும்... வணிகப் பகுதி பொறுப்பாளர் ஒரு வேண்டுகோளை என்னிடம் பகிரங்கமாக விடுத்தார். "முதலாம் ஆண்டு மாணவர்கள் இந்த பதவிகளுக்கு போட்டியிடக்கூடாது என்கிற எழுதா விதிக்கமைய "சேவியர்" இபோட்டியில் இருந்து விலகி மற்றைய போட்டியாளருக்கு இடம் வழங்குமாறு கேட்டுகொள்ளுகிறேன்.."

ஒலிவாங்கி என்னிடம் தரப்பட்டது. நான் பேசத்தொடங்கினேன்...

"அனைவருக்கும் வணக்கம் உண்மையில் இந்த பதவிக்கு போட்டியிடும் எண்ணம் எனக்கு கிஞ்சித்தும் இருக்கவில்லை. நாக. பஞ்சாட்சரம் என்து நல்ல நண்பர். வணிகப் பகுதி பொறுப்பாளரின் கருத்து நியாயமானதுதான், அனால் இந்தப் பதவிக்கு என்னை முன்மொழிந்த சண்முகநாதனையும், வழி மொழிந்த ராஜீவியையும் எனக்கு வாக்களித்த 190 சகோதர சகோதரிகளையும் ஒரு கணம் நினைத்துப்பார்கிறேன். நான் வாபஸ் பெறுவதன் மூலம் அவர்களுக்கு ஒரு தலைக்குனிவை ஏற்படுத்த நான் விரும்பவில்லை. எனவே இப்பதவியை நான் ஏற்றுக்கொண்டு செயல்ப்படுவேன் என்றேன்.

கைதட்டலால் மண்டபம் அதிர்ந்தது.

பின்நாட்களில், வணிக மன்றச் செயல்பாடுகளில் நான் பலவித நெருக்கடிகளை அனுபவித்தேன். சண்முகநாதன் எனக்கு உறுதுணையாக இருந்தான்.

இன்று அவனது மரணச் செய்தி எனக்குக பழைய நினைவை கிளறிவிட்டது.

அவனும் நானும் இருவேறு அணிகளாக அரசியலில் இறங்கினோம்... மிக நீண்ட பிரிவு... அவன் எங்கோ... நான் எங்கோ... இன்று தான் அவன் கனடாவில் வாழ்ந்தான், இறந்தான் என அறிகிறேன்.

கனடாவில் எனது "நந்தினி சேவியர் படைப்புகள்" நூலை அவன் வாங்கி இருக்கலாம். வாசித்தும் இருக்கலாம். அவனுக்கு எனது மௌன அஞ்சலி அவனது குடும்பத்தாருக்கு என் ஆழ்ந்த அனுதாபங்கள்.

நந்தினி சேவியர்

## தோழர் சண்! மறக்கமுடியாத ஓர் அற்புத மனிதர்

### - எஸ்.கே. விக்னேஸ்வரன்

*1981*இன் இறுதிக்காலம் என்று ஞாபகம். மொறட்டுவ பல்கலைக்கழகத்தில் படித்துக்கொண்டிருந்த காலம். பல்கலைக்கழகத்தின் தமிழ் சங்க உதவிச் செயலாளராகவும், தமிழ்சங்க மலரான நுட்பம் இதழின் இணையாசிரியர்களில் ஒருவராகவும் அமைப்பு வேலைகளுடன் ஈடுபாட்டுடன் இயங்கிக்கொண்டிருந்த காலம். கூடவே வவுனியாவில் அப்போது டொக்ரர் ராஜசுந்தரம் அவர்களது தலைமையில் இயங்கிய காந்தீயத்தின் வன்னியிலிருந்த பண்ணையொன்றிலும் குடியேற்றத்திலும் தமிழ் சங்கத்தின் சார்பில் தொண்டர்களாக எமது பல்கலைக்கழக மாணவர்களுடன் வாரஇறுதி நாட்களில் சேர்ந்து அவர்களது பணிக்கு உதவிவந்தோம்.

இந்தச் சந்தர்ப்பத்தில் ஒருநாள், தமிழ் மக்களின் விடுதலை தொடர்பான மூன்று நாள் கருத்தரங்கு ஒன்று நடப்பதாகவும் அதற்கு எமது தமிழ் சங்கத்தை சார்ந்த ஒருசிலர் பிரதிநிதிகளாக வரமுடியும் என்றும் டொக்ரர் ராஜசுந்தரம் அறிவித்திருந்தார். நானும் நண்பர் கிரிதரனும் தமிழ் சங்கத்தின் சார்பில் அந்த நிகழ்வுக்குச் சென்றது ஞாபகம். வேறு யாரும் வந்தார்களா என்பது ஞாபகத்தில் இல்லை. அது ஒரு அருமையான அனுபவம். அப்போதே முழு நேர ஊழியர்களாக தமிழ் மக்களின் விடுதலைக்காக வேலை செய்த பலரை அங்கு பார்க்கக்கிடைத்தது. குறிப்பாக யோகன் கண்ணமுத்து, (றஹ்மான்) ஜான், வாசு போன்றவர்களைச் சந்தித்தேன். அந்த நிகழ்வில், அப்போது எனக்கிருந்த அரசியல் கருத்துக்களுடன் இவர்கள் யாரும் ஒத்துப் போகக் கூடியவர்களாக இருக்கவில்லை. ஆனால், நெடுந்தீவிலிருந்து வந்த சின்னத்தம்பி சண்முகநாதன் என்பவருடனும், அவருடன் கூட வந்த மிக இளவயதான இன்னொரு தோழருடனுமான உரையாடல் என்னை மிகவும் கவர்ந்தது. ஆச்சரியப்படத்தக்க விதத்தில், மிகவும் தெளிவாகவும் ஆழமாகவும் தமிழ் மக்களது பிரச்சினைகளை வரலாற்று அடிப்படையில் விளக்கக் கூடிய விதத்தில் அவர்கள் தெரிந்து வைத்திருந்தனர். தமிழ் மக்கள் ஜனநாயக முன்னணி என்ற பெயரில் தாம் இயங்குவதாகவும், அவர்கள் தெரிவித்தனர். அவர்களிடம் அவர்களது அமைப்பு தொடர்பான எழுத்திலான ஆவணங்கள் எதையும் எனக்கு தருவதற்கு அப்போது கைவசம் இருக்கவில்லை. ஆனால் அந்தச் சந்திப்பின் போது அவர்களின் குரலில் இருந்த உறுதியும் நம்பிக்கையும், தமது அமைப்பின் வரலாற்றுரீதியான மாற்றம் எப்படி நடந்தது, சண்முகதாசனின் கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து, மாக்சிய லெனியக் கட்சி எப்படி உருவானது, பின்னர் அதிலிருந்து எப்படி ஜனநாயக முன்னணி உருவானது என்பது பற்றி அவர்கள் தெரிவித்த கருத்துக்கள் என்னை மிகவும் ஈர்த்தன. நீங்கள் ஏன் தமிழீழம் என்ற சொல்லை தவிர்த்து, தமிழ் மக்கள் ஜனநாயக முன்னணி என்று பெயரிட்டிருக்கிறீர்கள் என்ற எனது கேள்விக்கு அவரது பதில் தெளிவாக இருந்தது இப்போதும் ஞாபகம் இருக்கிறது. நாமும் தமிழீழத்தை ஏற்றுக்கொள்கிறோம். அது பற்றி நமக்குள்ளே பேசிக்கொண்டிருக்கிறோம். தமிழீழம் என்பது தமிழ் மக்களது ஒரு ஜனநாயகக் கோரிக்கைதானே? தமிழ் மக்களது ஜனநாயக விடுதலை என்பது வேறென்ன? தமிழீழ விடுதலை என்பது வெறும் எல்லை பிரிக்கும் விடயம் அல்லவே? என்று அவர் சொன்னார். (இந்த வார்த்தைகள் அவருடையவை அல்ல. அவை என்னவை. ஆனால் அவரது பேச்சின் சாரம் இதுதான்) இடதுசாரி இயக்கம் தொடர்பாக என்னிடம் இருந்த விமர்சனங்களை, குறிப்பாக தமிழ் மக்களின் பிரச்சினையை அவர்கள் கணக்கிலெடுக்காமல் இருந்தது பற்றிய எனது விமர்சனங்களை அவர்கள் வாயிலாகக் கேட்டதில் நான் மிகவும் மகிழ்ச்சியுடன் இருந்தேன். அங்கு வந்திருந்த பிறரும் இடதுசாரிய இயக்கங்களை விமர்சித்திருந்தாலும், அவை தமிழுணர்வின் பாற்பட்ட விமர்சனமாகவே இருந்தன. மார்க்சிய கண்ணோட்டத்திலிருந்து விலகாமலும், இன உணர்வுக்குள் போய் வீழாமலும், தமிழ் மக்களது பிரச்சினையை ஒரு ஜநாயகப் பிரச்சினையாகவும், அதற்காக இடதுசாரிகள் போராடுவது ஒரு வரலாற்றுக் கடமை என்பதாகவும் அவர் தனது மென்மையான ஆனால் அழுத்தம் திருத்தமாக சொன்ன வார்த்தைகள் எனக்கு நம்பிக்கை ஊட்டுபவையாக இருந்தன. கடிதத் தொடர்பு கொள்வதாக சொல்லி அவர்கள்

விடைபெற்றுச் சென்றனர்.

இப்படித்தான் தோழர் சண்ணுடனான எனது முதலாவது சந்திப்பு நிகழ்ந்தது. அதன் பிறகு ஏனோ அவர்களிடமிருந்து எனக்கு எந்தக் கடிதமும் வரவில்லை. ஆனால் அவர்கள் கிரிதரனுக்கு அனுப்பி வைத்திருக்கிறார்கள் என்பதை, அவர்களது முதலாவது தேசிய மாநாட்டு அறிக்கை வேறொருவர் மூலமாக என் கைக்குக் கிடைத்ததன் பின்னர் தான் எனக்குத் தெரியவந்தது. அவரிடம் வாங்கிப் படித்திருக்கலாம். ஆனால் கிரிதரன் பல்கலைக்கழகத்தை விட்டு வெளியேறிவிட்டதால் பிறகு அடிக்கடி சந்திக்கும் வாய்ப்பும் குறைந்து போய்விட்டதால் அதனைப்பெற்று கொள்ள முடியாமல் போய்விட்டது. ஆயினும் அவரையும் அவரது குரலையும் எனக்கு மறக்க முடியவில்லை. பார்த்ததும் பிடித்துப் போகிற, சதா புன்னகைத்தபடி இருக்கும் முகம். மிகவும் மென்மையானதும், நிதானமானதுமான உரையாடல் பண்பு. கருத்து விவாதங்களில் நுளைந்து அபிப்பிராயம் சொல்ல விரும்பாமல் அமைதியாகக்கேட்டுக் கொண்டிருக்கும் இயல்பு என்பவை அவருக்கே உரிய முத்திரைகள். கருத்தரங்கின் பின்னான பொழுதில் பேசும் போது அங்கு தெரிவிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக தனது கருத்துக்களை மனம்திறந்து தெளிவாகப் பேசுவார். ஆனால் அவர் உரையாடல் நேரத்தில் தனது கருத்துக்களை முன்வைக்கவில்லை. அவர்கள் அங்கு வந்ததே அந்த நிகழ்வில் பேசப்படும் கருத்துக்கள் பற்றி அறிவதற்கு மட்டுமே என்பது போல எனக்குத் தோன்றியது. அங்கு பங்குபற்றிய ஒவ்வொருவர் பற்றியும், அப்போது இயங்கிய இயக்கங்கள் ஒவ்வொன்று பற்றியும் அவர்களது கருத்துக்கள் பற்றியும் அவர்கள் மிகவும் விபரமாகத் தெரிந்து வைத்திருந்தார்கள்.

இந்தச் சந்திப்புக்குப் பிறகு நான் அவரை சந்தித்தது, 1983 யூலைக் கலவரத்துக்குப் பின், உயிர் தப்பிப்பிழைத்து ஊரில் வந்து நின்ற காலத்தில். அப்போது, தமிழ் மக்கள் ஜனனாயக முன்னணியின் முதலாவது தேசிய மாநாட்டு அறிக்கையை நான் படித்து விட்டிருந்தேன். 1980 ஒக்ரோபரில் நடந்த தேசிய மாநாட்டில் வெளியிடப்பட்ட அறிக்கையை என்னை சந்தித்தபோது அவர்கள் இன்னமும் அச்சிடாமல் இருந்திருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். "நெடுந்தீவு 11ம் வட்டாரத்தை சேர்ந்த சின்னத்தம்பி சண்முகநாதன் என்பவரால் அளவெட்டி ஜெயா அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது" என்ற குறிப்புடன் வந்திருந்த இந்த அறிக்கையைப் படித்தபின், அவரை மீண்டும் சந்திக்கும் ஆர்வம் துளிர்த்தது. எனக்கு இந்த நூலைத் தந்தவரை அவரை சந்திப்பது பற்றிக் கேட்டேன். சந்திக்கலாம், விரைவில் சந்திப்பீர்கள் என்று சொன்னார். ஆனால் சந்திக்கும் வாய்ப்புக்கிட்டவில்லை. பின்னர் அதன் இரண்டாவது தேசிய மாநாடு நடந்ததும், அதன் பின்னான அரசியல் முன்னெடுப்பின் போதும் அவரை நான் பலமுறை சந்தித்திருக்கிறேன். இரண்டாவது மாநாட்டின் போது அவர் என்னுடன் நீண்டநேரம் உரையாடினார், பல தோழர்களை அறிமுகம் செய்து வைத்தார். அந்த மாநாடு, அதன் பின்னான அரசியல் நடவடிக்கைகள் என்பன தனியாகப் பேசப்பட வேண்டியவை. ஆனால் மாநாடு முடிந்த பின் கிட்டத்தட்ட ஒரு ஆறு மாத காலத்தின் பின் அவரை சந்தித்த போது அவரது கோலத்தைக் கண்டு நான் திகைத்துவிட்டேன். அவரது அந்தப் புன்னகை மட்டும் இல்லாவிட்டால் அவரை அடயாளம் கண்டிருக்க முடியாதளவுக்கு அவரது தோற்றமே மாறிவிட்டிருந்தது. கன்னம் கரேலென இருந்த அவரது தலைமுடி முற்றாக வெள்ளை வெளேரென்று மாறிவிட்டிருந்தது. அவரது புன்னகையையும் மீறி முகத்தில் ஒருவகை சோகம் படர்ந்திருப்பதை அவதானித்தேன். இரண்டாவது மாநாட்டுக்குப்பிறகான அமைப்பின் நடவடிக்கைகளில் அவருக்கு அவ்வளவு திருப்தி இல்லை என்பது அவரது பேச்சில் தெரிந்தது. ஆயினும் அவர் அமைப்புடனும், அதன் தோழர்களுடனும் நெருக்கமாகப் பழகிவந்தார்.

1985க்குப் பின்னான நீண்ட காலத்திற்கு அவரை சந்திக்கும் வாய்ப்புக் கிடைக்கவில்லை. அவர் எங்கே இருக்கிறார் என்பதையும் அறியக்கூடிய வாய்ப்பு இருக்கவில்லை. 2013ல் கனடாவில் ஒரு நூல் வெளியீட்டுக் கூட்டத்தில், "இவரை தெரிகிறதா" என்று ஒருவரைக் காட்டி என்னிடம் குமரன் கேட்டபோது தான் அவரை மீண்டும் சந்தித்தேன், அதன் பிறகு அவருடன் அடிக்கடி புத்தக வெளியீடுகள் இலக்கியக் கூட்டங்கள் என்று அடிக்கடி சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது. தோளில் தொங்கும் ஒரு பையில் எப்போதும் ஏதாவது

ஒரு புத்தகம் இருக்கும். அது /பிராங்புட் மார்சியமாகவோ, ஒரு கன்னட மொழிபெயர்ப்பு நாவலாகவோ, அல்லது ஏதாவது கவிதை தொகுப்பாகவோ இருக்கும். அவர் ஒரு பன்முக வாசிப்புக் கொண்ட ஒருவர். எல்லாவித நூல்களையும் வாங்கிப் படித்தார். மக்கோவன் அன் /பிஞ் மோலில் அவரை நான் மூன்று நான்கு தடவை புத்தகத்துடன் கண்டிருக்கிறேன். புத்தகத்தை மூடி வைத்துவிட்டு, சந்தோசமாகக் கதைப்பார். கனடாவில் இருக்கும் அவரது முன்னைநாள் மர்க்சிய நண்பரும், எனக்கும் தெரிந்தவருமான ஒருவரைப்பற்றிக் கேட்டு, அவரை சந்தித்தீர்களா என்று கேட்டேன், அவரது பதில் எனக்குத் தூக்கிவாரிப்போட்டது. அவர் கேட்டார் "என்னத்துக்கு?" என்று. நான் புரியாமல், ஒன்றுக்கும் இல்லை சும்மாதான் கேட்டேன், சந்தித்தீர்களா என்று. எனக்கு ஒன்றும் தேவையில்லை" என்று எனது பக்கத்தை விளக்கினேன். ஒருகணம் தடுமாறிப் போய்விட்டேன் "இல்லை, நான் நீங்கள் கேட்டதுக்கு சொல்லவில்லை, அவர்களை என்னத்துக்குச் சந்தித்து" என்றுதான் கேட்டேன் என்றார். எனக்கு அப்போதுதான் மூச்சு வந்தது.

அதன் பின்னான நீண்டநேர உரையாடலின் போது, அவர் நிறைய விடயங்கள் பேசினார். கம்யூனிஸ்ட் கட்சிபற்றி, ஜனநாயக முன்னணி பற்றி, சம்பந்தப்பட்ட தோழர்கள் பற்றி நிறையச் சொன்னார். நிறைய சுவாரசியமும், முக்கியமான வரலாற்றுத் தகவல்களைக் கொண்டதுமான உரையாடல் அது. ஒரு கட்டத்தில் நான் அடக்க முடியாமல் இவற்றை நீங்கள் எழுதலாமே என்றேன். ஒரு மெல்லிய சிரிப்புடன் மௌனமாக இருந்தார், உங்களுக்கு வேணுமென்றால், இப்படி வாராவாரம் சந்தித்து பேசினால் அவற்றை நான் எழுதுகிறேன், நீங்கள் திருத்திவிட்டு தரலாம், அப்படிச் செய்வோமா என்றேன். அதே புன்னகையுடன் "பாப்பம்" என்று சொன்னார். அந்தப் பாப்பம் என்பது ஒருவகைப் பிடிகொடாத மறுப்பாக எனக்குப் பட்டது.

பிறகு பேசலாம் என்று விடை பெற்றேன்.

அந்தப் "பிறகு" திரும்ப வரவே இல்லை. அவரது மறைவுச் செய்திதான் திடுக்கிடும் தகவலாக சேனா மூலமாக எனக்கு வந்து சேர்ந்தது. அவர் எவ்வளவு திடகாத்திரமாக நடந்து திரிந்தார். கலைஞர் கிருபாவுடன் அவரை எத்தனை தடவை கண்டிருக்கிறேன், சலிப்பில்லாமல் நடந்தே திரிந்த மனிதர், இவ்வளவு விரைவில் இப்படி ஆகிவிட்டது என்பதை நம்பவே முடியவில்லை.

ஒரு அற்புதமான ஆத்மா. பழக இனிய பண்பாளர். அர்ப்பணிப்புள்ள தோழர். ஆர்ப்பாட்டமில்லாத ஆழமான மனிதர். அவர் இப்போது நம்மிடையே இல்லை. அவர் நினைவுகளுக்கு என் அஞ்சலிகள்

## நெடுந்தீவுக்கு ஓர் சமூகப்பணியாளன்

"ஒரு மனிதன் வாழ்நாளில் வாழும் முறையைக் கொண்டே வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படுகின்றான்" அமரர் சின்னத்தம்பி சண்முகநாதன் அவர்கள் உள்ளத்தில் தூய்மை, அமைதி, அடக்கம், மற்றும் குணத்தின் வடிவமும் கடமையும், கட்டுப்பாடும் அவரின் உயர்வின் அடித்தளம். சேவையும், தொண்டும், அவரின் பிறப்பின் கொடை. அன்னார் அன்று நெடுந்தீவு முற்போக்கு வாலிப இயக்கத்தின் ஆரம்ப கர்த்தாக்களில் ஒருவராக இருந்து அக்காலத்தில் என்னையும், அதில் இணைத்து நெடுந்தீவின் முன்னேற்றத்திற்காகவும், சாதி, சமூக, ஒற்றுமைக்காகவும், ஆற்றிய பணிகளை சமகாலத்தில் நெடுந்தீவில் வாழ்ந்தவர்கள் எவருமே மறக்கமாட்டார்கள். அமரர் சண்முகநாதன் அவர்கள் எமது குடும்பத்தின் உறவினராக (சித்தப்பா) இருந்தாலும், எம்மோடு ஓர் சகோதர அன்போடேயே தமது பாசத்தை பொழிந்தவர். அவர் எனது அம்மாவின் அந்தியேட்டி நினைவு மலரில் பக்கம் 12ல் கண்ணீரின் எண்ணங்கள் என்ற தலைப்பில் பதிவுசெய்துள்ள வரிகளை இந்த வேளையில் அவருக்கே சமர்ப்பணம் ஆக்குகின்றேன்.




உறவால் மைத்துனியாய்
உள்ளத்தால் தாயாகி
நின்றன் புதல்வரோடு
என்னைக் கணித்தவளே
உந்தனது ஆத்மா
உமைபாகன் பதம்சேர
எந்தன் இதயத்தால்
என்னாளும் வேண்டுகின்றேன்.

சண்முகநாதன்..

அன்னாரின் ஆத்தம சாந்திக்காக இணைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

சு. புண்ணியலிங்கம்.
மன்னார்.

## நினைவில் நீங்காதவர்

நண்பனாய் மந்திரியாய்
நல்லாசிரியனுமாய்
பண்பிலே தெய்வமாய்
பார்வையிலே சேவகனாய்

என்ற பாரதியின் படல்வரிகளை தனதாக்கிக் கொண்ட சகோதரர் சண்முகநாதன் மண்ணையும் மக்களையும் நேசித்தவர். நிறைகுடம் தளம்பாது என்பது போல ஆழ்ந்த அறிவும் எளிமையும் தன்னடக்கமும் கொண்ட மனித நேயமுள்ள பண்பாளர். இவரது இளமைக் காலங்களில் உணர்ச்சி மிக்க கவிஞனாக எம் ஊரில் ஆங்காங்கே நடக்கும் அநியாயம் கண்டு கலங்கி கவிதைகள் மூலம் தன் கருத்துக்களை வெளிக்காட்டியவர். இளைஞர்கள் மத்தியில் மிகவும் மரியாதைக்குரியவராகவும் சமூக சீர்திருத்தத்தில் அதிக நாட்டம் கொண்டவராகவும் வாழ்ந்த ஓர் சகோதரன் எம்மிடையே இல்லை என நினைக்கும்போது மனம் மிகவும் வேதனையடைகின்றது. இவரின் இழப்பு இவர் குடும்பத்திற்கு மட்டுமற்றி எமது ஊருக்கும் பேரிழப்பாகும். இப்பிரிவுத் துயரில் உறைந்து போயிருக்கும் குடும்பத்தவர்களுக்கு ஆழ்ந்த அனுதாபத்தினைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய நாம் அனைவரும் இறைவனைப் பிரார்த்திப்போமாக.

சரஸ்வதி ஜேம்ஸ்

## கிளிநொச்சி நண்பர்களும் தோழர் சண்முகநாதனும்

நெடுந்தீவு பெற்றெடுத்த பேராளன், அவ்வூர் முற்போக்கு வாலிபசங்கத்தின் முன்னோடி,
நெடுந்தீவு மண்ணின் தோழை என்ற சொல்லுக்கு புதிய வலுச் சேர்த்த தோழன்
புன்முக அறிவு கொண்ட படைப்பாளி மாக்ஸிச சிந்தனையை மனமார ஏற்றவன் - மாவோவின்
கொள்கையினூடு மக்களை அணுகியவன் இன அடக்கு முறைக்கு எதிராக போர்க்குடி தூக்கியவன்
தன்னூரில் மட்டுமன்றி பலவூரில் மக்கள் சேவை செய்தவன். நெடுந்தீவு கடலானது நீண்ட பயணம் செய்த வழி
கிளிநொச்சி நின்று ஏழை விவசாயிகளுக்கு ஏற்றம் தரும் பல வழி காட்டியவன்
நன்பர்கள் குழாத்தில் நானும் ஒருவன் கண்ணாடி என்று என்னை அன்போடு அழைத்தவன்
மாவோவின் கருத்துக்களை ஆழமாக புரட்டிப் பார்க்க வைத்தவன்

கலைத்துறை ஆர்வம், அறிவுத் தேடல், ஊர்ப்பற்று, உலகப்பற்று மாக்ஸிச விருப்பம்
எல்லாம் சேர்ந்து நண்பர் குழாத்தை முற்போக்கு சிந்தனையாக்கியது.
தெய்வேந்திரம் மாஸ்ரரின் "ஒக்ஸ்போட் அக்கடமி" அனைவரும் கூடக் களமாய் அமைந்தது.
சந்திரன் (அண்ணா) சாள்ஸ், ஆனந்தன் (தபாலதிபர்) கணபதி, குகன், அப்பன், லோகன், லோகநாதன்,
சத்தியசீலன், வைகுந்தன், எனப் பலர் நல்ல நண்பர்களாய் நாலுபேர் கூற வாழ்ந்தோம்.
அத்தொடர் ஜெயராஜ், குஞ்சன் (கனடா) சிவலிங்கம், ஞானம் என நீண்டு சென்றது
சிரித்து பேசி, கதைத்து மகிழ்ந்த அக்காலம் ரம்மியமானது சமூக சேவையில் சந்தோசம்

கடந்த காலம் மறக்க முடியாத நினைவுகள் நல்ல நாடக நடிகனாய், கருத்தாயமிக்க நகைச்சுவையாளனாய்
சிறந்த இலக்கிய வாதியாய் கட்டுரையாளனாய், நடு நிலை கொண்ட நல்ல விமர்சகனாய்
முற்போக்கு குணாம்சம் கொண்ட போராளியாய் செயல் வீரனாய் தமிழ் மக்கள் போராட்டத்தில்
முற்போக்கு அம்சத்தை புகுத்தியவனாய் முதுமையிலும் , நாடு கடந்தும்
கொள்கை மாறா கொள்கை வாதியாய் பாட்டாளிகளின் தோழனாய் திகழ்ந்த நல்ல நண்பன் நல்ல தோழன்
சண்முகநாதனின் இழப்பு ஈடு செய்ய முடியாதது. நெஞ்சிருக்கும் வரை நினைவிலிருப்பான்
உலக மாற்றத்தை விரும்பிய அவனுக்கு நாம் செய்யும் கைமாறு அவன்
முன்னெடுத்த கொள்கைகள் செயற்பாட்டை விருப்பத்தை அடைந்திட உழைப்பதே.

கிளிநொச்சி நண்பர்கள் சார்பாக
நண்பன் தோழன்
தர்மா (கண்ணாடி) (தர்மானந்தன் ஓய்வு நிலை ஆசிரியர்)
என்னுடன் இணைந்து நினைவு கூறும்
கோ.கிறில்ரி ஆனந்தராஜா (நொச்சி ஆனந்தன்)
தபாலதிபர் கொழும்பு

## நீ மட்டும் ....

தோழமைக்கு இலக்கணமாய்
சுற்றி வந்த மானிடனே
செங்கொடியில் அணிதிரள - இளைஞர்
சிந்தனையைத் தட்டி விட்டாய்
கார்த்திகேசன்
கந்தசாமியை
காட்டிவிட்டாய் எங்களுக்கு
கைலாஸ் தன்னையும்
சொல்லிவைத்தாய் எங்களுக்கு.
நட்புக்குச் சாட்சியாய்
நானிலம் வலம் வந்தவனே
நட்பைவிட வேறோர்
நல்லுறவு இல்லையென
உற்றார்க்கும் உறவினர்க்கும்
ஊரிலுள்ள அனைவருக்கும்
உணர்த்தி நின்ற பெரியவனே
நண்பர் குழாம் இங்கிருக்க
நீ தனித்து சென்றதெங்கே?

அரங்கேறும் வார்த்தைகளின்
ஆசானே
உன்சொல்லே வேதமென
உணர்ந்தோர் பலருண்டு
உன் உருவம் பார்த்தாலே
ஊற்றெடுக்கும் திறமைகள்
துரோணர்க்கோர் ஏகலைவன்
உனக்கோ பல ஏகலைவர்
உழவர்க்கு விழா எடுத்தோம்
ஊர்க்கிணறெங்கும்
சேறெடுத்தோம்
கேணிகள் தூர்
வாரி நின்றோம் - சமூக
சேவைகள் பல புரிந்து நின்றோம்
எல்லாமே உன்னால்
என்றால் மிகையாமோ...
வாசிப்பே யாசிப்பென - நீ
வாழ்ந்தமுறை நானறிவேன்.
நீ பெற்ற அவ் இன்பம் - இவ்
வையகமும் பெறவேண்டி
இறுதிவரை உழைத்ததையும்
நானறிவேன் - இனியெல்லாம்
இதைச் செய்வார்
யார்தானோ?

மானிட நேயத்தை - தாரக
மந்திரமாய் கொண்டவனே...
சமத்துவம் என்பதனை
நான் உன்னிடம்தான்
கண்டுகொண்டேன்.
கைகட்டி வாய்பொத்தி - நீ
சேவகம் செய்யவில்லை - உன்னிடம்
அவை செய்து நின்றவையோ
ஏராளம் ஏராளம்.
மட்டிலாப் பொறுமை,
மாளாத பேரன்பு,
நட்டாற்றில் விட்டாலும்
சீர் தூக்கும் திறமை
திசை சிதறாச் சிந்தனைகள்
இத்தனையும் இன்றெங்கே?

முற்போக்கு வாலிபனாய்
நீ இருந்தாய்
உன் போக்கு
சத்தமற்ற இளைஞரையும்
சக்திக்குள் வாங்கியது.
சொல்லொன்று
செயல்வேறாய் நீ
இருந்ததில்லை - அந்த
சூத்திரத்தை எப்படித்தான்
வீசினாயோ தெரியவில்லை.
இரவுகளை விழுங்கிவிட்டு
இடது தத்துவ வித்துக்களை - நீ
சிதறவிட்ட எண்ணற்ற
நாட்களை நானெல்லோ
அறிந்துள்ளேன்.
சின்ன ஒரு தீவினிலே - நீ சிதறவிட்ட
அவ் வித்துக்கள்
எங்கெல்லாம் சென்று - தம்
முத்திரையைப் பதிக்கையிலே
நீ மட்டும் ஏனின்று
நெடுந்தூரம் சென்று விட்டாய்?

**வை.கருணைநாதன்**

## ஊருக்காய் உழைத்த பெருமகன்

நெடுந்தீவு கிழக்கு 11ம் வட்டாரத்தினை சேர்ந்த சின்னத்தம்பி குடும்பத்தில் பிறந்த 03 பிள்ளைகளில் முத்தவர் சின்னத்தம்பி சண்முகநாதன் அவர்கள் 03 பிள்ளைகளும் எங்களுடன் ஒட்டி உறவாடி மகிழ்ந்தவர்கள். தங்களது வாழ்வில் சமூகத்திற்காய் பல்வேறு பணிகளை மேற்கொண்டுள்ளார்கள். நாங்கள் பாடசாலைக் கல்வியினை முடித்து சமூக சேவையில் இணைந்து கொள்ள வேண்டும் என்கின்ற ஆசையும் உத்வேகமும் இவரையும் இவர் சார்ந்த நண்பர்களது செயற்பாடுகளை பார்க்கின்ற போதே ஏற்பட்டது.

நெடுந்தீவின் அபிவிருத்தி செயற்பாடுகள் கலை கலாச்சார வளர்ச்சிப் போக்குக்களையும் நல்ல முற்போக்கு சிந்னையோடு செயற்படுத்தி வந்தவர் அமரர் சண்முகநதன் என்றால் அது மிகையாகது. இவரது சேவை சமூகத்தில் எவ்விதமான ஏற்றத்தாழ்வுகளும் அற்று கிராம மக்கள் அனைவரையும் ஒன்றாய் நினைத்து பணியாற்றிய பெருமகன் நெடுந்தீவில் காணப்பட்ட சாதி அடக்கு முறைக்கு எதிராக செயற்பட்டார் என்பதும் குறிப்பிடத்தக்க விடயமாகும். தனது உறவுக்காரர் மட்டுமன்றி ஏனையவர்களையும் இணைத்து செயற்பட்டதுடன் துன்பப்படுகின்ற துயரப்படுகின்ற மக்களுக்காக தன் வாழ்நாளில் உழைத்தவர்.

இவரிடம் கல்வி கற்ற பலர் இன்றும் பல்வேறு உயர் தொழில்களில் வாழ்வதுடன் அவரது சிந்தனையில் சமூகத்தோடு ஒன்றித்தும் வாழ்ந்து வருகின்றார்கள் வாழ்வில் மிகவும் எளிமையாக எவரையும் இயல்பில் இலகுவாக கவரக்கூடிய தன்மை கொண்டவர். புலம் பெயர்ந்து சென்றாலும் சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் எம் தீவிற்கு வந்து தீவகத்தின் நிலமை குறித்தும் எதிர்கால செயற்பாடுகள் குறித்தும் சிந்தித்து செயற்பட்டவர் ஊருக்கு வருகின்ற போது எம்மை கண்டு தானாக நின்று எமமுடன் மிகவும் இனிமையாக பேசி பழகுவதை நாம் என்றும் மறக்க முடியாது. எமது தீவகத்தின் மீது ஆதித பற்றுக்கொண்ட இவரது இழப்பு ஈடு செய்ய முடியாத ஒன்றாகும் அன்னரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திப்பதுடன் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்

திரு.ஜோன்சன் கெனடி

தலைவர்

நெடுந்தீவு மத்தி சனசமூக நிலையம்

## மண் விளைந்த முத்து

பள்ளித் தோழராய் - நாம்
பழகிய நாள் முதல் - உன்
பண்பினை நான் அறிவேன்
உதட்டளவில் சமத்துவம் பேசாது
உண்மையாய் வாழ்ந்த மேலோன்

ஞானமும், கல்வியும் நல்வரப்பெற்ற
சீரிய நோக்குடை சிந்தனையாளன்
சினம் கொள்ளா மேலோன்
என்றும் சிரித்திட்ட முகத்தோன்

திறன் ஆய்ந்த படைப்பாளி
தேர்ச்சி பெற்ற எழுத்தாளன்
சொல்லாடலில் வல்லோன்
சோசலிசத்தின் பொக்கிசம்

சாதிக் கொடுமை கண்டு
சாகா மூடநம்பிக்கை ஒழிக்க ___ அன்று
வாலிப முன்னேற்றச் சங்கம் அமைத்து
வலிமையாய் நின்று குரல் கொடுத்தோன்

சோசலிசத்தின் சூத்திரம் பேசி
சாகவும் புரிந்து சம்பாதிப்போர் மத்தியில்
நாடி வந்த பதவிகளையும் நலிந்தோற்கு ஈந்த
தனக்கென வாழா தண்ணழியாளன்

சாதி, மத பேதமற்று ___ எல்லோருடனும்
சமத்துவமாய் வாழ்ந்த ___ எங்கள்
மண் விளைந்த முத்து - இவன்
மானிடத்தின் சொத்து

எல்லோரிடத்திலும் அன்பின் நண்பனாய் உற்ற தோழனாய் வழிகாட்டியாய் உறவாய் உயிராய் வாழ்ந்த அந்த உத்தம மனிதன் எம்மிடையே இல்லை அந்த ஆன்மா இறையடி அடைந்து சிவபதமடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுவதோடு,

அவர் பிரிவால் துயருற்றிருக்கும் மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளை, உற்றார், உறவினார் மற்றும் நண்பர்களோடு நாங்களும் துயரத்தைப் பகிர்ந்து கொள்கின்றோம்.

"இன்துயில் போல் சாக்காடு இனிது துயின்று எழுவது போல் பிறப்பு"
"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்."

ஓம் சாந்தி
இவ்வண்ணம்
இரா. வயிரவநாதன் குடும்பத்தினர்.

## உள்ளத்தால் எல்லாம் உணர்ந்திட்ட உத்தமர்

மனிதானால் ஏற்றுக்கொள்ள முடியாததாகவும் பெரும் துயர் தருவதாகவும் மரணம் அமைகின்றது. மரணத்தின் தூரமே துயரத்தின் அடர்த்தியை நிர்ணயிக்கின்றது. தொலை தூர மரணங்கள் செய்தியாக, தகவல்களாக எம்மை

கடந்து செல்ல நெருக்கமான மரணங்கள் மொத்த வாழ்க்கையையே கலைத்துப்போட்டு விடுகின்றது.

அனுபவங்களை சுவரசியமாக்கும் கதைசொல்லிகள் பலர் பற்றி ஏட்டில் கற்று இருக்கிறேன். ஆனால் அமரர் திரு சண்முகநாதன் அவர்கள் சொல்லும் அனுபவ பகிர்வுகளும் சரி, அரசியல் விஞ்ஞானத்திலும் சரி, அறிவியலிலும் சரி, மார்க்சிய சிந்தனையிலும் சரி ஓர் இலக்கியவாதியாக மட்டும்மல்ல சகலதுறை ஆளுமையுடையவர் என்பது நிருபணமானது.

"நீர் அளவே ஆகுமாம் நீர் ஆம்பல் தான்கற்ற நூல் அளவே ஆகுமாம் நுண்ணறிவு" எந்நேரமும் கையில் புத்தகமும் பத்திரிகையுமாய் நீங்கள் இருந்த நாட்களும் நீங்கள் புரியும் காத்திரம் மிக்க உரையாடல்களும் என் மனத்தில் உங்களை ஓர் அரசியல் அறிஞராய் எப்போதும் காட்டியது.

"உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன்"

என்ற வள்ளுவன் வாக்கிற்கு அமரர் திரு சண்முகநாதன் சிறந்ததோர்

எடுத்துக்காட்டு அமரரின் இறுதி யாத்திரையில் திரண்டிருந்த மக்கள் கூட்டம், இரங்கல் உரை ஆற்றியோரின் உள்ளக்கிடக்கைகள், மக்கள் மனங்களில் நிறைந்திருந்த சோகம் என்பன அமரர் சண்முகநாதன் எல்லோர் உள்ளத்திலும் நல்லவராக, பண்பானவராக, அன்பானவராக நிறைந்திருந்தார் என்பதனை உணர்த்தி நிற்கின்றன.

இறைவனுக்கினியவர் இளமையில் இறைபாதம் என்ற வேதவாக்கிற்கு அமரர் சண்முகநாதன் ஒருவராய் அமைந்துவிட்டார். அமரரின் ஆன்மா சாந்தி அடைய நாமும் அவர் குடும்பத்தாருடன் இணைந்து பிராத்தித்து சந்தியடைவோமாக.

அருள்லிங்கம் சுந்தரலிங்கம்
அமரரின் உறவினன்
**Toronto.**

## இத்தனை பெரிய மனிதனா!

"தேடிச் சோறு நிதம் தின்று- பல சின்னஞ் சிறு கதை பேசி- மனம் வாடி துன்பம் மிக உழன்று பிறர் வாழ பல செயல் செய்து நரை கூடி கிழப்பருவமெய்தி- கொடுங் கூற்றுக்கிரையென பின்மாயும் பல வேடிக்கை மனிதரைப்போல்" அல்லாமல் இளமைப் பருவத்தே தனக்கென்று ஒரு கொள்கையை வகுத்து, வகுத்த கொள்கை வழியே நின்று எவர் மனதும் புண்படாத வகையில் தனக்கென்று மட்டும் வாழாமல் தான் சார்ந்த சமுகத்தோடு தன்னை இணைத்து, வலது கரம் கொடுப்பதை இடது கரம் அறியாது என்ற பழந்தமிழ் மரபுக்கு ஒப்ப வாழ்ந்து, இத்தனை பெரிய மனிதனா இதுவரை எமக்கு தெரியாமலே இருந்தவன் என எல்லோருமே விழிகளை மேலே உயர்த்திப் பார்க்கின்ற அளவுக்கு தன் மரணம் வரை பயணித்தவர்.

இந்த மாபெரும் சிந்தனையுள்ள மனிதனை ஏறத்தாள நாற்பதாண்டு காலம் பின்னான நினைவுகளை மீட்கிறபொழுது இந்த பெரு மனிதனுடைய வாழ்வியல் சிந்தனையின் ஊற்றுத் துவாரம் என் கண் முன்னே நிற்கிறது.

கடைசி வரைக்கும் தான் கொண்ட கொள்கை மீது சிறிதளவுகூட சந்தேகமோ, சஞ்சலமோ, சபலமோ கொள்ளாத மனவலிமை கொண்டவர் என்பதற்கு துயர் பகிர்ந்துகொண்ட அனைவரினதும் வாக்மூலங்களே சாட்சியாகும். அவரது வாழ்நாளில் அவர் சந்தித்த அனைவருக்கும் அவர் ஒரு சிந்தனைத் தூண்டல் என்பது என் எண்ணம். எல்லோர் மனதிலும் மிக எளிமையாக வாழ்ந்துகொண்டிருக்கும் அந்த மனிதன் என் மனதிலும் எப்போதும்...

சு. விவேகானந்தன்<br>
பெரியதுறை நெடுந்தீவு<br>
**Promar Canada**

## மனிதத்தைத் தேடிய ஒரு மானிடப் பயணம்..........

நான் சிறுவனாக இருந்த காலப்பகுதியில் நெடுந்தீவில் மக்கள்களை கட்டுகின்ற ஒரு பெரும் நிதழ்வென்றால் அது உழவர் விழாத்தான். ஒவ்வொரு ஆண்டும் தைப்பொங்கல் காலப்பகுதியில் நெடுந்தீவு மாகாவித்தியாலய அரங்கத்தில் உழவர் விழா நடைபெறும். சிறுவர்களோடு சிறுவர்களாக அரங்கத்தின் முன்பாக மண்ணில் உட்கார்ந்து இருந்து பார்ப்பேன்.

மறுமலர்ச்சி, முற்போக்கு, சமத்துவம், சீர்திருத்தம் இப்படியான பல்வேறுபட்ட சொல்லாடல்கள் எதுவுமே அந்தக் காலப்பகுதியில் எனக்குத் தெரியாது. அது சார்ந்த அர்த்தமும் புரியாது. ஆனாலும் அங்கு நடக்கும் நிகழ்வுகள் தூக்கத்தை விரட்டி கண்களை மூடாது விடியவிடியப் பார்க்க வைக்கும். அத்தகைய நிகழ்வுகள் அக்காலப் பகுதியிலேயே எனது உள்ளத்தில் ஒரு உருமாற்றத்தை உருவாக்கியதை உணர்ந்ததுண்டு.

அமரர் சண்முகநாதன் அண்ணன் போன்றோரின் சிந்தனையையும் செயல் துடிப்பையும் பார்த்து பார்த்துத்தான் நானும் எனது நண்பர்களும் வளர்ந்தோம். உயர் கல்வி படித்து முடித்த காலப்பகுதியில் நெடுந்தீவில் ஐக்கிய தீப சன சமுக நிலையம் என்னும் பெயரில் ஒரு சன சமுக நிலையத்தை நானும் எனது நண்பர்களுமாக இணைந்து உருவாக்கினோம்.

ஓலைக்குடிசையாக இருந்த இந்த சனசமுக நிலையத்தை அக்காலப்பகுதியிலேயே எந்த வெளிநாட்டு உதவியும் இல்லாமல் கட்டடமாக மாற்றியமைத்தோம். இச் சன சமுக நிலையக் கட்டடத்தை அண்ணன் சண்முகநாதன் அவர்களே திறந்து வைத்தார்கள். அவருடைய வாழ்க்கைக் காலத்தில் அவருடைய சேவையைப் பாராட்டிய ஒரு சிறிய நிகழ்வாகவே நாங்கள் அதனைப் பார்த்ததுண்டு.

அக்காலப்பகுதியில் ஐக்கிய தீப சனசமுக நிலையத்தின் செயலாளராக திரு குணரத்தினம் அவர்கள் செயற்பட்டார். அவர் நெடுந்தீவில் இருந்து தொலைபேசியில் என்னுடன் தொடர்பு கொண்டு அண்ணன் சண்முகநாதன் அவர்களின் நினைவுகளை பகிர்ந்து கொண்டார். சண்முகநாதன் அண்ணன் நினைவாக நெடுந்தீவு மாகாவித்தியாலயத்தில் நடக்கவிருக்கும் நிகழ்வில் ஐக்கிய தீப சன சமுக நிலையம் சார்பாக நினைவுப் பதாகை வைத்துள்ளதாகவும் சன சமுக நிலையக் கொடி அரைக் கம்பத்தில் பறக்கவிடப் பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். பல ஆண்டுகள் கடந்தாலும் பல நல்ல உள்ளங்களில் தனது சிந்தனையை செதுக்கிவிட்ட ஒரு சிற்பிதான் அண்ணன் சண்முகநாதன் அவர்கள்.

கனடா வந்த பின் நெடுந்தீவு மக்கள் ஒன்றியத்தினுடாக நெடுந்தீவில் 10,000 பனை நடுகையை கற்பகக் கானகம் என்னும் பெயரில் ஆரம்பித்தோம். இக்காலப்பகுதியில் சண்முகநாதன் அண்ணனிடமும் உதவி கேட்ட போது தனது பெயரில் பணத்தை தந்து உதவியது மட்டும் இல்லாமல் தனது குடும்ப உறுப்பினர்கள் பெயர்களிலும் பணத்தை தந்து உதவினார். அது மட்டும் இல்லாமல் நெடுந்தீவைச் சேராதவர்களிடம் இருந்தும் கூட பணத்தை பெற்றுத் தந்து உறுதியான ஒரு ஊக்கிவிப்பாளராக செயற்பட்டார்.

தாய் வீடு பத்திரிகை நிறுவனத்தால் ஆண்டுதோறும் நாடகவிழா நடாத்தப்படும். அவ்விழாவுக்கு சண்முகநாதன் அண்ணனுடன் நான், குமார் என சில நண்பர்கள் இணைந்து செல்வோம். வருடா வருடம் நாடகம் முடிந்து வரும்போது எங்கள் வாகனத்துக்குள் நாங்கள் ஒவ்வொருவரும் அங்கு அரங்கேறிய நாடகங்களைப் பற்றி ஒருவருக்கொருவர் கலந்து உரையாடுவோம். சண்முகநாதன் அண்ணன் அதிகம் பேசமாட்டார் இடையிடையே சிரித்தவாறு நகைச் சுவையாக சில விடயங்களைச் சொல்வார் அத்தகைய சொற்கள் பல நாட்களாக சிந்தனையைத் தூண்டும் கருத்தாகவே அமையும்.

பணம், பதவி, அந்தஸ்த்து என்னும் அச்சை நோக்கிச் சுற்றுகின்ற இந்த உலகத்தில் எளிமை, தன்னடக்கம், நேர்மை, மற்றவர் மனங்களை புண்படுத்தாது பேசுதல்

எனப் பல உயரிய குணங்களுக்கு உரித்துடையவர் சண்முகநாதன் அண்ணன். எவருமே எதிர்பார்க்காத ஒரு கணப் பொழுதில் அதிர்ச்சிச் செய்தியாக அண்ணனின் மறைவு எம்மை வந்தடைந்தது. நிச்சயமாக அவரின் அன்புக்குரியவர்களின் இதயத்தில் இடி விழுந்ததாகவே இச் செய்தி அமைந்திருக்கும்.

அண்ணன் சண்முகநாதன் அவர்களின் உடலை இயற்கை தனதாக்கிக் கொண்டாலும் அவருடைய சிந்தனையும், பொது வாழ்வும், செயற்த்திறனும், அன்பும், அமைதியும், எழிமையும் எப்போதும் எம்மோடு கூடவே வாழும். அதுவே அவருடைய மனைவி பிள்ளைகள், உற்றார், உறவினர்கள், நண்பர்கள் என எல்லோருடைய அமைதிக்கும் ஆறுதலுக்கும் வழி காட்டும் என்னும் நம்பிக்கையோடு சாந்திகொள்வோம்.

குணசிங்கம் தேவராசன்
முன்னாள் தலைவர்
ஐக்கிய தீப சன சமுக நிலையம்

**சவையில் தோழருடன் பழகிய அன்பு நெஞ்சங்களின் மனக்குமுறல்.**

நாங்கள் என்றுமே மன இதயத்தில் போற்றும் எங்கள் அன்புத் தோழர் சண்முகநாதன். கடந்த ஆறு மாதங்களாக GATEWAY CONVINIENCE நிலையம் ஞுஉயசடிழசழரபா மத்திய புகையிரத நிலையத்தில் கடமையில் ஈடுபடும் நேரத்தில் இரவு வேலை முடிந்த பின்னர் மறுநாள் கடமை உணர்வுடன் படுத்த எம் நண்பர் வரமுடியாத சோகநிலைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

நாங்கள் நட்புடன் பழகிய பலர் இருந்தும் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு போன்ற உயர் பண்புகளை உடையவராகவும், தான் சார்ந்த இடது சாரப் பிணைப்பை உடையவராகவும், கடமை நேரத்தில் தேவையற்ற செயற்பாடுகள் இல்லாதவராகக் கடமையாற்றினார். பலபல வழிகளில் திறமையுடைய காலம் சென்ற தோழருடன் பழகும் பாக்கியம் நம்மவர்க்குக் கிட்டியும் தொடர் கதையில்லாமல் அற்றுப் போனதுதான் துரதிர்ஷ்டம். இப்படியான மனிதரைக் காணும் பாக்கியம் இனிக் கிடைக்குமோ என்ற மனக்குமுறல் எங்களுக்கு உண்டு.

கிருஷ்ணா, பத்மநாதன், இராசேந்திரன், பிரிந்தா



மகள் கார்த்திகா

**எண்பதுகளின் பின்பாதியில் எம் தீவின்**

**புழுதி குளித்த குழந்தை ஒன்றின் நினைவு மீட்டல் ...**

*சண்முகநாதன் சித்தப்பா*

என் அப்பாவின் ஆத்மார்த்த தோழன்
அதிகம் பேசிக் கண்டதில்லை
அன்பு வழியும் விழிகள்
ஆயிரம் அர்த்தங்கள் அடங்கிய ஒரு சிரிப்பு.

இன்றுதான் தெரிகிறது
ஆர்ப்பாட்டம் இல்லாத ஒரு மனிதன்
இத்தனை மனங்களை
ஆட்கொண்ட மகிமை

புலம் பெயர்ந்த பின் - அறுந்துபோன
உறவுகளை எண்ணி எண்ணி ஏங்கினாலும்
கையிலுள்ள அலைபேசி எடுத்து அழுத்த
பின் நின்ற சோம்பேறி இவள் - இனி
நொந்து நொந்து என்ன பயன்
ஊமைப் பாசமாய் புதைந்தே போனதே.

சிவப்பு மட்டைப் புத்தக வித்தகா - இன்று
முகப்புத்தகம் உம் புகழ் பரப்புகின்றது.
இத்தனை தகமைகளையும்
உம்முடனே கொண்டு சென்றீரா?

கைக்கெட்டாதது வாய்க்கெட்டாதது போல
இளைய விழிகள் ஏங்கித் தவிக்கின்றன
எனக்கும் ஓர் ஆசானாய் - நீர்
இருந்திருக்கலாமோ என்று.

பொக்கிஷம் ஒன்றைப்
பறிகொடுத்துப் பரிதவிக்கும்
பெறாமகள்
மயூரா

## நான் பார்த்த சண்முக (நாதன்)த்தை இனி எப்போ பார்ப்பேன்!

நெடுந்தீவுப் பாடசாலை வாழ்க்கையில் இன்முகத்துடனும் கருணை உள்ளத்துடனும் பழகும் சுபாவம் கொண்ட நண்பன் உயர்தர கல்வி முடித்ததும் உமது முந்தைய நண்பர்களுடன் (முருகன், மணி, லோகநாதன்) சேர்ந்து கம்யுனிசம் என்ற வாழ்க்கையில் வலம் வந்தபோது மா.கோ.கும் வாறார்கள் என்று கேலி செய்யும்போது ஒரு புன்சிரிப்பும் பதிலுக்கு இருந்து பார் நடக்கபோகிறதை என்று வியக்கதக்கதாய் சொல்வாய். நீதி, நியாயம், உண்மை பேணப்பட வேண்டும் என்று பல்வேறு சங்கங்கள் மூலம் அயராது உழைத்தாய் அவர் தான் சார்ந்த அரசியல் கொள்கைகளை மற்றவர்கட்கு திணிப்பதோ என்பது வேறு எந்தவிதத்திலும் செயல்பட்டதோ கிடையாது. எல்லோரையும் மதித்து நடக்கும் பண்பாளர்.

நண்பர்களுடன் மாவிலி தொட்டுப் பாடசாலை வரை வலம் வரும் போது நாட்டைக் கெடுக்கும் கூட்டம் போகிறது என்று கேலி செய்த நாட்களை நினைத்து பார்க்கிறேன். காலங்கள் மாறினாலும் உன் அன்பு என்றும் மாறாது. உமது குடும்பம் நண்பர்கள் எனது திருமணவாழ்வில் செய்த உதவிகளை நினைத்து பார்க்கிறேன். ஆசிரிய பதவி கிடைத்தும் தீவகத்துக்கு நல்லது செய்ய வேண்டும் என்ற குறிக்கோளுடன் பதவியையும் துறந்து சமுதாயத்தை திருத்தலாம் என்ற மனப்பாங்குடன் வந்தபோது நாட்டுக்கு கேடுவந்தது. ஆயுதம் ஏந்திய போராளிகள் நாட்டை நலவழிப்படுத்துவார்கள் என்று இருக்க, பேனா ஏந்திய உமது கரத்துக்கு ஓய்வுகாலம் வந்தது. நல்ல மனையாள், பிள்ளைகள், சகோதரர்கள், மைத்துனர்கள், உறவினர்கள் என்று இருக்க காலங்கள் கடத்தோடின, யாழில் மணி அண்ணன் புத்தகக்கடையில் தங்கிய நாட்களை நினைத்து பார்க்க ஏக்கம் நிறைந்துள்ளது. இடம் விட்டு இடம் பெயந்த போதும் கணேஸ் அண்ணரிடம் கேட்டேன் சண் எங்கே என்று அவர் சொன்னார் யெர்மன் போய்விட்டார் என்று உள்ளம் பூரித்தது. தொலைபேசியில் தொடர்பு கொண்டு அன்பாக உரையாடினோம். கொழும்புக்கு நான் சென்றபோது அவர் சொன்னார் சண் இங்குதான் நிற்கிறார் என்று உடனே சென்று நீண்ட வருடங்களின் பின்பு பார்க்கிறேன் அதேமுகம் புன்சிரிப்பு அப்போது கூட பழகிய தோசம் என்ன அங்கும் கம்யுனிசம் பேசி வந்தாய் என்று கேட்க வாத்திக்கு கேலிதான் திருந்தாத ஜென்மம் என்றாய். பின்பு இந்தியாவில் இருப்பதாக அறித்தேன் அன்பு மகளை டாக்டருக்கு படிக்கவைத்து படிப்பு முடிகிற நேரம் பிரித்த துயரச் செய்தி அன்று தொட்ட முகவாட்டம் தான் இன்றுவரை இருந்தது. கடைசி காலங்களில் கனடா வந்தபோது சந்தோசப்படடேன். முன்புபோல் பழகும் வாய்ப்பு கிட்டவில்லை வேலைச்சுமை காரணமாக இடையிடையே சத்திப்போம். ஓய்வுபெற்ற பின்பு நிம்மதியாக உம்முடன் காலம் கடந்தலாம் என்று இருக்க விதி செய்த கொடுமை என்ன? உமக்கு உதவி செய்ய நண்பர்கள் இருக்கின்றனர் என்று எவ்வளவோ சந்தோசப்பட்டேன்.

இறப்பதற்கு இருநாட்களுக்கு முன் அதிக நேரம் உம்முடன் இருந்து பழைய கதைகள் கதைத்தோம். நண்பர்கள் இராஜ்குமார், இந்திரா அவர்களது மரணம் குறித்து கவலைப்பட்டோம். பரிதாபமான நிகழ்வுகள் என்று வேதனைப்பட்டோம், கூடவே நீர் போவீர் என கனவிலும் நினைக்கவில்லை.

உனது அறிவு ஆற்றல், எழுத்தாக்கம் என்பவற்றை அறிந்து உலகமே வியக்கின்றது எல்லோரையும் தேடினாய், எல்லோரும் உம்மிடம் வந்தார்கள், எல்லோரையும் தவிக்கவிட்டு காற்றோடு காற்றாக மறைந்து விட்டாய். மீண்டும் உம்மை அதே முகத்துடன் எங்கே சந்திப்போம் என்று ஏக்கம் கொள்ளும்"""""".

அன்பு நண்பன்

ஜெயசீலன் இராமநாதன்.

## எனது மகனின் என் உள்ள நினைவுகள்

அக்காவின் வயிற்றில் அவதரித்த எங்கள் மகன் - எமது
குடும்பத்தின் முதற்பிள்ளை குதூகலித்தோம் நாமெல்லாம்
தாத்தாவும் பாட்டியும் தணிந்தனர் தம் தாகம்
கருதி வளர்த்த பிள்ளை கற்கண்டாய்த் தானினித்தார்
அப்பாவின் கரையூர்க் கடை முற்ற மதில்
புழுதி அளைந்து முழந்தாளில் தான் தவழ்ந்தார்
கடைக்கு வருபவர்கள் காதலொடு உமைத்தூக்கி
கன்னத்தோடு தான் அணைத்து கனியமுத்தம் தந்தார்கள்
பள்ளிப் பருவம்வர மகனின் படிப்பை எண்ணி
அம்மா நெடுந்தீவு தன்னில் குடியமர்ந்து விட்டார்
உரிய பருவத்தில் இரண்டாம் வகுப்பை இனிதே முடித்தீர்கள்
விடுமுறையில் வந்த பெரியமாமாவும் அத்தையும்
பறகொல்லை பாடசாலையில் படிக்க வைக்கஅழைத்தார்கள்
தம்பிகள் குகதாஸ், சாபாநேசனை விட்டு
மாமா அத்தையுடன் மகிழ்ச்சியுடன் சென்றீர்கள்
தோட்டப் பாடசாலையிலே மூன்றாம் வகுப்பு முதல்
ஐந்தாம் வகுப்பு முடிய ஆர்வமாய் கற்றீர்கள் தொடர்ந்து
யாழ்ப்பாணம் வசித்த எம்மிடத்தில் உமைச் சேர்த்தார்
அன்று முதல் என்றுமே எங்கள் முதல்மகன் ஆனீர்கள்
யாழ் ஸ்ரான்லி கல்லூரியில் உமைச்சேர்க்க எண்ணினோம்
தகுதி காண்பரீட்சையில் நாலாமிடம் பெற்றீர்கள்
ஆறாம் வகுப்பில் அனுமதித்தார் பள்ளி முதல்வர்
உங்கள் திறமை கண்டு பதின்மூன்றாம் வயதில்
மு/டு பரீட்சை எழுத விட்டது அக்கல்லூரி
கணிதம், தமிழ், ஆங்கிலம் தான் சித்தி அதுவும்
திறமைச் சித்தி ஆனதுதான் வெற்றி என்றாகியது திரும்ப
15ம் வயதில் மு/டு எடுக்க வைத்தார்கள்.
எடுத்த எல்லா பாடமுமே திறமைச்சித்தி ஐந்துடன் சித்தி பெற்றீர்கள்
அத்திவாரமிட்ட பெரிய மாமாவுக்கு நன்றி சொன்னீர்கள்
அம்மா அப்பா தம்பிகளுடன் பாவற்குளம் விட்டு
நெடுந்தீவு வந்ததுமே அங்கே படிக்க வைக்க
அம்மா விரும்பியதால் மகாவித்தியாலத்தில் மனதோடு சேர்த்தார்கள்
யு/டு முதலாண்டு கற்கையிலேயுமக்கு நண்பர்களும் சேர்ந்தார்கள்
நம் தாயகத்தில் மாற்றம் வரவேண்டுமென உங்கள் மனம் எண்ணியது
நண்பர்கள் மத்தியிலே பேச்சாளனாய், எழுத்தாளனாய் ஆனீர்கள்
தமிழும் சமத்துவமும் இரு கண்ணென வரித்தீர்கள்
நம்மவரிற் சிலர் நாஸ்திகன், கொம்மியூனிஸ்ட் எனக்கூறி
நாவாலே சுட்டு நடமாடி வந்தார்கள்
இவையெல்லாம் உங்களை ஏமாற வைக்கவில்லை
எடுத்த பணியை முடிக்கும் திறன் கொண்டீர்கள்
காதலித்த நங்கையை கைபிடித்து தந்தோம் நாம்
இல்லற வாழ்வு நல்லறமாய் நடந்தேற
கவி எனும் பூ மலர்ந்து பூமியைத்தான் சேர - அதன்
பூ விரல் தொட்டு புதுக்கவிதைதான் புனைந்தீர்
இரண்டாவதாக முருதனைப் போன்ற மகன்
காலையில் பூமிவந்து மாலையில் மறைந்தனனே - பின்
கார்த்திகா, ராகுலன், தேவானந் தான் தோன்ற

ஜேர்மனி சென்றீர்கள் உங்களால் தொடர்ந்திருக்க முடியவில்லை
உங்கள் கொள்கைகள் உங்களை நாட்டுக்கு அழைத்து
மீண்டும் உங்கள் கொள்கைக்கு மெருகூட்டி வந்தீர்கள்
கனடா வந்தபின்னும் உங்கள் கொள்கை மாறவில்லை
வட்டம் அமைத்து நடுவில் நாயகனாய் நின்றீர்கள்
மழையோ பனியோ நடந்து வந்து எனைப் பார்த்து
அறிவுரையும் கூறி அமைதி காத்திருங்கள் என்பீர்
நீங்கள் என் அன்னை சித்தப்பா என் நண்பன் என
அடிக்கடி சொல்லி எனை ஆற்றுப் படுத்துவீர்கள்
உங்கள் பிள்ளைகள் நல்லவர்கள் எங்களுக்கு ஒருகுறையுமில்லை என்பீர்
தம்பியை (ருபன்) சாட்சி வைத்து "உங்களுக்கு கல்வெட்டு
நானே எழுதுவேன்" என்றீர்கள் இனி""?
எல்லாம் மறந்து எங்குநீர் சென்றீர் ஐயா?
"எனது குடும்பத்துக்கும், நான்பிறந்த குடும்பத்துக்குமே எல்லார்க்கும்
எல்லாமே செய்து என் கடமை முடித்துவிட்டேன்" என
எண்ணி மனம் நிறைந்தா ஏகிவிட்டீர் ஐயாநீர்.
நீங்கள் சென்றிருக்கும் அரசவையில் ஓர்
பேச்சாளனாய் எழுத்தாளனாய், கவியாய், பாவலனாய், வாழ்க என
வாழ்த்துவதை தவிர வேறென்றும் நானறியேன் என் மகனே

ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி

அமரர் நாகநாதபிள்ளை
குடும்பம்

## நெஞ்சில் நிறைந்தவரே!

நெஞ்சில் நிறைந்தவரே ___ என்னை
நிர்க்கதியாய் விட்டு விட்டு
நெடுந்தூரம் சென்றதென்ன
கரை தெரியாக் கப்பலைப் போல்
கதி கலங்கி நிற்கின்றேன்
காணும் இடமெல்லாம் கானல்
நீரானீரே
உம்மோடு நான் வாழ்ந்த
ஒவ்வொரு நொடிப் பொழுதும்
உயிரில் கலந்து
ஊற்றாகி நிற்கிறது
தலை நிமிர்ந்து நிற்பதற்கு
தைரியத்தைத் தந்தவரே
இனிப் போதுமென்றா நீர்
எட்டப் பறந்து விட்டீர்.
மறைந்து விட்டீர் என்று
மறந்தும் மனம் ஏற்குதில்லை
இறுதி வரை உன்னோடு
நானிப்பேன் என்றவரே
என்னோடு நீர் இருப்பீர்
என்பதுவே உண்மையிது
மீதிருக்கும் காலத்தில் மக்கள்
மருமக்கள் பேரர் நலன் பேணி
உற்றார் உறவினரை உன்
சிரிப்பில் பார்த்திருப்பேன்
அங்கு சென்ற நீரோ ___ எம்
அருமை மகளாரின்
அருகிருந்து பாருமையா
அமைதியாய் நான் வருவேன்
அருகிருப்போம் அன்புடனே.

மனைவி

**அப்பா!**

எம் அற்புதத் தீவின் பொக்கிஷங்களுள்
ஒன்றாம் நீங்கள் .
நான் அறியாத உங்கள் புகழெல்லாம் ஒலிக்குதப்பா
உங்கள் தோழர்களால்.

இதுவும் கடந்து போகும் மகளே என்று நீங்கள்
தோள்தட்டிப் போகையிலே
விரைவாய் எமைக்கடந்து போவீர்கள் என்று
இம்மியும் எண்ணவில்லை

விழுந்தவுடன் ஓடிவந்து கைதூக்கி விடும் சராசரி
தந்தையல்ல நீங்கள்.
விழுந்த என் வலிகளை உள்வாங்கி புன்னகையால்
எழுந்து நட என்பீர்கள்.

யார் மனதும் நோகாத வாழ்க்கை தான்
வரம் என்றீர்கள்.
உங்கள் மகளென்ற பெருமிதமே
மனம் நிறைந்து காக்குதப்பா.

வயதெல்லை இல்லாமல் அனைவருக்கும்
நண்பன் நீங்கள்.
அனுபவத்தை கற்பிக்கும் நல் ஆசானை தேடுகிறோம்
எம்மோடே இருப்பாய் நண்பா.

மூச்சிருக்கும் போதே உங்கள் முகம் பார்க்க முடியாத
என் பாவம் போதும்.
முடியும் வரை உங்கள் கனவுகளுக்கு உரமூட்ட
வரம் வேண்டுமப்பா.

பாசம் அழாவிய உங்கள் கண்கள் யாரிடமோ
உங்கள் எண்ணம் போல்
இன மொழி மத பேதம் இன்றி இவ்வுலகில்
உலாவி வரும்.

பாட்டாளியாய் சக கூட்டளியாய் தேசம் உலாவிய
உங்கள் கனவுகள்
ஈடேற இளையோர் நாங்கள் உழைப்போம்
எம்முடனே வாழ்வீர்கள்.

நாவரசன், கவிதா

"ஈன்று புறம் தருதல் எந்தலைக் கடனே,
சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே"

**என்னை பெற்றெடுத்தவரே!**

அப்பா என்று அன்புடனே நாம் அழைக்க அன்புருகி அன்பு மழை பொழிந்து நிற்பீர்களே பாசமாய் மக்களைப் பெற்றுப் பெரும் பற்றினை வைத்தீர்கள்.

கருவிருந்த காலம் தொட்டு கண் விழிந்து எம்மை வளர்த்த தொப்புள் கொடி உறவுக்கு நிகரேதும் இல்லையப்பா

இப்புவியில் கண்டிப்பான அப்பா, பிள்ளைகளின் புராணம் பாடும் அப்பா, என்றில்லாமல் எம்மைச் சான்றோராக்கி உங்கள் கடமையை முடித்துச் சென்று விட்டீகளா?

நாங்கள் உங்களுக்கான எங்கள் கடமையை முழுமையாகச் செய்ய இடம் தராமல் விண்ணுலகை அடைந்து விட்டீர்களே் உங்கள் உறவிழந்து மண்ணுலகில் நாம் தவிக்கிறோம் அப்பா.

நான் பிறந்தவுடன் புத்தரின் மகனின் பெயர் ராகுலன் என்ற பெயரை எனக்கு வைத்தீர்கள் என்றுதான் நான் நினைத்திருந்தேன். ஆனால் நீங்கள் ராகுல சங்கிருத்தியாயன் என்ற மார்க்சியவாதியையும் பெரிதும் நேசித்தீர்கள் என்பதைப் பின்னர்தான் அறிந்தேன். இவ்விரு காரணங்களையும் சேர்த்தே ராகுலன் என்ற நற்பெயரை எனக்கு வைத்தீர்களே அப்பா

அரசியலைப் பற்றியும், பொது உலக நடப்புகளைப் பற்றியும் விவாதங்கள் வரும்போது நீங்கள் தரும் விளக்கத்தையும் அறிவான பேச்சையும் இனி எப்போது கேட்கப் போகிறோம் அப்பா?

நீங்கள் இறந்த பின்தான் பொது வாழ்க்கையில் நீங்கள் பெற்றிருந்த பெருமையினை நாங்கள் முழுமையாக உணர்ந்தோம். உங்களுடைய பெருமை கண்டு நாங்கள் வியந்துவிட்டோம். உங்களிடமிருந்த உயர்ந்த குணங்களில் ஏதாவது ஒன்று என்னிடமிருக்குமாயின் அதுவே நீங்கள் எனக்கு வழங்கிய பெருஞ் சொத்தாகும்.

உங்களிடம் இருந்தே புத்தகம் படிக்கும் ஆர்வம் எனக்கு வந்தது. நான் வாங்கி நீங்கள் படித்த முதல் புத்தகம் சுஜாத்தாவின் "கடவுள்" அன்றுதான் தொடங்கியது எனக்கும் உங்களுக்குமான இயல்பான உரையாடல். சென்னையில் புத்தக கண்காட்சிக்கு உங்களுடன் சென்றதும், வைரமுத்துவிடம் கையொப்பம் வாங்கிக் காட்டியதும் நினைவில் உள்ளது.

உங்களுடன் வாக்குவாதத்தில் ஈடுபட வேண்டும் என்பதற்காகவே உங்களைச் சீண்டுவது என் வழக்கம், ஆனாலும் ஒருசில நேரங்களில் மட்டுமே நான் வென்றுள்ளேன். நீங்கள் எம்முடன் வாழ்ந்தவேளை கால அவகாசம் இருந்தும் உங்களைப்பற்றி முழுமையாக அறிந்து கொள்ளவில்லை என்ற எண்ணம் இப்போது என்னை வருத்துகின்றது.

பிறந்து விட்டால் புகழுடனே வாழவேண்டும் இல்லையேல் பிறந்திடாமல் இருப்பது நன்று என்று சொல்வார்கள். இப்புவியில் எல்லோரையும் புகழ் தேடி வருவதும் இல்லை, விரும்பியோரால் புகழைத் தேடிப் பெற முடிவதுவும் இல்லை. சமூகத்துக்காக நல்ல எண்ணங்களோடு நல்லவை ஆற்றினால் புகழ் தானாகத் தேடி வரும் என்பதை, உங்கள் மறைவின் பின்னரே நாம் உணர்ந்தோம்.

ஒரு சிறந்த தந்தையின் மகன் என்ற பெருமை எனக்குள் இருப்பினும் "அத்தந்தை என்னுடன் இல்லையே" என்ற துயர் என்னை வாட்டி வதைக்கின்றது.

உங்கள் எண்ணங்களே என்றும் எம்மை வாழ வைக்கும்.

அன்பு மகன் - ராகுலன்

**என் அப்பா**

நித்திரையாய் இருந்த அப்பா
நிலைகுலைய வைத்தாயே
பதைபதைத்துப் போன என்னை
பார்க்காமல் போனாயே
உங்கள் மறைவால்
உலகோர் அரண்டதனால்
உங்களது ஆற்றல் கண்டு
உறைந்திட்டேன் உணர்விழந்தேன்
இடையிடையே ஏகாந்த
கதைகள் பல சொல்லி
பகிடியாய் நான் கதைக்க
பார்த்து ரசித்தவரை
தீயே நீதின்று
தீர்த்துவிட்ட நியாயமென்ன
சிறுகச்சிறுக உங்கள்
நினைவுகளை நான் சுமந்து
என் அருகில் என்னப்பா
இருக்கின்றார் என்றெண்ணி
பார்ப்பவற்கு நானோர்
பயித்தியமாய் தோன்றிடினும்
உன்னைத் தொடர்ந்து
உன்வழியே நான் நடப்பேன்.

உங்கள் நினைவுகளுடன்
அன்பு மகன் தேவா

## அண்ணா!

என் தாய் தந்தையர் பெற்றெடுத்த
தலைமகனே தவப்புதல்வா
உன் புன்முறுவலை நான் இனி எப்போ காண்பேன்.
உனது புன்னகையில் எத்தனை எத்தனை அர்த்தங்கள்
சின்னவன் நான் என்றாலும் என்னுடன் நீ
தோழனாய் நண்பனாய் நல் ஆசிரியனாய்
தன் நம்பிக்கையுள்ள தம்பியாய் வாழ்ந்தீர்கள்.
வழி நடத்தினீர்கள் நடப்பேன் உன் தடம் வழியே
நான் எப்போது எது கேட்டாலும் நல்லதொரு நண்பனாய்
நல்கிடுவாய் அத்தனையும்

மாக்ஸ் லெனின் மாவோ ஏங்கல்
என இவர்கள்
காட்டிய நற்பாதையைக்
கடைப்பிடிக்க எண்ணிய நீ
வீட்டில் உள்ளோர் வெளியில் உள்ள நண்பர்கள்
நாட்டிற்கு உழைக்கும் நல்ல தொழிலாளர்கள்
சாதிக் கொடுமையினால் சலிப்படைந்த மனிதர்கள்
ஏற்றமுற வழி உழைத்தாய்
எம் தீவின் மக்கள் எழுச்சி கொள்ள
உழவர்க்கு விழா வைத்த உத்தமனே எங்கு சென்றாய்.
முற்போக்கு வாலிபர் இயக்கத்தின் முன்னோடி
ஊரார் முழுப்பேரும் உன் புகழைப் பாடுகின்றாய்.
நண்பனாய் வழிநடத்து
நல்வழியே நான் நடப்பேன்

உன்பிரிவால் வாடுகின்ற
உன் மனைவி மக்கள்
மருமக்கள் பேரருக்கு
உன் ஆசி என்றும் இருக்கட்டும்
உத்தமனே.

சபாநேசன் (தம்பி)

## மாமாவே எப்போ காண்போம் இனி உங்களை

மாமா மாமா என்று நான்
மனதோடு அழைத்தாலும் என்னை
மகளாக அன்பு செலுத்தி
மனம் நிறையச் செய்த என்
மாமாவே எப்போ காண்போம்
மாமா என்று யாரை அழைப்பேன்
பாதுகாப்பற்ற பாதையிலே கடக்க வேண்டாம்.
பாதசாரி கடவையிலே கடவுங்கள் என
பாசத்துடன் நீர் கூறிவிட்டு மறுநாள்
உயிரற்று போனதென்ன.
மாமா வீதியிலே தேடுகின்றேன்
காணாமல் மறைந்துவிட்டீர்கள்.
உள்ளம் உருகி வேதனையில் வாடுகின்றோம்
உலகில் நல்ல உறவுகளை
உரிமையுடன் நான் பெறக் காரணமான உத்தமரே
உம் பேரப்பிள்ளையைப் பார்க்காமல்
வாழ்வது மாயமென்றா
போநீர்கள் மாமாவே
உங்களின் ஆத்மா சாந்தியடைய
அழுது புலம்பி ஆண்டவனை
பிரார்த்திக்கின்றேன்.

அன்பு மருமகள்
விஜிதா

# *Thatha...*

Thatha was well known to a lot of people including me and we loved him deeply my thatha was a very fascinating person that taught me a lot. He read so many books and visited the library every once in a while. He was a very organized, responsible, tidy and clean person. If he were to see clothes on the floor or anything that's not in its place he would immediately go and put it back. He would never be late for an occasion he would keep us timing for everything. Many people knew him that we didn't even know. He had many cool jobs and helped people in the community.

He was a very nice person and set a good example for everyone. Even though he left us without saying bye we will definitely have him in our minds and hearts.

***R.I.P Thatha***
***We all love you***

## தந்தை நிகர் பெரியப்பா

"தந்தை நிகர் பெரியப்பா அணைத்து அன்பு காட்டி
அறிவுரைகள் ஊட்டி பண்போடு வளர்த்தீர்
உம் கண்களில் கருணையைக் கண்டோம்
கருத்தினில் தந்தையைக் கண்டோம்
பெருத்த இவ்வுலகிலே பிறதேசம் சென்றாலும்
பின்னிய பாசத்தில் பிணைத்தெமை வளர்த்தீர்
யாரிடம் கேட்போம் அறிவுரைகள் - உம்
வாழ் நாள் எல்லாம் சாதனைப் பாதையே
வேதனை கொண்ட எம் உள்ளங்கள் ஆற
இறைவன் உம் ஆன்மாவை சாந்தி பெறச் செய்வான்"

ஊருக்கு தாங்கள் சண் அங்கிள் எமக்கு நீங்கள் பெரியப்பா நாம் வளர்ந்து வரும் காலங்களில் தங்களுடன் இணைந்து வாழ முடியவில்லை எமது உள்நாட்டு யுத்தம் எங்களையும் பிரித்து விட்டது. நான் கிளிநொச்சி சென்று வேலை செய்த காலப்பகுதியில் என்னை நெடுந்தீவு என்று அறிமுகப்படுத்தினால் அவர்கள் வினாக்களினூடாக துருவி நான் யார் என்று அறிந்து சண்முகநாதனின் பெறாமகன் என்று என்னையும் மதித்திருந்தார்கள் நான் பல இடங்களில் பெருமைப்படுத்தப்பட்டிருக்கின்றேன். உங்களுடைய ஏனைய உறவினர்களும் அதையும் தாண்டிய நண்பர் குழாமும் தொடர்ந்த வண்ணமிருப்பதைக் கண்டு சந்தோசப்பட்டேன் அவர்கள் எல்லாரும் இன்று குரல் தழுதழுத்து கதைக்க முடியாமல் கண்ணீர் சொரிந்து நிற்பதை பார்க்க என்னால் தாங்க முடியவில்லை.

பெரியப்பா அல்ல நீங்கள் எங்கள் வாழ்விலும் செயலிலும் ஊக்கத்திலும் கலந்து நின்ற தோள் கொடுக்கும் நண்பன் என்றே அழைக்கத் தோன்றுது நீங்கள் எங்ளை விட்டு பிரிந்த பின்னர் தான் அதன் வலியையும் வேதனையையும் உணர்ந்து வருந்துகின்றோம்.

உங்கள் பணிகள் எப்பொழுதும் செம்மையானவை, தந்தை முகம் ஞாபகமில்லை பதிலாய் எம்மீது பாசம் நீர் வைத்திருந்த பண்பு என்றும் மண்ணில் நிலைத்திருக்கும் படிப்படியாய் இழப்புக்கள் வருகின்றதே என்றெண்ணி மனம் கதிகலங்கி நிற்கின்றதே. உங்கள் பணிகள் பற்றி அறிந்தது குறைவு தான் காரணம் அப்போது நான் சிறுவனாய் இருந்துள்ளேன் எட்டுத்திசை போற்றும் பேரறிஞனே ஏன் அமைதியடைந்தீர் உங்களைப் போல் உங்களுக்கு சான்றாக என்னாலும் முடிந்தளவு இம் மண்ணிற்கு பணி செய்ய எண்ணியுள்ளேன் பெரியப்பா உமது வழித்தடம் பேணலாம் உம் பாசம் போல் வைக்க முடியாது ஆனால் முயற்சி செய்யலாம்

பேரறிஞன் சென்ற வழி தேடிவந்து நின்ற நாட்களினை எண்ணி எண்ணி ஆயுள் தான் போகும்

தூய பணி செய்தவரை தொலைத்து விட்டோம் பாரில் துஞ்ச முதல் தேடிப் பணி புரிந்திடுவோம்.

**ஆத்மா சாந்தியடைய வேண்டும்**

**பெறாமகன்**

**குகதாஸ் ஜனேந்திரன் (இந்திரன்)**

விழிகளால் தேடுகின்றோம்
பெரிய அம்மையா பிரிந்ததேன் எமைவிட்டு
பிஞ்சுகள் நாம் தேடுகின்றோம் கொஞ்சி விளையாட
அச்சம் நீக்கி அறிவுரைகள் கூறி நின்ற
பெரிய தாத்தாவை எப்போது காண்போம்?

அன்பு காட்டி அகிலம் தனிலே
தலைமை பண்பை ஊட்டி வளர்த்து பல
கலைகள் கற்று நாம் பண்பு பெற்றிட
பாதை காட்டிய மேதை இன்றெங்கே

சுற்றம் சூழவே தேடி நிற்கின்றோம்
நித்தம் விழிகளால் உம்மைத்தேடியே
கத்தும் ஒலிகளால் நிறைந்து நிற்குதே
சித்தம் தெளிந்திட நற்செய்தி கிடைக்குமா

பேத்தி-ஜெ.றிக்சிகா

# *To a Loving Father, Grandfather, and Husband, To My Loving Mama,*

It was with great shock and fear that we admitted you to the hospital that bitterly cold evening. Our hearts filled with apprehension when the doctor told us that your condition was life threatening. I still remember the silence that surrounded us after hearing the news. Our fear drowned our thoughts, and made us speechless. No words could precisely describe that emotion.
Soon after, our hearts filled with hope and prayers, it is all we had left. We stayed at your bedside and prayed. We held your hand, and whispered in your ears.
We watched as you simply yawned. We watched as you stretched your arm. We watched you touch your head. We watched you breath. And finally, we watched you leave.
It was then with absolute sorrow that we sent you off to a better place. Once again, our eyes filled with tears, and we prayed...

May you always be remembered
May you always be free
May you always be loved

May you guide us to the right paths
May you forgive our mistakes
May you teach us your ways of simplicity
And your humble personality

May you watch us from above
And share in our life experiences
May you bless us in all our achievements
And uplift us in all our failures
May your everlasting smile remain in our hearts

Thank you for the love, kindness, and knowledge you always shared. Thank you for that genuine smile. It was a blessing to have been a small part of your inspiring life.

***May you rest in peace.***
***Love,***
***Yalini Gunarajan***

**புன்னகை அண்ணனே, பொக்கிசமே! நாதன் அண்ணா**

மாமாவை போலவே மரியாதையை மனதில் இருத்தினேன். மாமாவை உங்களுடன் மிக மகிழ்வாய் கண்டதனாலோ என்னவோ மைத்துனரே நாதன் அண்ணா.

எவ்வளவு தூரம் உதவுவீர்கள் என்று உங்கள் உறவின் வீட்டில் உருத்திரபுரத்தில் அறிந்து கொண்டேன் உங்களை அண்ணா. இங்கு வந்த பின்பும் உங்கள் உயரிய குணங்களை நான் சிந்தனை செய்து கொண்ட பொழுதும் "உதவி தேவைப்படுவோர்க்கு நான் உதவிட வேண்டுமம்மா" என்றீர்கள்.

உறவுக்குள் நீங்கள் ஓர் கிருஸ்ண பரமார்த்தா
உறவுக்குள் யாவரையும் இணைத்திடும் பாலமாய்
உறவுகள் சொல்லித் தந்த அண்ணா.
உறவுக்குள் ஓர் உன்னதமானவரே
உண்மை அன்பின் சாட்சியம் அண்ணா.

நண்பர்களோடு நன்றாய் பேசினீர்
மற்றவர்களுக்கு புன்சிரிப்புத் தந்தீர்
உறவுகளுக்கு உவப்புடன் உதவிநின்றீர்
ஏழைகளுக்கு உவந்து அளித்தீர்
புத்தகத்தினுள் உம்பசி தீரத்தீர் அண்ணா
பொக்கிசமாக காத்திருக்க வேண்டும் என்று கதறிடும்
நாங்கள் யாவரும் இங்கே.

பாரதி கண்ட பண்புகள் யாவும் மனதில் இருத்தி மனிதம் கண்டீர்
ஓரிடமில்லையே உமது சேவை தொடர்ந்து செய்ய
இருப்பினும், நீர் பசுந்தீவு கண்ட பாரதிதானே.

உங்கள் எழுத்தின் சிறப்பைத் சொல்லவும் இல்லை
அதற்கு எம்மிடம் வார்த்தைகள் இல்லை
இறுதியாகவும் திதிவெண்பா தந்தீர்கள் நொடிதன்னில்
எத்தனை சிறப்புக்கள் உங்களிடம் கண்டோம்
எல்லாம் மின்னலாய் மறைந்தது ஏனோ?

அறவா நீயும் ஆடிய கூத்தில்
அறத்தை மறவா மனிதனை எடுத்தாய்
அநீதிதானே எங்களுக்கு இழைத்தாய்
சிறு நோயில் விழுந்திடா மனிதனை இழந்து
எப்படி தாங்கும் உறவுகள் நெஞ்சு

வைத்தியசாலையில் சேர்த்ததன் பின்னால் வருந்தி அழுது கதறி நின்றோம்.
மறுநாள்க் கண்டு சற்று நிம்மதி கொண்டோம்
நிலைத்ததா அந்த நிம்மதி எமக்கு?
பாழாய்ப் போன நாளதனை ஏனோ அளித்தாய் இறைவா எமக்கு

ஆளாளுக்கொரு நேர்த்திகள் வைத்தோம்
இறைவா உன்னிடம் இறைஞ்சிக் கேட்டோம்
கொஞ்சமாவது மிச்சம் வையென்று
ஏனோ எங்களை வஞ்சித்துவிட்டாய்?
வைத்தியம் இங்கு பலனளிக்காது போக யாவரும் பைத்தியம் ஆனோமே.

தம்பிகள் வீட்டிற்கு அருகிலிருந்திட ஆசை கொண்டோம்
தம்பிகள் வந்து உங்கள்முன் நின்ற போதும்
தரிக்காது சென்றதன் காரணம் என்ன?
உங்கள் நண்பன் அலறுவதும் கேட்கவில்லையா அண்ணா?
இறுதியாய் அம்மம்மாவின் நினைவுநாளில் எல்லோரையும் கண்டு சென்றாயே அண்ணா.

மெழுகுவர்த்தியாய் மற்றவர்களுக்குச் சுடர்கொடுத்து
உருகியே நின்றீர்கள் அமைதியாகவே
உம்பணி உதவும் பணிகள் செய்தீர்கள்
என்றும் போல் உங்கள் ஆசிகளை எமக்கு வழங்கும் அண்ணா
உங்கள் புன்னகை சொன்னது ஆயிரம் வார்த்தைகள்
புன்னகை அண்ணனே நாதன் அண்ணா.

நாம் யாவரும் உங்கள் சாந்தி வேண்டி பிரார்த்திப்போம்.
ஓம் சாந்தி சாந்தி சாந்தி

ஆதவன்
சிவகுமாரி மதிவாணன், அன்சிகா

## அன்பான அண்ணா

எங்களுடன் நீங்கள் வாழ்ந்த காலத்தில் எம்மை அரவணைத்து, அன்பு காட்டினீர்கள். ஆனந்தமாய்க் கதைகள் சொல்வதை, ஆவலாய் விளையாடக் கூட்டிச் சென்றதை சின்னவனாய் இருந்தாலும் நான் மறக்கவில்லை. எனது பிள்ளைப் பருவத்தில் முனியப்பர் கோவிலடி முற்றவெளியில் பைசிக்கில் ஓட பழக்கியவர் நீங்கள் தானே அண்ணா "பிள்ளை விழுந்து விடப்போகிறான்" என்று நம் அப்பாச்சி ஆர்ப்பரிப்பார். அவர் சத்தமிடுவதை காதில் வாங்கவே மாட்டீர்கள் அந்தச் சிறுவயதில் நீங்கள் அப்பாச்சிதானே வயதாகிவிட்டது கோபம் வரும் கோவிக்கட்டும் என் பீர்கள் அன்றே உங்கள் சமத்துவம் ஆரம்பமாகி விட்டது.

எமது வீட்டுக்கு கிட்டவுள்ள மணி அண்ணா புத்தக கடையில் பெரிய பெரிய புத்தகங்கள் எடுத்து வந்து இரவிரவாக வாசிப்பீர்கள் "படிக்காமல் கதை புத்தகம் வாசிக்கிறான்" என்பார் நம் அப்பாச்சி அதற்கும் உங்கள் பதிர் ஓர் புன் சிரிப்பு நாதன் அண்ணாவுக்கு கோபமே வராதா என அக்காலத்தில் நான் சிரிப்பேன் நான் உங்களுடன் சேர்ந்து அண்ணா அக்காமாருடன் உங்கள் மைத்துனியின் பிள்ளைகள் மேனன், மோகன் ரஞ்சி, ரவி, ஜீவா, என்போருடன் பின் முத்தத்தில் விளையாடுவோமே விளையாட்டில் பிரச்சினைப்பட்டாலும் அப்பொழுதும் நீங்கள் அமைதிதான் எல்லாவற்றையும் என்னை எண்ணிப்பார்க்கவிட்டு விட்டு நீங்கள் எமை பார்க்க முடியாத தூரம் சென்று விட்டீர்கள் அண்ணா அமைதியான உங்கள் வாழ்வு உங்களுக்கே சொநதம் அண்ணா.

உங்கள் ஆன்ம சாந்திக்கு பிரார்த்திக்கிறேன்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

ரூபன் தம்பி

## அன்பான மூத்த மருமகன்

எனது அன்பான மூத்த மருமகன், நான் கல்விப் பொதுத்தராதர பத்திர பரீட்சை எடுக்கும் வருடத்தில் பிறந்தார். அப்பொழுது, நாங்கள் நெடுந்தீவில் "வேம்படி வளவில்" வாழ்ந்தோம். எல்லோருமே அவரை ஆரவாரத்துடன் அப்போது தூக்கி, அரவணைத்து மகிழ்வோம். எப்போதும் சிரித்தவண்ணம், கலகலப்பாகவே இருப்பார்.

பின்னர், எனது பெரிய அத்தார் யாழ்ப்பாணத்தில் கடையொன்றை வாங்கி, பெரியக்காவின் குடும்பம் யாழ்ப்பாணத்துக்கு இடம் மாறியது. நானும் புனித சம்பத்திரிசியார் கல்லூரியில் அனுமதிபெற்று, அக்காவுடன் நான்கு மாதங்கள் வரை தங்கியிருந்தபோது, நாதனின் பூராயங்களைப் பார்த்து எல்லோரும் சிரித்து மகிழ்வோம்.

கல்லூரி விடுதிக்கு நான் மாறிவிட்ட பின்னர், வார இறுதிகளில் அவரைப் பார்த்துத் திரும்புவேன்.

1958இல், நான் இந்தியாவுக்கு படிப்புக்காகச் சென்றுவிட்டபின்னர், அவரை அடிக்கடி பார்க்கும் சந்தர்ப்பம் இல்லாமல்போனது. அதன் பின்னர் கொழும்பிலும், இங்கிலாந்திலும், அமெரிக்காவிலுமாக என் வாழ்வு அமைந்தது. எனினும், எனது ஒரு கொள்கைபோல, எப்பொழுதுமே எல்லா மருமக்களையும் பற்றி அறிந்துகொள்வேன்.

நான் என்னை முன்னேற்றும்போது, மருமகன் சமுதாயத்துக்காக பலவற்றில் ஈடுபட்டு, பல சிநேகிதரையும் பெற்றார். அவர் ஜெர்மனியில் இருந்த வேளையிலும் அவ்வாறான தொடர்புகளுடனேயே வாழ்ந்தார் என்று அறிந்தேன்.

பெரியக்காவுக்கெனில், படிப்புத்தான் முதல் முக்கியம். முடிந்த அளவு, மருமக்களுக்கு அவர் புத்தி சொல்லி வந்திருப்பார் என்பது எனது நம்பிக்கை.

மருமக்களின் முன்னேற்றத்தில் நான் பெரிதும் பங்குபற்ற முடியவில்லை. நாதனின் போக்கில், அவருக்கு பொதுச் சேவையே முக்கியம் என்பதை அறிந்துகொண்டேன். இலங்கைக்கு இடையிடையே நாம் செல்லும் வேளைகளில், எம்முடன் வந்து தங்கிச் செல்வார்.

அவர் என்னோடு மிகுந்த மரியாதையாகவும் உருக்கமாகவும் கதைப்பார். வெளிநாட்டிலிருந்த எனக்கு அப்போது அது மிகவும் புதுமையாக இருந்தது. ஆனால், ஆறு மாதங்களுக்கு முன்னர் அவரை நாங்கள் சந்தித்தபோது மிகுந்த நம்பிக்கையோடு அவர் பேசினார். கேட்டு மகிழ்ந்தோம்.

இவ்வளவு விரைவில், இப்படி அவர் எங்களைப் பிரிந்துபோவார் என்று யார் நினைத்திருப்பார்கள்?

அவருடைய ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்போம்.

நா. மருதையினார்

**அன்புடன் நாதன் அண்ணாவுக்கு.**

நான் எனது சிறு வயதில் மாமி வீட்டுக்கு வரும் போதெல்லாம் நீங்கள் எமது குடும்பங்களின் முதல்வாரிசாக இருந்ததினால் உங்களை உன்னிப்பாக பார்பதுண்டுண்டு. அப்போதெல்லாம் நீங்கள் மிக முயற்சியுடன் செயற்படுவதை பார்ப்பேன். நானும் அப்படியிருக்க வேண்டும் என்று நினைத்துக்கொள்வேன். அபோது நீங்களும், மாமி மாமாவும் தந்த அன்பை நான் மறவேன். எனது அப்பாவும் உங்களிடம் மிகவும் அன்புடனும் கரிசனையுடனும் இருந்தார். உங்களது குடும்ப பெருமைகளை கூறிக்கொண்டே இருப்பார்.

நீங்கள் சிறு வயதிலேயே அனைவரும் சமமாகவும் சுபீட்சமாகவும் இருக்க வேண்டும் என்ன்று நினைத்து உங்களை சோசிலிச அரசியலில் இனைத்துக்கொண்டீர்கள்.

நான் வளர்ந்தது வேலை பார்க்கும் போது உங்களை கனிவுடன் நினைப்பதுண்டு. நாம் எப்படி இவ்வளவு அன்புடைய உறவினர்களை பிரிந்து இருக்க வேண்டியிருக்கிறதே என்றும், அத்துடன் எத்தனை பேர் உங்களைப்போல் சிறுவயதிலேயே இப்படியொரு அரசியல் சிந்தனையை வளர்க்க முயட்சிப்பார்கள் என்றும். இதுவே நீங்கள் நல்ல இதயத்தை படைத்தவர் என்பதற்கு சான்றாக உள்ளது.

நீங்கள் பின்னர் அக்காவை மணந்து பிள்ளை செல்வங்களை பெற்று உங்களது கடமையினை சரிவர முடித்து எம் எல்லோர்க்கும் பெருமையை தந்துள்ளீர்கள். நாம் எமது சமகால பிரச்சனைகளால் அவதிப்பட்டாலும் நீங்கள் கால ஓட்டத்துடன் சேர்ந்து மாறாமல் எமது தமிழ் சைவ முறையிலேயே வாழ்ந்ததும் மிகவும் பாராட்டப்பட வேண்டிய விடயமாகும்.

நான் வளர்ந்து இளம் பிராயத்தை தொடும்போது உங்களையும், மாமி மாமாவையும் பிரிந்து கால ஓட்டத்துடன் வெளிநாடு போனபின். எமது தொடர்புகள் ஆள் கடலில் உள்ள கப்பலுகட்குள் இருந்தது போல் ஆகியது. இருப்பினும் எமது இனிய சிறிய கால நினைவுகள் இன்னும் எனதும் எனது அம்மா, தம்பிகளினதும், தங்கையினதும் நினைவுகளில் ரீங்காரம் இட்டுக்கொண்டு தான் இருக்கிறது.

அன்புடன் மாமி மனோன்மணி யாதவராயர்

மைத்துனர் சீலன், பத்மன், திரு, ஜெயம், சசி

**அண்ணா ...**

எங்கள் அண்ணா சண்முகநாதன் உதட்டில் புன்சிரிப்பு பார்வையில் நேர்மை பேச்சில் கனிவு கண்ணியம் செயல்ப்பாடுகளில் உண்மை தன்நலம் கருதாத சமூக பொறுப்புணர்வு இதனை விட அண்ணாவிடம் நான் அதிசயத்த குணநலங்கள் எள்ளளவும் குறைவில்லாமல் தன்னிடம் குடிகொள்ள செய்த சிறந்த மனிதர்.

அண்ணாவிடம் கற்றதில் முக்கியமானது அவருடைய வாசிக்கும் நூல்களும் அந்நூல்களை தெரிவுசெய்யும் பாங்கும் அதுமட்டுமன்றி நான் வாசித்த நல்ல நூல்களை மற்றவர்ளோடு பகிர்வதாகட்டும் படித்த நூலில் இருந்த நல்ல கருத்துகளையும் தனக்கு ஏற்றுக்கொள்ள முடியாத கருத்துக்களையும் மிகவும் நாகரீகமான முறையில் தெரிவித்து விமர்சனங்களையும் ஏற்கும் கம்பீரம் இன்னும் பல அண்ணவில் அளவிட முடிய நற்குணங்கள் அணணவின் சமூக பார்வை நான் கற்றுக்கொள்ள விரும்பும் பாடம் சமூக நியாய அநியாயங்களையும் தேவையற்ற பின்நோக்கு சிந்தனைகளையும் தைரியமாக விமர்சித்தாதுமாற்ற கருத்தாக சாத்திய கருத்துக்களை முன்வைத்தல் போன்றவிற்றை கண்டு வியந்திருக்கின்றேன்.

அண்ணா உங்களுடன் பழகிய இனிய நாட்களில் நீங்கள் எமக்கு கற்று தந்த பாடங்கள் வாசித்தல், மட்டும் பல இடியே விழுந்தாலும் இடம் நிரந்தரம் அல்ல மாற்றம் ஒன்றுதான் மாறாது இதுவம் கடந்து போகும் என்பதை அண்ணவின் வரிகள்.

நான் உங்களை அசாதரண மனிதனாக எண்ணிய நேரங்கள் பல உங்கள் கொள்கைகள் எவ்வளவு இன்னல்கள் வந்தபோதும் சற்றும் மாறாமல் கொண்ட குறிக்கோளே முக்கியம் என நீங்கள் வாழ்து காட்டியபோதும் வசதி ஆடம்பர வாழ்கை என பலவாய்ப்புக்கள் உங்களை தேடி வந்தபோதும் தன் கெள்கையில் உறுதி இப்படி பலவற்றை சொல்லிக் கொண்டு போகலாம் நம் உறவாக நீங்கள் காட்டிய அன்பும் துண்ப நேரங்களில் காட்டிய ஆதரவு நியாமான அறிவுரைகள் எம் மனதைவிட்டு நீங்காது நீங்கள் எமக்கு நல்ல சகோதரன் கண்னியமான நன்பண் அன்பான மைத்துனான் நீங்கள் எம்முடன் இல்லை என்பது உமது உருவமே. ஆனால் எமது வாழ்கையில் என்றும் உமது அன்பும் கனிவும் நிறைந்திருக்கும் தேடல் உமது பலம் அத்தேடல் இவ்வுலகை விட்டு விண்னுலகு தேடலாக மாறியதோ அண்ண்ா என்றும் எம்மத்தியில் நீர் வாழ்வீர் என்ற நம்பிக்கை எம்மில் இருந்து நீங்காது. எம் வாழ்வில் உம்மை சந்திக்க வைத்த இயற்கைக்கும் இறைவனுக்கும் நன்றி.

தட்சணா, உபநிசா

**பெரிய பெரியம்மாவின் பெரியண்ணா**

**எங்கள் நாதன் அண்ணா**

பசுந்தீவின் பாவலர்
பாட்டாளி மக்களின்
பண்புத் தோழர் - நம்
பாசத்தின் உறையுள்

சின்னம்மா என்று
சிந்தையுற அழைப்பதுவும் - அம்பலம்
சித்தப்பா என்று
சீர்திருத்த சிந்தனைகள் பேசுவதும் - எங்கள்
சிறுவயதுதனில் சிந்தனையாளன் என்று
சிரசுதனில் போற்றியதும் - எம்மை
செம்மைப் படுத்தும் பாதைகள் ஆயின.

வழித்தோன்றல் என்ற மரபை விலக்கினீர்
மனிதனை மனிதன் விழுங்கும்
மடமையை வெறுத்தீர்
பகுத்தறிவுப் பெரியார் ஆனீர்
பொதுவுடமை கார்ல்மாக்ஸ் ஆனீர்
பண்புகளின் தலைமகன் ஆனீர்
அன்பே சிவமுமானீர்

காலம் தன் கடமைக் கணக்கை
நன்றாகச் செய்கிறது.
காலத்தில் நம் கடமையை எவ்வாறு செய்கிறோம் - கால
மாற்றம் ஒன்றே மாறாதென்பீர்கள் - திடீர்
மாற்றத்தால் துவண்டு நிற்கின்றோம்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி
உங்கள் பிரிவால் வாடும் அம்பலம், மங்களம்,
சின்னம்மா, பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் குடும்பம்

**அன்பான என் மாமா!**

கிட்டத்தட்ட 14,15 மாதங்களே என்னோடு பழகினீர்கள் அன்பான வார்த்தை, அமைதியே உருவான முகம். எனது கையைப் பிடித்துக் கொண்டு கதைக்கும் பாங்கு என்பவற்றை என்னால் மறக்க முடியவில்லை மாமா. இவ்வளவு சீக்கிரமாக ஏன் எம்மை விட்டுப் போனீர்கள்? நாம் செய்த பாவமா உங்களை எடுத்தது.

உங்களுக்கு நிகழ்த்தப்பட்ட இரங்கலுரை கேட்டு அதிர்ந்தேன். இந்த அமைதியான மாமாவுக்குள்ளா இவ்வளவு திறமை இருந்தது என்பதே என் அதிர்வின் காரணம். என் அம்மாவின் மூத்த அண்ணா நீங்கள் பெரியம்மா கலாவிலும் என் அம்மா தேவியிலும் உயிரையே வைத்திருந்தீர்களாம்.

அத்தை, பிள்ளைகள், தம்பிகள், தங்கைகள் எல்லோரையும் விட்டுவிட்டு தனி உலகம் சென்று விட்டீர்கள். என்னால் செய்யக் கூடியது உங்கள் ஆன்மா சாந்தியடைய பிரார்த்திப்பது ஒன்றேதான்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

நிரோ ஜெகநாதன்
அன்புடன் மருமகள்

Periyappa

He was a friend a brother a dad a husband a grandfather and an uncle. you can say a lot about my uncle Mr. Shanmuganathan Sinnathamby but the one word that explains him the most is active. Every other day he would come by my house to visit my grandmother we didn't have a lot of conversations but when we did the words that came out of his mouth were so touching. The words would come into one car and never leave the other Instead of driving places he would walk or take bus. He was so intelligent and read tans and tons of books he would probably go to the library at least once every two weeks.

Even though you have left us with no farewells we will always have you in our hearts fare well till we meet again

**R.I.P Periyappa**
**I Love you**



பொத்தி நித்திலாவின் எண்ணக்கருவில் தாத்தா